REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 ஒக்டோபர் 21 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்
1932 - 2022

வரு. 90 இல. 249 | Friday 21, October, 2022 | 24 பக்கங்கள் | 40/-

அத்தியாவசிய பராமரிப்பு பணிகளுக்காக

## கொழும்பின் சில பகுதிகளில் 14 மணிநேர நீர் தடை



கொழும்பின் சில பகுதிகளில் நாளை சனிக்கிழமை (22) இரவு முதல் 14 மணித்தியாலங்களுக்கு நீர் விநியோகம் தடைப்படும் என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

06

## இலங்கையில் உற்பத்தியாகும் பச்சை நிற அப்பிளின் முதல் அறுவடை



ஜனாதிபதி ரணிலிடம் நேரில் கையளித்தார் விவசாயி

இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டு முதல் முறையாக அறுவடை செய்யப்பட்ட பச்சை நிற ஆப்பிள் பழங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று (20) கையளிக்கப்பட்டன.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று எம்.பி. லக்ஷ்மன் குமார என்ற விவசாயியே இவ்வாறு கையளித்தார். கல்கமுவ, தம்புத்தேகம பிரதேசத்தில் இரண்டு ஏக்கர் காணியில் இந்த Green Apple செய்கையை இவர் மேற்கொண்டுள்ளார்.

இவரிடம் பயிர்ச்செய்கை தொடர்பில் தகவல்களைக் கேட்டறிந்த ஜனாதிபதி, ஆப்பிள் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதை நேரில் வந்து பார்ப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் கூறினார்.

ஆப்பிள் விதைகளை இந்நாட்டுக்கு எடுத்து வந்து பரிசோதனைக்கு

06

## அரசியல்வாதிகளின் தவறுகளுக்கு மக்களும் ஒருவகையில் காரணம்

தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர்



அரசியல்வாதிகள் தவறிழைக்கிறார்கள் என்பதற்காக புதிய அரசியல்வாதிகளை நியமிக்க வேண்டிய அவசியமில்லை என்றும் மாறாக புதிய சிந்தனையுடைய மக்களை உருவாக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர்

06

## பொதுத் தேர்தலை மார்ச்சுக்கு முன் நடத்துவது சாத்தியமில்லை

தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் தெரிவிப்பு



பொதுத் தேர்தலை எதிர்வரும் ஆண்டு மார்ச் மாதத்துக்கு முன்னதாக நடத்துவது அரசியலமைப்புச் சட்டத்தின்படி சாத்தியமில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கேகாலை பிரதேசத்தில் இடம்பெற்ற

06

"பொன்னியின் செல்வன்"

## திரைப்படத்தை பார்த்தார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த



பிரமாண்ட பொருட்செலவில் மிகுந்த எதிர்பார்ப்பிற்கு மத்தியில் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'பொன்னியின் செல்வன் – 1' திரைப்படத்தை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பார்த்தார்.

கொழும்பு, சவோய் திரையரங்கில் தனது பாரியாருடன் இணைந்து நேற்று முன்தினம் இந்த திரைப்படத்தை அவர் பார்த்தார். எழுத்தாளர் கல்கி எழுதிய புகழ்பெற்ற வரலாற்று நாவலை அடிப்படையாகக் கொண்டு

06

நாட்டில் முதலீட்டுக்கு உகந்த சூழலை உருவாக்கி

# பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த அரசு கடும்முயற்சி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

ஹெவ்லொக் சிட்டி மிரேகா டவர் கட்டட தொகுதி திறப்பு விழாவில் ஜனாதிபதி உரை



இலங்கையில் முதலீட்டுக்கு உகந்த சூழலை உருவாக்கி பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த துரித முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஹெவ்லொக் சிட்டி, மிரேகா டவர் வர்த்தக மற்றும் அலுவலக கட்டடத் தொகுதி ((Mireka Tower) திறப்பு விழாவில் நேற்று (20) கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முதலீட்டுக்காக பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக் குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட சட்ட கட்டமைப்புகளை மீண்டும் செயற்படுத்தி தற்போதைய மெதுவான செயற்பாடுகளுக்குப் பதிலாக செயற்திறன்மிக்க சட்ட கட்டமைப்பை அறிமுகப்படுத்த இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதற்காக ஆணைக்குழுவொன்றை தான் நியமித்துள்ளதாகக்

06

புனர்வாழ்வு பணியக சட்டமூல வரைபில்

## அரசியலமைப்புக்கு முரணாக சில உள்ளடக்கங்கள் இனங்காணல்

உயர்நீதிமன்ற வியாக்கியானம் சபாநாயகரால் அறிவிப்பு



புனர்வாழ்வு பணியக சட்டமூல வரைவை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டிருந்த, மனுக்கள் தொடர்பான உயர்நீதிமன்றின் வியாக்கியானம் அறிவிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அதிலுள்ள சில உள்ளடக்கங்கள் அரசியமைப்பின் சில சரத்துகளுக்கு முரணாக இருப்பதால் அவற்றை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை

06

## பாராளுமன்ற ஜனநாயகம், அரசியலமைப்பு பாதுகாப்புக்கு 22ஆவது திருத்தம் அவசியம்

நிறைவேற்ற அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் – நீதியமைச்சர்

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டில் பாராளுமன்ற ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்பு பாதுகாக்கப்பட வேண்டும். அரசியலமைப்பு பாதுகாக்கப்பட்டால் தான் நாட்டு மக்கள் பாதுகாக்கப்படுவர். அதன்படி 22 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று 22 ஆவது திருத்தத்தை சமர்ப்பித்து விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு

06

## நாட்டில் மீண்டும் கொரோனா அபாய நிலை அதிகரிப்பு

இருவர் உயிரிழப்பு :10 பேருக்கு தொற்று



நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றினால் மேலும் 2 பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

60 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய பெண் ஒருவரும் ஆண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவர்களின்

06

## 22ஆவது திருத்தத்திற்கு ஆதரவளிக்க சு.க முடிவு

சபையில் மைத்திரிபால அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



அரசியலமைப்பின் 22ஆவது திருத்தத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவளிக்கும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற 22வது திருத்தம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், 22ஆவது திருத்தத்திற்கு வாக்களிப்பது

06

20 ஐ விட சிறந்த விடயங்கள் உள்ளடக்கம்

## 22 ஆவது திருத்தத்துக்கு நிபந்தனைகளுடன் ஆதரவு

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டின் எதிர்கால நலன்களைக் கருத்திற்கொண்டு நிபந்தனைகளுடன் 22 ஆவது திருத்தத்துக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாரென எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

06

## கோதுமை மாவின் விலை குறைப்பு

மொத்த விலை ரூ. 290 இலிருந்து ரூ. 265 ஆனது



கொழும்பு புறக்கோட்டை சந்தையில், ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் மொத்த விலை 25 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய

06

மட்டக்களப்பில் பாரிய காணி மோசடி

## 2,000 ஏக்கர் அரச காணிகளை விற்பனை செய்த அதிகாரிகள்

நடவடிக்கை எடுக்க சந்திரகாந்தன் MP கோரல்

லோரன்ஸ் செல்வநாயகம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 2000 ஏக்கர் அரச காணிகள் அதிகாரிகளினால் மோசடியான வகையில் விற்கப்பட்டுள்ளதாக சிவனேசதுரை சந்திரகாந்தன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அது தொடர்பான தகவல்கள் தெற்கில் சிங்கள மொழி பத்திரிகைகளில் வெளியாகியுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், அது தொடர்பான விடயங்கள் தமிழ் ஊடகங்களில்

06

## தீபாவளி முற்பணம் ரூ.15,000 வழங்காமையால் எதிர்ப்பு

ஏமாற்றமடைந்த தொழிலாளர்கள் போராட்டம்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)



தீபாவளி முற்பணம் ரூபா 15,000 தருவதாக பெருந்தோட்ட கம்பனிகள் அறிவித்திருந்த போதிலும் அக்கரப்பத்தனை

06

ரூ. 220 கோடிக்கு மேல் வைப்பிலிடப்பட்ட

## கொவிட்-19 சமூக பாதுகாப்பு நிதியம் முடிவுக்கு வருகிறது

ஜனாதிபதி நிதியத்துடன் இணைக்க அமைச்சரவை அனுமதி



'செய்கடமை' கொவிட் 19 – சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தை முடிவுக்குக் கொண்டு வர அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய 'கொவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின்' பேரில் இலங்கை வங்கியில் பேணப்பட்டு வந்த 85737373 என்ற உத்தியோகபூர்வ கணக்கு 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதியின் பின்னர் செயற்படாதென சுகாதார, சமூக பாதுகாப்பு

06

## எரிபொருள் தாங்கியில் தண்ணீர் கலந்திருந்ததா?

பூரண விசாரணை நடத்த கஞ்சன பணிப்பு



எரிபொருள் தாங்கியில் தண்ணீர் கலந்திருந்தமை தொடர்பில் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் முழுமையான விசாரணை நடத்துமாறு எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர அதிகாரிகளை பணித்துள்ளார்.

கொழும்பில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றுக்கு கொண்டுவரப்பட்ட

06

மழையுடனான காலநிலை தொடரும்

## மேல்மாகாண மக்களுக்கு டெங்கு நோய் எச்சரிக்கை




நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக எதிர்காலத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதாக தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

மேல்மாகாணத்திலேயே அதிகளவு டெங்கு நோய் பரவுவதாக அந்த பிரிவின்

06

## பிரிட்டனின் புதிய பிரதமர் லிஸ் டிரஸ் திடீர் இராஜினாமா



பிரிட்டன் பிரதமராக பதவியேற்று 45 நாட்களில் லிஸ் டிரஸ் பதவி விலகியது அந்நாட்டில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரிட்டன் அரசியல் மற்றும் பொருளாதார குழப்பம் நிலவி வருவதையடுத்து, பிரதமர் லிஸ் டிரஸ் நேற்று தனது பதவியை திடீரென இராஜினாமா செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அடுத்தடுத்து அமைச்சர்கள் பதவி விலகியதுடன் நேற்று லிஸ் டிரஸும் இராஜினாமா செய்துள்ளார்.

06

எல்லைதாண்டி வந்து மீன்பிடிப்பு

## காரைநகரில் இந்திய மீனவர் மூவர் கைது

யாழ். விசேட நிருபர்



சட்டவிரோதமான முறையில் எல்லை தாண்டி மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூன்று தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். காரைநகர் கடற்பரப்பில் புதன்கிழமை இரவு மீன் பிடித்துக்கொண்டிருந்த வேளையிலேயே

06

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஒக்டோபர் 21
வெள்ளிக்கிழமை

கிளிநொச்சி மாவட்டம்

# உணவுப் பற்றாக்குறையால் 9971 குடும்பங்கள் 784 கர்ப்பிணிகள், 576 சிறுவர்கள் பாதிப்பு

## மாவட்ட அரச அதிபர் தகவல்



கிளிநொச்சி குறூப் நிருபர்

கிளிநொச்சி மாவட்டத்தில் 9971 குடும்பங்கள் உணவு பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 784 கர்ப்பிணிகளும், 576 ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிராமிய பொருளாதார புத்தெழுச்சி மையங்களை வலுவூட்டும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் இடம்பெற்ற மாவட்ட மட்ட கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது. இதன் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட ரீதியில் உணவு உற்பத்திக்கான பல்வேறு நிகழ்ச்சி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக உணவு பற்றாக்குறை அல்லது பாதுகாப்பற்ற உணவுகள் போன்ற சூழ்நிலைகளை இனங்கண்டு அடையாளப்படுத்தி அவ்விதமான சூழல்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு சம்பந்தப்பட்ட துறையினருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பிரதேச செயலக ரீதியாக பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலகப்பிரிவுகளிலும் 9 ஆயிரத்து 971 குடும்பங்கள் உணவு பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ளன. அதே நேரம் 576 வரையான ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்கள் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை வறுமையின் காரணமாக 784 கர்ப்பிணித் தாய்மார்களும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்வினை வழங்குகின்ற வகையில் மாவட்ட மட்ட குழுவுக்கும் சம்மந்தப்பட்ட கிராமிய குழுவுக்கும் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. இவ்விடயங்களிலிருந்து மக்களை பாதுகாக்க அனைவருக்கும் உணவு வழங்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் அனைத்து துறையினரும் இணைந்து செயற்பட வேண்டும். அதற்கமைய குறிப்பாக வீட்டுத்தோட்டங்களை உருவாக்குதல், உணவு உற்பத்திகளை ஊக்கப்படுத்துதல் உணவு உற்பத்தியாளர்களிடமிருந்து உணவைப்பெற்று பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குதல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் மாவட்ட செயலக அதிகாரிகள்,பிரதேச செயலாளர்கள்,சம்மந்தப்பட்ட துறை சார் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# மன்னார் ஓலைத்தொடுவாயில் கவனயீர்ப்பு போராட்டம்




மன்னார் குறூப் நிருபர்

வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 81 ஆவது நாள் கவனயீர்ப்பு நிகழ்வு நேற்று (20) வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் மன்னார் ஓலைத்தொடுவாய் பகுதியில் இடம்பெற்றது.

100 நாட்கள் செயற்திட்டத்தின் 81 ஆம் நாள் போராட்டத்தில் ஓலைத்தொடுவாய் பகுதியிலுள்ள பெண்கள், ஆண்கள், இளைஞர்கள் மற்றும் சிவில் அமைப்பு பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

'வடக்கு,கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்' ,' நாங்கள் நாட்டை துண்டாடவோ தனியரசோ கேட்கவில்லை'. 'இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம்'. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப்பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும்', '13ஆவது திருத்தச்சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப்பரவலாக்கத்துக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது, 'பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம்' எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை,ஒன்று கூடுவது எங்கள் உரிமை,மத வழிபாடு, எங்கள் சுதந்திரம், எமது மதத்தலங்களின் புனிதத்தை கொச்சைப்படுத்தாதே, 'இந்துமத ஆலயங்களின் இடங்களை திட்டமிட்டு சுவிகரிக்காதே' என பல கோரிக்கைகளை இதன்போது முன்வைத்தனர்.

# நல்லூர் மந்திரி மனை புனரமைப்பு பணிகள் ஆரம்பம்





யாழ்.விசேட நிருபர்

வரலாற்றுத் தொன்மைமிக்க நல்லூர் இராஜதானி காலத்தை நினைவுபடுத்தும் மந்திரிமனையை புனரமைக்கும் பணிகளை நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்.மரவுரிமை மையம் ஆரம்பித்தது.

தமிழர் மரவுரிமைச் சின்னங்களை அதன் தனித்துவம் மாறாமல் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு கையளிக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டதே யாழ்ப்பாண மரவுரிமை மையம்.

அதற்கமைய தொல்பொருள் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியுடனும், அனுமதியுடனும், நன்கொடையாளர்கள் மூலம் யாழ்ப்பாண மரவுரிமை மையத்திற்கு கிடைத்த நிதியில் நல்லூர் இராஜதானி காலத்தை நினைவுபடுத்தும் மந்திரிமனையை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் மந்திரிமனையுடன் சேர்ந்து வளர்ந்துள்ள மரமானது மந்திரிமனையின் நீண்டகால பாதுகாப்பு மற்றும் அதன் உறுதித்தன்மையை சீர்கெடாமல் பாதுகாக்கும் நோக்குடன் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

# யாழில். ஹெரோயினுடன் யுவதி கைது

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் அச்செழு பகுதியில் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 23 வயதான யுவதியொருவர் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

அச்செழுப் பகுதியில் யுவதியொருவர் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுவதாக யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸ் குழுவினர் அப்பெண்ணை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடமிருந்து 200 மில்லி கிராம் ஹெரோயின் போதை பொருளையும் மீட்டனர். கைது செய்யப்பட்ட பெண்ணையும் , அவரிடமிருந்து மீட்கப்பட்ட போதைப்பொருளும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கோப்பாய் பொலிஸாரிடம் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் ஒப்படைத்துள்ளனர்.



பொலிஸாரின் மிலேச்சத்தனமான துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிர்நீத்த பல்கலை மாணவர்களின் 6ஆம் ஆண்டு நினைவேந்தல் நினைவுகள் யாழ்.பல்கலை மாணவர்களால் அனுஷ்டிக்கப்பட்டது. கடந்த 2016 ஆம் ஆண்டு இலங்கை பொலிஸாரின் மிலேச்சத்தனமான துப்பாக்கி சூட்டிற்கு இலக்காகி உயிரிழந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்களாகிய நடராசா கஜன், பவுண்ராஜ் சுலக்சன் ஆகியோர் இதன்போது நினைவு கூரப்பட்டனர். இதன்பொழுது யாழ்.பல்கலையின் பிரதான தூபியில் கஜன் சுலக்சனின் படத்திற்கு மாணவர்களால் ஈகைச்சுடரேற்றப்பட்டதோடு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.
(படம்: பருத்தித்துறை விசேட நிருபர்)

# பொதுஇடங்களில் குப்பைகள் கொட்டினால் அபராதம்

## ஆதாரத்துடன் அறிவிப்பவர்களுக்கு சன்மானம்

யாழ்.விசேட நிருபர்

யாழ்.மாநகர எல்லைக்குள் வீதிகள் மற்றும் பொதுஇடங்களில் குப்பைகளை வீசுகின்றவர்களை புகைப்படம் மற்றும் காணொளி பதிவு ஆதாரத்துடன் மாநகரசபைக்கு அறிவிப்பவர்களுக்கு அக் குற்றத்துக்காக அறவிடப்படுகின்ற தண்டப்பணத்தில் பத்து வீத தொகையை சன்மானமாக வழங்குவதென யாழ். மாநகர சபை தீர்மானித்துள்ளது.

யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் நடைபெற்ற மாநகர சபைக்கூட்டத்திலேயே இத்தீர்மானம் எட்டப்பட்டது. மேலும் யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட குடியிருப்பாளர்களின் வீடுகளுக்கு முன் உள்ள வீதியோரத்தினை அவர்கள் தூய்மையாக பேண வேண்டும். வீதியோரங்கள் பற்றையாக உள்ளமையினால் அதற்குள் குப்பைகளை வீசி விட்டுச் செல்கின்றனர்.

அதற்கு அவ்வீதியிலுள்ள மக்களே பொறுப்பு கூற வேண்டும். அவ்வாறு தூய்மையாக பேணாவிடின் அவர்களிடமிருந்து குற்றப்பணம் அறவிடுவது எனவும் மாநகர முதல்வர் வி. மணிவண்ணனால் முன்வைக்கப்பட்ட தீர்மானம் சபையால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அவ்வாறு குற்றமிழைப்பவர்களிடமிருந்து அறவிடப்படும் குற்றப்பணத்தில் 10 வீதம் ஆதாரம் தருபவர்களுக்கு சன்மானமாக வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது

## அங்கஜன் எம்.பி



சாவகச்சேரி விஷேட நிருபர்

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நீண்டகாலமாக சிறைகளில் வாடிய தமிழ் அரசியல் கைதிகள் 8 பேரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்ய தீர்மானித்திருப்பது உறவுகள் மனதில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார். இதுதொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 30 ஆண்டு கால உள்நாட்டு யுத்தத்தால் நாட்டு மக்கள் அனுபவித்த இன்னல்கள் ஏராளம். அதிலும் குறிப்பாக தமிழ் மக்கள் யுத்தம் மௌனித்து பன்னிரெண்டு வருடங்கள் கடந்தும் நிம்மதியாக வாழ முடியாத ஓர் சூழலில் இருக்கின்றனர். முப்பது ஆண்டு கால யுத்தத்தால் ஏராளம் உறவுகளை பறி கொடுத்தும் பிரிந்தும் வாழ்பவர்கள் தமிழ் உறவுகள். காணாமல் ஆக்கப்பட்டோரை தேடியும் சிறைகளில் வாடுபவர்களை எண்ணியும் எமது உறவுகள் அவர்களின் வாழ்நாளில் பெரும்பகுதியை கழித்து வருகின்றனர். மரணத்தின் போது பிள்ளையின் முகம் காணாது எத்தனையோ தாய், தந்தையர்கள் உயிரை விட்டுள்ளனர். இன்னும் பலர் தமது பிள்ளை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இன்றும் உயிரை கையில் பிடித்து வைத்துள்ளனர்.

இந்நிலையில் ஜனாதிபதி பொதுமன்னிப்பு அடிப்படையில் அரசியல் கைதிகளான வரதராஜன்,ரகுபதி சர்மா,இலங்கேஷ்வரன், நவதீபன், ராகுலன்,காந்தன்,சுதா மற்றும் ஜெபநேசன் ஆகிய எட்டு பேரை விடுவித்திருப்பது காத்திருந்த உறவுகளுக்கு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. நல்லாட்சி காலத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் தாங்களும் இணைந்து பல அரசியல் கைதிகளை விடுதலை செய்திருந்தமை அனைவரும் அறிந்த ஒன்றே. எஞ்சியிருக்கும் அரசியல் கைதிகளையும் சட்டத்தின்ஊடாகவோ அல்லது பொது மன்னிப்பு அடிப்படையிலோ விடுவித்து காத்திருக்கும் உறவுகளின் நம்பிக்கையை நிறைவேற்ற ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முதற்கட்டமாக 8 அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு உறவுகள் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் என மேலும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

# மன்னாரில் அனர்த்தங்கள் தொடர்பில் விசேட கலந்துரையாடல்

மன்னார் குறூப் நிருபர்

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் காலநிலை மற்றும் அபிவிருத்திகளால் ஏற்படும் அனர்த்தங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை மன்னாரில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் விரிவுரையாளர்களாக யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா, யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை விரிவுரையாளர் சங்கரப்பிள்ளை ரவி, யாழ். பல்கலைக்கழக நீர்பாசன பொறியியலாளர் ச.சர்வராஜா,மற்றும் மன்னார் மாவட்டத்திலுள்ள அரச திணைக்கள தலைவர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக திட்டமிடல் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலில் விசேடமாக காலநிலை மாற்றம் தொடர்பாகவும் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் அனர்த்த அபாயக் குறைப்புக்கான அபிவிருத்தி தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.



யாழ்ப்பாணம் வடமராட்சி பருத்தித்துறை கற்கோவளம் பாடசாலையில் ஏற்கனவே இருந்த வகுப்பறையை ஸ்மார்ட் வகுப்பறையாக மாற்றி நேற்றைய தினம் இலங்கை இராணுவத்தின் 551 ஆவது படைப்பிரிவினரால் பாடசாலை சமூகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.
கரவெட்டி. தினகரன் நிருபர்

# யாழ்ப்பாணம் மல்லாகம் பகுதியில் போதைப்பொருளுடன் மூவர் கைது

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் மல்லாகம் பகுதியில் மூன்று இளைஞர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நல்லூர் மற்றும் கொக்குவில் பகுதிகளைச் சேர்ந்த 32 , 23 மற்றும் 25 வயதுகளையுடைய மூவரும் 50 , 60 மற்றும் 65 மில்லி கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஒக்டோபர் 21 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

17முதல் 22 வரை
சுபஹ் - 04.41
ளுஹர் - 11.57
அஸர் - 03.16
மஃரிப் - 05.55
இஷா - 07.05

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஐப்பசி 4
ராகுகாலம் : காலை : 10.30 - 12.00வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை
யோகம்: மரணசித்த யோகம்
திதி: ஏகாதசி

**இராசி பலன்கள்**

மேஷம் - சுகம்
ரிஷபம் - வெற்றி
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - கோபம்
கன்னி - முயற்சி
துலாம் - நன்மை
விருச்சிகம் - நிறைவு
தனுசு - பொறுமை
மகரம் - செலவு
கும்பம் - மறதி
மீனம் - பாராட்டு

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)






மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் சுற்றாடல் அமைச்சகம் இணைந்து செயல்படுத்தும் சுற்றுச்சூழல் முன்னோடி தேசிய திட்டத்துக்கான சிறப்பு முத்திரை வெளியீடு மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய சர்வமத போதனை நூல் வெளியீடும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தலைமையில் நடைபெற்றது. தபால் தலைகளை உருவாக்கிய மாணவர்களுக்கு அமைச்சர் மற்றும் ஏற்பாட்டாளர்களினால் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட், ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, சுற்றாடல் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# தொழில் முனைவோருக்குள்ள தடைகளை நீக்குவதற்கு புதிய கொள்கை கட்டமைப்பு

## 'தேசிய சபை'யின் கொள்கை உருவாக்கம் தொடர்பான உபகுழு பரிந்துரை

### பாடசாலை கல்வியிலிருந்தே தொழில்முனைவு மனப்பான்மையை வளர்க்கும் கல்விக் கொள்கையை தயாரிக்கப் பரிந்துரை

இந்நாட்டிலுள்ள தொழில்முனைவோருக்குத் தற்பொழுது காணப்படும் தடைகளை நீக்கி புதிய கொள்கைக் கட்டமைப்பை உருவாக்க சம்பந்தப்பட்ட சகல நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து இரண்டு வாரங்களுக்குள் ஆரம்பகட்டப் பேச்சுவார்த்தைகளை ஏற்பாடு செய்யுமாறு குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய சபையின் உபகுழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ (19), மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுஷா கோகுலவுக்குப் பணிப்புரை வழங்கினார். தொழில் முனைவோர் இந்நாட்டில் தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பது மிகவும் சிக்கலான செயற்பாடாக மாறியிருப்பதுடன்,

06



# கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் ஜனாதிபதிக்கு பூரண ஒத்துழைப்பு தொடரும்

## தமிழ் அரசியல் கைதிகள் விடுதலைக்கு அமைச்சர் டக்ளஸ் நன்றியும் தெரிவிப்பு



தமிழ் அரசியல் கைதிகளில் ஒரு பகுதியினரை தீபாவளி தினத்தன்று விடுதலை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றமை மகிழ்ச்சியளிப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கட்டம் கட்டமாக அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ ஆகியோருக்கு தமிழ் மக்கள் சார்பில் தனது நன்றியையும் தெரிவித்தார்.

மேலும், "சில மாதங்களுக்கு முன்னர், எதிர்கால ஜனாதிபதி பற்றிய கேள்விகள்

06

# மாணிக்க கங்கையில் முதலைக்கு பெண் பலி

## நீராடிக்கொண்டிருக்கையில் அனர்த்தம்



கதிர்காமம் – செல்லகதிர்காமம் பகுதியிலுள்ள மாணிக்க கங்கையில் குளிக்கச் சென்ற பெண் ஒருவர் முதலை தாக்கி உயிரிழந்துள்ளார். செல்லகதிர்காமம் – கொஹொம்பதிகான பகுதியைச் சேர்ந்த 78 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம்(19) மதியம் மாணிக்க கங்கையில் குளிக்கச் சென்ற அவர் முதலையால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

06

# அமைச்சர் அலி சப்ரி அமெரிக்க இராஜாங்க செயலருடன் சந்திப்பு

வெளிநாட்டமைச்சர் அலி சப்ரி, தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் லூவுடன் அமெரிக்க இலங்கை இருதரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

அமைச்சர் அலி சப்ரி நேற்று முன்தினம் (19) தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் தூதுவர் டொனால்ட் லூவை அமைச்சில் சந்தித்து உரையாடினார்.

கடந்த ஆகஸ்ட் 04ஆம் திகதி கம்போடியாவில் நடைபெற்ற 29ஆவது ஆசியான் பிராந்திய மன்றத்தின் பக்க அம்சமாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அன்டனி பிளிங்கனுடன் நடைபெற்ற சந்திப்பு மற்றும் தற்போதைய பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்காக அண்மைக் காலங்களில் அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட பல உயர்மட்ட

06




# விலைமனுக்களுக்கான அழைப்பு

## வலல்லாவிட்ட பிரதேச சபை

வலல்லாவிட்ட பிரதேச சபைக்குரித்தான பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆதனங்களின் உரிமைகளை 2023-01-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரையில் குத்தகைக்கு வழங்குவதற்காக தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்குரித்தான கேள்விப் படிவக் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையைச் செலுத்தி 2022-11-01ஆம் திகதி முதல் 2022-11-14ஆம் திகதி வரை பி.ப. 3.00 மணி வரையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய முறை மற்றும் அதற்குரித்தான விபரங்களை வலல்லாவிட்ட பிரதேச சபை, மீகஹதென்ன பிரதான அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

அந்த முத்தரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விப்படிவங்களை 2022-11-15ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினமே மு.ப. 10.15 மணிக்கு கேள்விப் படிவங்கள் திறக்கப்படும்.

கேள்விப் படிவங்களை ''தலைவர், வலல்லாவிட்ட பிரதேச சபை, மீகஹதென்ன'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் சபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடலாம்.

இது தொடர்பிலான மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இல. 034-2284024 / 034-2274475
தொலைநகல் இல. 034-2284015
மின்னஞ்சல் முகவரி: wpsmeegahathanna@gmail.com

**அட்டவணை**

| தொ. இல. | விபரங்கள் | ஆகக் குறைந்த வருடாந்த குத்தகை (ரூபா) | மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் (ரூபா) | மீளளிக்கப் படும் கேள்விப் பிணைத் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | ஹொரவல இறங்குதுறை பால ஓடம் | 4860000.00 | 2000.00 | 10,000.00 |
| 02 | இத்தபான திங்கள் வாரச்சந்தை | 594000.00 | 2000.00 | 10,000.00 |
| 03 | மீகஹதென்ன புதன் வாரச்சந்தை | 216000.00 | 2000.00 | 10,000.00 |
| 04 | வலல்லாவிட்ட வியாழன் வாரச்சந்தை | 90000.00 | 2000.00 | 10,000.00 |
| 05 | மீகஹதென்ன அலுவலக இடப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிற்றுண்டிச்சாலை | 120000.00 | 2000.00 | 10,000.00 |

**2022-10-20ஆம் திகதி**
**வலல்லாவிட்ட பிரதேச சபை,**
**தலைமை அலுவலகம்.**

**உதேனி அத்துகோரள,**
**கௌரவ தலைவர்,**
**வலல்லாவிட்ட பிரதேச சபை,**
**மீகஹதென்ன.**



கடற்றொழில் அமைச்சு

இலங்கை தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA)

NAQDA

# ஆர்வத்தினை வெளிப்படுத்தல் (EOI)

## ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து

**இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் (NAQDA) பூரண மதிப்பாய்வின் கீழ் மீன்களுக்கான உணவு உற்பத்தி அலகின் இராஜாங்க தனியார் பங்குடமை முயற்சியாண்மையின் கீழ் மீன்களுக்கான உணவு உற்பத்தி, செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பதற்கான ஆர்வவெளிப்பாடுகளை வெளிப்படுத்தல்.**

இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் (NAQDA) நீர் வளங்கள் மற்றும் நீர் உயிரின வளர்ப்பு கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்காக நிறுவப்பட்டுள்ள இராஜாங்க நிறுவனமாகும்.

நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் (NAQDA), நீர் உயிரின வளர்ப்பு அதிகார சபையில் (NAQDA) நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி நிலையத்திற்காக மீன்களுக்கான உணவுகளை தயாரிப்பதற்காக மீன்கள் உணவுகளுக்கான உற்பத்தி அலகொன்றானது உடவலவயில் மீன் போசாக்கு ஆய்வகம், அபிவிருத்தி மற்றும் பயிற்சி அலகொன்று இதன்போதும் நிறுவப்பட்டுள்ளது.

நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு (NAQDA) உரித்தான நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி நிலையங்களுக்குத் தேவையான மற்றும் தனிப்பட்ட மீன்கள் வளர்ப்பு அலகுகளுக்கு (NAQDA) - (AQDC) தேவையான மீன்களுக்கான உணவினை உற்பத்தி செய்வதற்கு இராஜாங்க தனியார் பங்குடமை முயற்சியாண்மையின் கீழ் மீன்களுக்கான உணவு உற்பத்தி, செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பதற்கு ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து ஐந்து வருடங்களுக்கு ஆர்வவெளிப்பாடுகள் கோரப்படுகின்றது.

இங்கு NAQDA நிறுவனத்தின் கீழ் பின்வரும் வசதிகள் வழங்கப்படும்.

1.புதிதாக நிர்மாணிக்கப்படும் மீன்களுக்கான உணவுகள் உற்பத்தி அலகு மற்றும் கட்டிடம்.
2.மீன்களுக்கான உணவுக்குரிய மூலப்பொருட்களை களஞ்சிப்படுத்துவதற்கான கட்டிடம்.
3.மீன்களுக்கான உணவுகள் உற்பத்தி மற்றும் மீன் உணவினை தயாரிப்பது தொடர்பில் தேவையான தொழில்நுட்பங்களில் உதவிகளை பெற்றுக்கொடுத்தல்

ஆர்வ வெளிப்பாடு (EOI) (a) முயற்சியாண்மையாளர் பற்றிய விபரம் (b) முயற்சியாண்மையாளரின் சட்டரீதியிலான நிலைமை (c) முயற்சியாண்மையாளரின் நிதிசார் ஆற்றலை உறுதிப்படுத்துவதற்கான ஆவணம் (d) இறுதி மூன்று ஆண்டுகளின் கணக்காய்வு நிதியறிக்கை (e) மீன்களுக்கான உணவுகள் உற்பத்தி மற்றும் விநியோகித்தல் பற்றிய முன்னனுபவம் (f) நீர் உயிரின வளர்ப்பு கைத்தொழில் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனமொன்றின் குற்றவாளியாக காணப்படாமை பற்றிய உறுதிமொழி போன்ற காரணிகள் பற்றிய முழு விபரங்கள் அடங்கியிருக்க வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட தரப்பினர்களால் மீன்களுக்கான உணவுகள் அலகினை செயற்படுத்தல் தொடர்பில் முதலீடு செய்தல் மற்றும் வணிக ரீதியாக மீன்களுக்கான உணவுகளை உற்பத்தி செய்து முகாமைத்துவம் செய்தல் அவசியமாகும்.

மேற்குறிப்பிட்ட நிலையத்தை செயற்படுத்துவதற்கு ஆர்வமுள்ள முயற்சியாண்மையாளர்கள் மேற்குறித்த விபரங்கள் அடங்கிய சுய ஆர்வவெளிப்பாட்டினை "தலைவர், அமைச்சக வழங்கல் பிரிவு, இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை, இலக்கம் 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு **2022.11.21**ஆம் திகதி **பி.ப.2.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும். ஆர்வவெளிப்பாட்டுக்கு முந்திய கூட்டமானது **2022.11.11**ஆம் திகதி **மு.ப.10.00** மணிக்கு மீன்கள் போசாக்கு ஆய்வகம், அபிவிருத்தி மற்றும் பயிற்றுவிப்பு அலகு, உடவலவயில் நடாத்தப்படும். அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆர்வவெளிப்பாடு - இராஜாங்க பங்குடமை முயற்சியாண்மையின் கீழ் மீன்களுக்கான உணவுகள் உற்பத்தி, செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பதற்கான ஆர்வவெளிப்பாடு" என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

இச்செயற்றிட்டம் தொடர்பில் முன்வைக்கப்படும் ஆர்வவெளிப்பாடுகள் முறையான மதிப்பாய்வுகளின் பின்னர் பொருத்தமான முயற்சியாண்மையாளருக்கு இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்படும் பணிகளுக்கேற்ப (TOR) செயற்றிட்டத்தை மேற்கொள்வதற்கு தொழில்நுட்ப மற்றும் நிதி முன்மொழிவுகள் கோரப்படும் (RFP). தொழில்நுட்பம் மற்றும் நிதி முன்மொழிவுகளை வெவ்வேறாக மதிபாய்வுக்குட்படுத்திய பின்னர் பொருத்தமான முயற்சியாண்மையாளர் தெரிவு செய்யப்படுவர். மேலதிக விபரங்கள் மீன்கள் போசாக்கு நிபுணர்கள் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்**
இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை
இலக்கம் 41/1, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்த, பத்தரமுல்ல.
தொ.பே: +94 112 78 6577 / பெக்ஸ் +94 112 78 6493
மின்னஞ்சல்: chairman@naqda.gov.lk
2022.10.21

**மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்**
பீ.எம்.வித்தானகே அவர்கள்
மீன்கள் போசாக்கு நிபுணர்
மீன்கள் போசாக்கு ஆய்வகம்,
அபிவிருத்தி மற்றும் பயிற்றுவிப்பு அலகு, உடவலவ
தொ.பே: + 94 714 44 4837 / பெக்ஸ் +94 472 23 3298,
மின்னஞ்சல்: fn@naqda.gov.lk

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 04ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் அவ்வல் பிறை 24

### குறள் தரும் சிந்தனை



உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்

இறையாக வந்து சேரும் பொருளும், சுங்கமாகக் கொள்ளும் பொருளும், தன் பகைவரை வென்று திறமையாகக் கொள்ளும் பொருளும் அரசனுடைய பொருள்களாகும்.

## பொருளாதார நெருக்கடியில் இருந்து விரைவாக மீட்சி பெறுவது அவசியம்

நாலாபுறமும் கடலால் சூழப்பட்டுள்ள வளம் நிறைந்த இந்நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு சில காரணிகள் முக்கிய பங்காற்றியுள்ளன. அக்காரணிகள் தொடர்பிலும் இந் நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் அது தொடர்பில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஷேட அறிக்கை விடுத்து நாட்டு மக்களுக்கு நேற்றுமுன்தினம் எடுத்துக் கூறியுள்ளார்.

இந்நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்கு முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தின் ஓரங்கமாக சர்வதேச நாணயத்தின் கடனுதவியைப் பெற்றுக் கொள்வற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் மற்றும் கலந்துரையாடல்களில் இணக்கப்பாடுகளும் எட்டப்பட்டுள்ளன.

இந்தச் சூழலில் இவ்விஷேட அறிக்கையை விடுத்த ஜனாதிபதி, 2015 இல் இலங்கைக்கு வருகை தந்த சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகள் ஆரம்ப வரவு செலவுத்திட்டத்தில் மிகையிருக்க வேண்டுமென ஆலோசனை வழங்கினர். அதற்கேற்ப அந்த மிகையை 2017, 2018 இல் நாம் காண்பித்தோம். எனினும் 2019 இல் இடம்பெற்ற உயர்த்த ஞாயிறு தாக்குதலால் அது குறைவடைந்தது. எனினும் அதனால் பிரச்சினை ஏற்படவில்லை. ஆரம்ப வரவுசெலவுத்திட்டத்தில் மிகையிருப்பதால் எமது வருவாயை அதிகரிக்க முடியுமென அவர்கள் நம்பினர்.

அச்சமயம் இந்நாட்டின் வரி வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14.5 வீதம் முதல் 15 வீதம் வரை காணப்பட்டது. அதனை 17 18 வீதம் வரை படிப்படியாக அதிகரிக்க முடியும் என அறிவித்திருந்தோம். எனினும் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதமளவில் நாட்டில் வரிகள் வெகுவாகக் குறைக்கப்பட்டன. அதன் விளைவாக அரசின் வருமானம் 8.5 வீதம் வீழச்சி அடைந்ததது' என்று குறிப்பிட்டார்.

அது முற்றிலும் உண்மையானதே. அன்றைய காலப்பகுதியில் நாட்டில் நடைமுறையில் இருந்த பல வரிகளை முற்றாக நீக்கியும் சில வரிகளை சீரமைத்து குறைக்கவும் 2019 இன் இறுதிப்பகுதியில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அது பொருளாதாரத்தில் தாக்கங்கள் ஏற்பட முக்கிய காரணமாகியது. இவ்வரிக்குறைப்பு சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தத்திற்கு முரணானதாக இருந்தது. அதன் விளைவாக இலங்கைக்கு உதவிகளை வழங்க முடியாதென அந்நிதியம் அப்போது அறிவித்தது.

இவ்வாறு பல வரிகளை நீக்கியும் மேலும் சில வரிகளை குறைத்து சீரமைத்ததன் விளைவாகவும் அதே ஆண்டின் இறுதிப்பகுதியாகும் போது சுமார் 600_ 700 பில்லியன் ரூபா வருமானத்தை நாடு இழந்தது. அதனைத் தொடர்ந்து 2020 இல் நாடு கொவிட் 19 பெருந்தொற்றின் தாக்கத்திற்கு உள்ளானது. இவை நாட்டின் பொருளாதார வீழச்சிக்கு முக்கிய பங்களிப்பை நல்கின.

வருமானம் குறைவடைந்ததன் விளைவாக பணத்தை அச்சிடும் நிலைக்கு நாடு தள்ளப்பட்டது. அந்த வகையில் கடந்த இரு வருடங்களிலும் 2300 பில்லியன் ரூபா பணம் அச்சிடப்பட்டுள்ளது. இவ்வாறு பணம் அச்சிடப்பட்டதன் விளைவாக நாட்டின் பணவீக்கம் 70 _ 75 வீதம் வரை அதிகரித்தது. அத்தோடு பணவீக்கத்தை விடவும் உணவு பெறுமதி வீக்கமும் அதிகரித்து காணப்படுகின்றது.

இவை அனைத்தும் கட்டுப்படுத்தப்பட்டு நாட்டில் மீண்டும் இயல்பு நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். அதுவே மக்களின் வேணவாவாக உள்ளது. அதற்கு வருமானம் அவசியம். அவ்வருமானத்தை ஈட்டுவதற்கான மார்க்கங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது நாட்டின் வருமானத்தை அதிகரிப்பதற்காக ஏற்றுமதித்துறைக்கு புதிய வரிகளை அறிமுகப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஆனால் இந்நாட்டின் ஏற்றுமதித்துறை கொவிட் 19 பெருந்தொற்றினைத் தொடர்ந்து பின்னடைவு நிலையில் காணப்படுகின்றது. இந்நிலையில் தனிநபர் வரி குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஆனால் வருமானத்தை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் இந்நாட்டினால் உரிய இலக்கை அடைய முடியாத நிலைமை ஏற்படும். 2026 இக்குள் எமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14.5_ 15 வீதம் வரையில் வரி வருமானமாகத் திரட்டப்பட வேண்டும். இவ்வேலைத்திட்டத்தில் இருந்து ஒதுங்கினால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்கப்பெறுவது சாத்தியமற்றதாகி விடும்.

அதனால்தான் ஜனாதிபதி, 'சர்வதேச நாணய நிதியத்தின் உத்தரவாதம் கிடைக்காமல் போனால் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களதும், உதவி வழங்குவதாகக் கூறும் நாடுகளில் இருந்தும் உதவிகள் கிடைக்காமல் போய்விடும். அவ்வாறான நிலைமை ஏற்படுமாயின் மீண்டும் வரிசையில் காத்திருக்கும் யுகத்திற்கே செல்ல நேரிடும். அது இதைவிடவும் மிகக் கஷ்டமான காலத்தை எதிர்காலத்தில் சந்திக்க வழிவகை செய்யும்' என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆகவே நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி சிரமமான போதிலும், அதிலிருந்து விரைவாகவும் வேகமாகவும் மீட்சி பெறுவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதுவே இன்றைய அவசியத் தேவையாகும். தவறும்பட்சத்தில் இப்போதையதை விடவும் மிக மோசமான நெருக்கடிக்குள் தள்ளப்படுவதை தவிர்க்க முடியாததாகி விடும்.

editor.tkn@lakehouse.lk

# மடவளையில் இனநல்லுறவை வலியுறுத்தி மீலாத் விழா

தேசிய மீலாத் தின வைபவத்தை முன்னிட்டு மடவளை பிரதேசத்தில் மடவளை பஷார் ஜாமிஉல் கைறாத் ஜும்மா பள்ளிவாயல் ஏற்பாட்டில் இனங்களுக்கு இடையில் சமாதானம் மற்றும் சகவாழ்வு என்பவற்றை கட்டி எழுப்பும் நோக்கில் பல்வேறு நிகழ்ச்சிகள் மிக நடைபெற்றன.





மடவளை ஜாமிஉல் கைறாத் ஜும்மா பள்ளிவாயல் பிரதான மண்டபத்தில் பள்ளிவாயல் தலைவர் ஏ.டபிள்யூ. எம் நாஜிம் தலைமையில் அண்மையில் இந்நிகழ்வுகள் மிக விமரிசையாக இடம்பெற்றன. இந்நிகழ்வில் பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கையிலிருந்து சமாதானம் மற்றும் சகவாழ்வுக்கான அடிப்படை அம்சங்கள் தொடர்பான உரை, அநாதைகள் மற்றும் வலதுகுறைந்தோர்களுக்கான நிதி அன்பளிப்புகளை வழங்கி வைத்தல், மரநடுகை, சிங்கள மொழிபெயர்ப்பிலான திருக்குர் ஆன் பிரதிகள் வழங்கல், அகில இலங்கை ஜம் இய்யத்துல் உமாசபையினால் வெளியிடப்பட்டுள்ள சமாதானம் மற்றும் சகவாழ்வு தொடர்பிலான நூல்கள் விநியோகம் என்பன இடம்பெற்றன.

அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா (மடவளைக்கிளை) சபைத்தலைவர், உலமாக்கள், பிறமத முக்கியஸ்தர்கள், பிரதேச செயலர், பிரதேச சபை தவிசாளர், வத்துகாமம் பொலிஸ் பொறுப்பதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி, கல்வி அதிகாரிகள், அதிபர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், வங்கி முகாமையாளர்கள் என பிரேதேசத்தின் முக்கியஸ்தர்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்கள் இவ்வைவத்தில் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

இம்மஸ்ஜித்தின் வரலாற்றல் மிலாதுன் நபி விழா உற்சவத்தினை முன்னிட்டு முதன் முறையாக பிறமத முக்கியஸ்தர்கள், அரச அலுவலக அதிகாரிகள் மற்றும் பிரதேச முக்கியஸ்தர்கள் என்பவர்கள் பள்ளிவாயலுக்கு அழைக்கப்பட்டு இனங்களுக்கு இடையில் சமாதானம் மற்றும் சகவாழ்வு என்ற தலைப்பிலான நிகழ்ச்சியொன்று நடைபெற்றுள்ளமை இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒவ்வொரு சமூகமும் தன் மதம் சார்ந்த கொள்கைகளையும் கோட்பாடுகளையும் சரியாக பின்பற்றி வாழ்வதுடன் பிற மதங்களினது சமூக கலாசார வரலாற்றுப் பின்னணிகளையும் கற்றுக்கொள்ளும் பண்புகளையும் நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று நிகழ்வுக்கு பிரதம பேச்சாளராக பங்கேற்ற ஸம் ஸம் நிறுவனத்தின் கல்விப்பிரிவின் பணிப்பாளர் மௌலவி அம்ஹர் ஹகம் தனதுரையில் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய மௌலவி அம்ஹர் ஹகம் "ஒரு சமூகம் அந்நிய மதங்களையும் அவர்களது கலாசார பாரம்பரிய விடயங்களைப் பற்றியும் கற்றுக் கொள்ளும் பழக்கம் இன்று குறைந்து விட்டது. அவ்வாறு ஒரு சமூகம் அதன் வரலாறுகளையும் சமய விழுமியங்களையும் மறந்தால் அச்சமூகம் அழிவை நோக்கியே பயணிக்கும். அனைத்து மதங்களுக்கும் சமூகங்களுக்கும் ஒரு வரலாற்றுப் பின்னணி உண்டு. அவற்றை அனைத்து சமூகங்களும் ஆவலோடு அறிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.

மேலும் மொழிரீதியான பாடசாலைகளும் இனரீதியான அரசியல் கட்சிகளுமே இந்நாட்டில் சந்தேகங்கள் உருவாகக் காரணமாகின்றன. ஆகவே இவற்றை மறந்து நாம் ஒன்றுபட்டு வாழ வேண்டும். அதனையே அனைத்து மதங்களும் எமக்குக் கூறுகின்றன" எனக் குறிப்பிட்டார்.

**எம்.ஏ.அமீனுல்லா...**

# களுத்துறை அரச ஊழியர்களுக்கு தமிழ்மொழிப் பயிற்சிநெறி

தேசமொன்றாக முன்னோக்கிப் பயணிப்பதில் பல்வேறு மொழிகள் மற்றும் பல்வேறு கலாசாரங்களுக்கு மதிப்பளித்து அவற்றை விளங்கிக் கொள்வதும் மிகவும் முக்கியமான அம்சமாக விளங்குவதாக களுத்துறை மாவட்ட செயலாளர் ஜீ.ஜனக பிரசன்ன குமார தெரிவித்தார்.

இந்த விடயம் எவ்வளவு தூரம் முக்கியமானது என்பதையும் அவர் விளக்கினார்.

களுத்துறை மாவட்டத்தில் தமிழ்மொழி பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்த ஒரு தொகுதி அரச ஊழியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அரசகரும மொழிகள் திணைக்களம் மற்றும் களுத்துறை மாவட்ட செயலகத்தின் ஒன்றிணைந்த ஏற்பாட்டில் இந்த மொழிப்பயிற்சி நெறி இடம்பெற்றது. இதில் களுத்துறை மாவட்ட அரச உத்தியோகத்தர்கள் பயிற்சி பெற்றனர். அரசகரும மொழிகள் திணைக்களத்தின் அரச ஊழியர்களுக்கான பல்வகை மொழிப்பயிற்சி வழங்கல் வேலைத்திட்டத்தின் கீழ் இருநூறு மற்றும் நூற்றைம்பது மணித்தியாலம் தமிழ்மொழி பயிற்சி பூர்த்தி செய்து தகுதி பெற்றவர்களுக்கு அதற்கான சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.



களுத்துறை செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட செயலாளர் தலைமையில் இந்த தமிழ்மொழி பயிற்சிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.மேலதிக மாவட்ட செயலாளர் திலங்கா வெத்தசிங்க, மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் மதுச சங்கல்ப, தமிழ்மொழி ஆசிரிய ஆலோசகர் நிஜாம் ஏ ஜப்பார், பாடநெறி இணைப்பாளர் சந்தயா குமாரி உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**எம்.எஸ்.எம்.முன்தஸிர்...**
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

### ரிட்ஸ்பரி ஜூனியர் தேசிய ஸ்கொஷ் சம்பியன்ஷிப்–2022

# சிறப்பான வீரர், வீராங்கனைகளாக நெவிந்து, சனித்மா சினலி வெற்றி

சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் (CBL) நிறுவனத்தின் புகழ்பெற்ற சொக்லட் வர்த்தக நாமமான ரிட்ஸ்பரி அனுசரணையில் இடம்பெற்ற 33 ஆவது ரிட்ஸ்பரி கனிஷ்ட தேசிய ஸ்கொஷ் சம்பியன்ஷிப் 2022 போட்டிகள் அண்மையில் வெற்றிகரமாக பூர்த்தியடைந்தன.

கொழும்பு SSC ஸ்கொஷ் அரங்கில் இறுதிப் போட்டி இடம்பெற்றதுடன், 9, 11, 13, 15, 17மற்றும் 19 வயதுக்குட்பட்ட பிரிவுகளில் 300 இற்கும் அதிகமான சிறுவர்கள் பங்கேற்றனர்.

தேசிய ஸ்கொஷ் சம்பியன்ஷிப் போட்டிகளுக்கு ரிட்ஸ்பரி வழங்கும் பங்களிப்பு தொடர்பில் CBL ஃபுட்ஸ் இன்டர்நஷனல் சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் நிலுபுல் டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், "கடந்த காலங்களில், இலங்கையில் ஸ்கொஷ் விளையாட்டை தேசிய மட்டத்தில் மேம்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை நாம் புரிந்து கொண்டோம். உள்நாட்டு விளையாட்டு வீரர்கள் சர்வதேச மட்டத்தில் தெரிவாவதில் எமது முயற்சிகளும் பங்களிப்புச் செய்துள்ளன என்பதில் நாம் பெருமை கொள்கின்றோம்" என்றார்.



ஆண்டின் நம்பிக்கையூட்டும் வீராங்கனையான அனுலா வித்தியாலயத்தின் புன்சரா நிருஷி விக்ரமசிங்க மற்றும் ஆண்டின் நம்பிக்கையூட்டும் ஆண் வீரரான புனித சூசையப்பர் கல்லூரியின் மொஹமட் ரில்வான்



ஆண்டின் சிறந்த கனிஷ்ட தேசிய பெண்கள் வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டிருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க கல்லூரியின் சனித்மா சினலி மற்றும் ஆண்டின் சிறந்த கனிஷ்ட தேசிய ஆண்கள் வீரராக தெரிவு செய்யப்பட்டிருந்த டி. எஸ். சேனநாயக்க கல்லூரியின் நெவிந்து லக்மன் ஆகியோர்.



CBL ஃபுட்ஸ் மற்றும் இலங்கை ஸ்கொஷ் ஆகியவற்றின் அதிகாரிகளுடன் வெற்றியாளர்கள்.

டி.எஸ். சேனநாயக்க கல்லூரியின் நெவிந்து லக்மன் மற்றும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயத்தைச் சேர்ந்த சனித்மா சினலி ஆகியோர் 19 வயதுக்குட்பட்ட ஆண் மற்றும் பெண் பிரிவுகளின் சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் இருவரும், ஆண்டின் சிறந்த கனிஷ்ட தேசிய ஆண் மற்றும் பெண் வீர, வீராங்கனையாகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

ஆண்டின் நம்பிக்கைக்குரிய சிறந்த ஆண் வீரராக, மருதானை புனித சூசையப்பர் கல்லூரியின் மொஹமட் ரில்வா மற்றும் பெண் வீராங்கனையாக அனுலா வித்தியாலயத்தின் புன்சரா நிருஷி விக்ரமசிங்க ஆகியோர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இலங்கை ஸ்கொஷ் தலைவர் சுரேன் கொஹோபன்கே கருத்துத் தெரிவிக்கையில் "கடந்த தசாப்த காலப்பகுதிக்கு மேலாக எமது வெற்றியின் பங்காளராக ரிட்ஸ்பரி இணைந்துள்ளமைக்காக நாம் நன்றி தெரிவிக்கின்றோம். இந்தப் பங்காண்மையினூடாக ஸ்கொஷ் விளையாட்டை உயர்ந்த நிலைக்கு கொண்டு வர முடிந்துள்ளது" என்றார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து திறமையான வீரர்கள் தற்போது உருவாகியுள்ளனர். விளையாட்டை மேம்படுத்துவது தொடர்பில் ரிட்ஸ்பரி கொண்டுள்ள அர்ப்பணிப்பின் வெளிப்பாடாக இது அமைந்துள்ளது. மாவட்ட ரீதியில் ஊக்குவிக்கப்படுவதை உறுதி செய்வதுடன், அதிகளவு வீரர்கள் பங்கேற்பதையும் உறுதி செய்கின்றது.

# சாய்ந்தமருது அல்ஜலால் வித்தியாலய ரீச்சர்ஸ்நைட்

சாய்ந்தமருது அல்ஜலால் வித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஜலாலியன் ரீச்சர்ஸ்நைட் அதிபர் எம்ஐ.எம்.சைபுதீன் தலைமையில் விமரிசையாக இடம்பெற்றது. திறந்த வெளியரங்கில் தெம்மாங்கு பாட விழா ஆரம்ப மாகியது.

அதிபர், ஆசிரியர்கள் உட்பட அதிதிகளின் குடும்ப உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டனர்.

பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம் கலந்து கொண்டார்.

சாய்ந்தமருது பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி எம்.ஐ.சம்சுதீன் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம்.எச்.எம். ஜாபீர், திருமதி ஜிஹானா அலீப், கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ், கல்முனை கல்வி மாவட்ட பொறியியலாளர் எம். எம் .ஸாஹீர்,உதவிக் கல்விப் பணிப்பாளர்களான என்.எம்.எம்.மலிக் திருமதி அஸ்மாமலீக், ஆசிரிய ஆலோசகர்களான முகம்மட் ராசீக், மூகம்மட் றபீக், எஸ்.சிராஜூதீன் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் இணைந்து கொண்டனர்.

ஆசிரியர்களின் கலை கலாசார நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

**எஸ்.சிறாஜுதீன்...**
(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

# காவேரி கலாமன்றத்தின் வீட்டுத்தோட்ட ஊக்குவிப்பு



**காவேரிக் கலாமன்றம் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்காக முன்னெடுக்கும் பணி அளப்பரியது. அவ்வமைப்பு வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்கான ஊக்குவிப்பு வேலைத் திட்டத்தின் மூலம் மாதாந்தம் விசேட கொடுப்பனவு வழங்கி வருகின்றது. இதன் மூலம் பெரு எண்ணிக்கையிலான பயனாளிகள் பயன் பெற்று வெற்றியடைந்துள்ளதாக வவுனியா தொழு நோயாளர் சங்கத்தின் தலைவர் கே. ஜீ. எம். அமரசிங்க தினகரனுக்கு வழங்கிய பேட்டி,...**

# பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுதரும் வேலைத்திட்டம்

பேட்டி கண்டவர்
**இக்பால் அலி**

**கே: தொழுநோயாளர் சங்கம் பொருளாதார நெருக்கடியில் எவ்வாறு பொது மக்களுக்கான பங்களிப்பை ஆற்றி வருகிறது?**

ஆம் இவை பற்றிய நிறையக் கூறலாம். அதாவது முதலாவது சின்னச் சின்ன அளவில் செய்த தோட்டங்கள் எல்லாவற்றையும் பெரியளவில் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக வழக்கம் போன்று வழங்கப்படும் சத்துணவுப் பணத்தை அதிகரிக்கச் செய்து அதற்குத் தேவையான உணவு வகைகளை வழங்கி அதிகளவு தோட்டம் செய்பவர்களுக்கு இந்த ஊக்கு விப்பு நிதி உதவி வழங்கப்பட்டது.அதில் நிறைய வீட்டுத் தோட்டங்களில் நிறைய உற்பத்திகள் இடம்பெற்றன. சோயா. குரக்கன், கௌப்பி, பயறு போன்ற தானிய வகைகள் பெருமளவில் செய்கை பண்ணப்பட்டன. இதன் மூலம் பாரியளவில் அறுவடை செய்யப்பட்டது. ஏனென்றால் தோட்டச் செய்கையாளர்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்பு நிதி உதவியைப் பெற்றுக் கொள்வதில் தோட்டச் செய்கையாளர்கள் கூடுதல் கவனம் செலுத்தினார்கள். பொருளாதார நெருக்கடியைக் சமாளிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட இத்திட்டம் வெற்றிகரமான முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. நிறையப் பயனாளிகளும் பொது மக்களும் பயன் அடைந்துள்ளார்கள். குறைந்த விலையில் மரக்கறிகளையும்,தானியங்களையும் பொது மக்கள் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை எங்கள் சங்கம் ஏற்படுத்திக் கொடுத்து வெற்றி கண்டுள்ளது.

அநுராதபுர மாவட்டத்தில் அதிகளவு சிங்கள கிராம மக்கள் இதன் மூலம் நிறையப் பயன் அடைந்துள்ளனர். அதேபோன்று யாழ்ப்பாணம், வவுனியா,மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் உள்ள சங்க அங்கத்தவர்கள் அனைவரும் தங்களது வீடுகளில் வீட்டுத் தோட்ட செய்கையை மிக ஆர்வத்தோடு செய்து வெற்றி கண்டுள்ளார்கள்.

**கே: நீங்கள் வீட்டுத் தோட்டப் புரட்சியை ஒரு புதுமையான முறையில் மேற்கொண்டு வருகிறீர்கள்.எத்தகைய பயிர்ச் செய்கைகளின் மூலம் சாத்தியமான வெற்றி இலக்குகளை அடைந்துள்ளீர்கள் என்று கூறுவீர்களா?**

அநுராபுரம் தலாவ என்ற இடத்தில் நுவன் குமார என்பவர் தன் வீட்டில் தானும் தன் மனைவியும் ஆரம்பத்தில் வெண்டிக்காய், தக்காளி. கத்தரி, மஞ்சள், வாழை போன்றவற்றையே சிறிதளவில் செய்கை பண்ணி வந்தார்கள்.அவர் கடந்த காலங்களில் தன்னுடைய தேவைக்கு ஏற்ப வீட்டுத் தோட்டத்தில் பயிர்ச் செய்கையை மேற்கொண்டிருந்தார். தன் வீட்டுக்குத் தேவையான மரக்கறி வகைகளைச் செய்து கொண்டிருக்கிறார். வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு அதிகரிப்பு வழங்கப்படும் என்று கூறிய தன் பின்பு தன்னுடைய காணியில் பின்பகுதியை சுத்தம் செய்து சோயா மற்றும் நிலக்கடலை போன்றவற்றை நடுகை பண்ணினார். இதன் மூலம் நிறைய அறுவடை கிடைக்கப்பெற்றது. மொத்த வியாபாரிகள் கூட அவரிடம் வந்து அறுவடைகளைப் பெற்றுக் கொண்டதாகவும் இதன் மூலம் அதிக இலாபங்களை அவர் ஈட்டி வருவதாகவும் எம்மால் அறிந்து கொள்ள முடிந்துள்ளது.

இன்றைய பொருளாதார நெருக்கடியான சூழலில் அதற்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய வகையில் வருமானங்களைப் பெற்றுக் கொள்ளவும் அவர்களுக்குத் தேவையான மருந்து வகைகளை வாங்கி சுக ஆரோக்கியத்தோடும் மனமகிழ்ச்சியோடும் வாழ்வதற்கான ஏற்பாடுகளை எங்கள் சங்கம் செய்து கொடுத்து வெற்றி கண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் தமது அன்றாட உணவுத் தேவைக்கு ஏற்ப சத்தான மரக்கறி உணவு வகைகளை உண்டு வருகிறார்கள். அவ்வுணப் பயிர்களில் எந்தவிதமான இரசாயனப் பசளைகளும் பயன்படுத்தப்பட வில்லை. முழுக்க முழுக்க சேதனப் பசளையின் மூலமே இப்பயிர்ச் செய்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. தற்போது இதன் மூலம் பெரும்பான்மையான மக்கள் நல்ல பயனை அடைந்து வருகிறார்கள்.



**கே: இந்த பொருளாதார நெருக்கடியான கால கட்டத்தில் இருந்து மீட்சி பெற வேறு என்ன வகையிலான செயற்திட்டங்கள் மேற்கொண்டு வருகிறீர்கள் என்று கூறுவீர்களா?**

ஆம் 'சுவை அவை' என்ற செயற்திட்டத்தின் மூலம் சிக்கனச் சமையல் என்பது வீட்டுத் தோட்டத்தில் உள்ளவற்றை வைத்து உடன் சமைப்பதாகும். இவ்வேலைத் திட்டத்தை ஒவ்வொரு கிராமம் கிராமாக செய்து விழிப்புணர்வூட்டல் செய்து வருகிறோம்.சங்கத்திலுள்ள ஒருவரின் இல்லத்திற்குச் சென்று அங்குள்ள கீரை வகைகள் எடுத்து சிறியளவில் மாவினைச் சேர்த்து பிட்டு அவித்துச் சாப்பிடுவதாகும்.

வீட்டில் உள்ளவர்கள் மற்றும் சங்கத்தினர்கள் சேர்ந்து குறைந்த செலவில் கூடுலானவர்கள் சேர்ந்து சத்தான சாப்பாட்டை உண்டு மகிழ்ந்து வரும் ஒரு நிகழ்ச்சித் திட்டம் இது. ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று சந்தோசமாகக் களிக்கின்ற நிகழ்வாகவும் அதே வேளையில் பொருளாதார நெருக்கடியான கால கட்டத்தில் சிக்கமான முறையில் சாப்பாடு வழங்கும் முறையாகவும் இவற்றைப் பார்க்கலாம். இந்த இரண்டையும் பிரதானமாகக் கொண்டு செயற்பட்டு வருகிறோம்.

**கே: இந்த தொழு நோயாளர் சங்கம் பற்றியும் அதன் நடவடிக்கைகள் பற்றியும் கூறுவீர்களா?**

இந்தச் சங்கம் 2017 9 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. எங்கள் சங்கத்தில் தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்களே அங்கத்தவர்களாக உள்ளனர். மற்றவர்களுடைய மறுவாழ்வுக்காகவும் தொழு நோயாளர்களை இந்நாட்டில் இருந்து இல்லா தொழிப்பதற்காகவும் செயற்படும் சங்கம் ஆகும்.

குறிப்பாக எனக்கு தொழு நோய் எப்படி வந்தது என்று நன்கு தெரியும். அதே மாதிரி யாராவது இருந்தால் கண்டு பிடித்து குணப்படுத்துவது தான் எங்களுடைய பணியாகும் சில பேர் இந்நோயை மறைத்து ஒழித்துக் கொண்டு இருப்பார்கள். இப்படிப் பட்டவர்களை இனங்கண்டு அந்நோயில் இருந்து பாதுகாப்பதற்கான வேலைத் திட்டங்களையே நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம். இது தான் எங்களுடைய பிரதான வேலைத் திட்டம் ஆகும்.



தொழு நோயாளர் அற்ற நாடாக மாற்றம்பெற வேண்டும் என்ற நோக்கை முன்னிலைப் படுத்தி தொழு நோயாளர்களை ஒருங்கிணைத்து செயற்படும் ஓர் அமைப்பு என்று கூறலாம்.



**கே: இந்த அமைப்பின் செயற்பாடுகள் எப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது பற்றிக் கூறுவீர்களா?**

எங்களுடைய சங்கத்தில் 300 க்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் உள்ளார்கள். குறிப்பாக எல்லா மாவட்டத்தையும் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். எனினும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, அநுராதபுரம் ஆகிய பகுதிகளிலுள்ளவர்கள் அதிகளவு அங்கத்தவர்களாக இருக்கின்றனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தின் சங்கத்தினுடைய தலைவர் முருகமூர்த்தி, மட்டக்களப்பு மாவட்டத்தின் தலைவர் முஹமட், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த தலைவர் முத்துக்குமார், அநுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தலைவர் தினேஸ் சாரங்கா ஆகியோர்களின் தலைமையில் இந்தச் சங்கத்தின் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. ஒரு தலைவரின் கீழ் தலா 20-25 இடைப்பட்டவர்கள் உள்ளனர்.

எங்கள் சங்கத்தில் தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு குழுவாக செயற்படுவார்கள். அவர்களுடைய பகுதியில் யாராவது ஒருவர் மருந்து குடிக்க முடியாமல் இருந்தால் அல்லது உரிய நேரத்திற்கு வைத்தியரைச் சந்தித்து பரிசோதனை செய்து கொள்ள முடியாவிட்டால் பொது சுகாதார பரிசோதகர்களுடன் இணைந்து அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று பார்த்து ஆலோசனை வழங்குவோம். கிராமத்தில் ஒருவருக்கு இத்தொழு நோய் இருந்தால் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு அறிவித்தல் விடுப்போம்.

மாதாந்தம் ஒரு கூட்டம் நடத்துவோம். அதன் போது நோய் குணம் தொடர்பான முன்னேற்றங்கள், மருந்துகள் பயன் அளிக்காமல் இருத்தல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்படும்.

அதேவேளை இந்நோயாளிகளுடைய சின்ன சின்ன அடிப்படை வாழ்வாதார தேவைகள் பற்றிப் பேசப்படும்.

இவர்களுடைய தேவைகளை காவேரிக் கலா மன்றம் நிறைவு செய்து வருகிறது. என்னென்ன தேவைகள் இருக்கிறது என்பது பற்றி ஆராய்ந்து காவேரிக் கலா மன்றத்திடம் கோரிக்கையை முன் வைப்பார்கள். அவர்கள் மூலமாக மனிதாபிமான உதவிகள் இத்தொழு நோயாளர்களுக்கு கணிசமானளவு கிடைக்கின்றன.

காவேரிக் கலா மன்றம் இச்சங்கத்திற்கு எண்ணற்ற மனிதாபிமான உதவிகளைச் செய்து வருவதை நாம் அறிவோம். இச்சங்கத்திலுள்ளவர்ளை நேசித்து சமூக மயப்படுத்தலையும் அவர்களுக்கு உரிய கௌரவத்தையும் அடையாளத்தையும் வழங்குவதில் ஒரு பின்புலமாக இருந்து செயற்படும் அமைப்பாகவும் இதைப் பார்க்கலாம்.

**கே: இவ்வமைப்பின் ஊடாக முன்னெடுக்கப்படும் பணிகள் குறித்து கூறுவீர்களா?**

தொழு நோயாளர் சங்கத்தின் சேவைக்கு சேவகனாக காவேரி கலாமன்றம் தான் இயங்குகிறது. பொதுவாக ஒரு தொழு நோயாளர் குடும்பத்தைச் சேர்ந்தவருக்கு சுத்தமான குடிநீர் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல் வேலைத் திட்டம் நடைபெறுகிறது. இதன் மூலம் பெரு எண்ணிக்கையிலான தொழு நோயாளர்கள் தண்ணீர் வசதியைப் பெற்றுள்ளார்கள் என்று குறிப்பிடலாம்.

அதே போன்று நோயாளிகள் மருந்து குடிக்கும் போது நோயாளர்கள் சத்தான உணவுகள் சாப்பிட வேண்டும். அதற்கான சத்தான உணவு வகைகளை காவேரிக் கலா மன்றம் வழங்கி வருகிறது. ஒரு நோயாளிக்கு மாதாந்தம் சுமார் தலா ரூபா 3000 பெறுமதியான உணவுப் பொதிகள் வீதம் சங்க அங்கத்தவர்கள் அனைவருக்கும் வழங்கி வருகின்றது. இதில் கடலை, பயறு, உழுந்து, அரிசி, முட்டை போன்ற சத்தான உணவுகள் பெற்றுக் கொள்வதற்காக குறித்த பணத் தொகையை வழங்கி வருகின்றது.

அதே போன்று எங்கள் சங்கத்தில் கை, கால்கள் ஊனமுற்றவர்கள் இருக்கிறார்கள். அதாவது எந்தவிதமான வேலைகளுக்கும் செல்ல முடியாமல் மிகவும் பொருளாதார இக்கட்டான நிலைக்கு உட்பட்டவர்கள் இருக்கிறார்கள். இந்நோய் கை கால்களை முடக்கிப் போடும் தன்மை வாய்ந்தது. அப்படி முடக்கப்பட்ட ஆட்கள் இருக்கின்றபடியால் அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளையும் எங்களுடைய சங்கம் மேற்கொண்டு வருகிறது. ஒரு நபருக்கு தலா ரூபாய் 5000 என்ற வகையில் நிதி உதவி வழங்கப்படுகிறது. இதனைக் காவேரிக் கலா மன்றம் தான் செய்து வருகிறது. இவை தவிர அவர்களுக்கு மாதாந்த சத்துணவு, வீட்டுத் தோட்டம் அமைப்பதற்கு தேவையான கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றன.

இத்தகைய வேலைத் திட்டங்களுக்கு காவேரிக் கலா மன்றம் ஒரு பக்க துணையாக இருந்து எங்களுடைய தேவையை நிறைவேற்றி வருகிறது எனக் கூறலாம்.

இவை தவிர நோயாளிகளுடைய ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று நோயினால் ஏற்பட்ட அனுபவங்களை மற்றவர்களுக்குச் சொல்லி ஆற்றுப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்நோயில் ஏனைய குடும்பத்தினர்களும் பாதிக்கப்படக் கூடாது என்ற வகையில் விழிப்புணர்வூட்டல்களைச் செய்து வருகிறோம் என்று கூறலாம்.

இந்நோய் வந்த பிறகு அவர்கள் அடைந்த வெற்றிகள் சாதனைகள் குறித்து அவர்களுக்கிடையே கருத்துப் பரிமாறல்களைச் செய்து இதனை வெளிக்கொணரச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. இந்நோய் பற்றி யாரும் பயப்பட தேவை இல்லை. இந்நோய் வந்தால் வெளியே சொல்லுங்கள் அதற்கான சிகிச்சைகள் உள்ளன. எனவே இதற்குப் பயந்து கொண்டு மறைத்துக் கொண்டு இருக்கத் தேவையில்லை என்கின்ற அறிவுரைகளை அடிக்கடி கூறி அவர்களை சமூக மயப்படுத்தல் வேலைப் பணிகளை இச்சங்கம் தொடர்ந்து சளைக்காமல் செய்து வருகிறது.

இந்த சங்கத்தின் சேவைக்கு உதவியாக காவேரி கலாமன்றம் செயற்பட்டு வருகிறது. தொழு நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குரல் கொடுப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இதன் ஸ்தாபகர் காவேரிக் கலா மன்றத்தின் இயக்குனர் வண. பிதா யோசுவா அடிகளார் ஆவார்.



## 22ஆவது திருத்தத்திற்கு...

அரசாங்கத்தை பலப்படுத்துவதற்காக அல்ல என தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "அரசாங்கத்தை பலப்படுத்தவே நாங்கள் 22ஆவது திருத்தத்திற்கு வாக்களிக்கிறோம் என்று சிலர் கூறலாம். மக்கள் தரப்பில் முற்போக்கான திருத்தம் என்பதாலேயே நாங்கள் திருத்தத்திற்கு வாக்களிக்கிறோம். அரசியலமைப்பு திருத்தங்களை நிறைவேற்றுவதன் மூலம் மாத்திரம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாது.

எனவே, உரம் மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு தொடர்பான பிரச்சினைகளை தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தீபாவளி முற்பணம்...

பெருந்தோட்ட கம்பனிக்கு உட்பட்ட அக்கரப்பத்தனை வேவர்லி, மோனிங்டன், போட்மோர், ஆடலி உள்ளிட்ட தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களுக்கு 5000 ரூபாய் அல்லது பத்தாயிரம் ரூபாய் என்ற அடிப்படையில் முற்பணம் தருவதாக நேற்று அறிவித்ததை அடுத்து இத்தோட்டத்தை சேர்ந்த 150க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தொழிற்சாலைக்கு முன்பாக கவனஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் இரண்டு மணி நேரம் போராட்டத்தில் ஈடுப்பட்டதோடு, மீண்டும் தொழிலுக்கு செல்லாமல் தொழிலாளர்கள் வீடுகளுக்கு திரும்பினர். இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

தாம் முறையாக வேலை செய்ததாகவும், தற்போது எமக்கு வழங்கப்படும் முற்பணம் மாத சம்பளத்தில் அறவிடப்படும். பெருந்தோட்ட கம்பனி தீபாவளி முற்பணமாக 15 ஆயிரம் ரூபாய் தருவதாக கூறியிருந்த போதிலும் இதனை தோட்ட நிர்வாகம் வழங்க முடியாது என கூறுவது எவ்விதத்தில் ஏற்றுக்கொள்ள முடியும்.

இதனாலேயே இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

விலைவாசி அதிகரிப்பு, பொருளாதார பிரச்சனைகள் இருக்கும் போது எவ்வாறு தீபாவளியை கொண்டாட முடியும். எனவே தோட்ட நிர்வாகம் உடனடியாக தீபாவளி முற்பணத்தை முறையாக வழங்க வேண்டும். இல்லாவிட்டால் தாம் ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கப்போம் என தொழிலாளர்கள் நிர்வாகத்திற்கு எச்சரித்துள்ளனர்.

## அரசியலமைப்புக்கு முரணாக...

தேவையென உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளதாக சபாநாயகர் தெரிவித்தார். இதேவேளை, இராணுவத்தால் நடத்தப்படும் "புனர்வாழ்வு" மையங்களில் மக்களை தடுத்து வைப்பதற்கு அதிகாரிகளுக்கு பரந்தளவிலான அதிகாரங்களை வழங்கும் இந்த சட்டமூல வரைவை இலங்கை அரசாங்கம் மீளப் பெற வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் அண்மையில் அறிவித்தது. தடுத்து வைக்கப்படுபவர்கள், துஷ்பிரயோகத்திற்கு ஆளாக நேரிடும் என அக்கண்காணிப்பகம் மேலும் தெரிவித்துள்ளது.

## மேல்மாகாண மக்களுக்கு...

பணிப்பாளர் சுதத் சமரவீர தெரிவித்தார். சமீபத்திய தரவுகளின்படி, இந்த வருடத்தில் இதுவரை 61,391 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் அதிகளவானவர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இது தவிர கண்டி, காலி, யாழ்ப்பாணம், கேகாலை, புத்தளம் மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் இருந்தும் அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

## எரிபொருள் தாங்கியில்...

எரிபொருள்தாங்கியில்சிறிதுதண்ணீர்கலந்திருந்தமை தொடர்பில் தெளிவுபடுத்தி இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. எரிபொருள்நிரப்பு நிலையமொன்றுக்கு நேற்றுமுன்தினம் (19) கொண்டுவரப்பட்ட எரிபொருள் தாங்கியிலேயே இவ்வாறு தண்ணீர் கலக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக முழுமையான விசாரணையை நடத்துமாறு எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, கூட்டுத்தாபன அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொதுத்தேர்தலை மார்ச்சுக்கு...

நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜி.புஞ்சிஹேவா இவ்வாறு தெரிவித்துள்ளார். பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்றால் பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என்றும் எமது அரசியலமைப்பின் பிரகாரம் அடுத்த வருடம் மார்ச் மாதம் வரை பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குகூட கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இல்லையெனில் பெரும்பான்மை வாக்குகளுடன் பாராளுமன்றத்தை கலைக்க கோரிக்கை விடுக்க வேண்டும் என்றும் அந்தக் கோரிக்கையை ஏற்பதா வேண்டாமா என்பது குறித்து ஜனாதிபதியே தீர்மானிக்க முடியுமென்றும் தெரிவித்த அவர், ஜனாதிபதி அதை ஏற்கவில்லை என்றால், எதுவும் செய்ய முடியாது என்றும் எனவே, இந்த கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு எதிர்காலத்தில் பொதுத் தேர்தலை நடத்துவது குறித்து சிந்திக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தலை பழைய வாக்களிப்பு முறையிலேயே நடத்துவதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவது இன்றியமையாதது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 2,000 ஏக்கர் அரச...

வெளிவராமைக்கு காரணம் அங்குள்ள ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் 10 பேர்ச்சர்ஸ் காணிகள் வழங்கப்பட்டு அவர்களின் வாய்கள் அடைக்கப்பட்டுள்ளமையே என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற நீதி அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட 05 திருத்தச் சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்க காலத்தில் கொண்டுவரப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழு மூலமாக சுமார் 9000 ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்பட்டன. அந்த நடவடிக்கைகளில் மோசடிகள் இடம் பெற்றுள்ளன. கடந்த 16 ஆம் திகதி தென் பகுதி சிங்கள பத்திரிகையொன்று மட்டக்களப்பில் அதிகாரிகள் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை கொள்ளையடித்து விற்றுள்ளனர் என்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதனை ஏன் தமிழ் ஊடகங்கள் வெளியிடவில்லை என்று ஆராய்ந்து பார்த்தபோது, அங்குள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளராக பணிபுரிபவர், மாவட்டத்தில் அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் 10 பேர்ச்சர்ஸ் காணியை வழங்கி அவர்களின் வாயை அடைத்துள்ளாரென்பது தெரிய வந்தது.

கொழும்பிலுள்ள தமிழ் தெரியாத சிங்கள ஊடகவியலாளர்களே மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரச்சினைகள் பற்றி எழுதும் நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் ஏறாவூர் பற்று, செங்கலடி பிரதேசத்தில்தான் அதிகளவில் காணிகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. காணி பதிவில் சிக்கல் வந்தால் அந்தக் காணி தனியாருக்கு சொந்தமானதா? அரச காணியா என்று ஆராயும் போது அதனை தனியார் காணி என்று எழுதுவதற்காக பல கோடிக் கணக்கான ரூபாய்களை கொள்ளையடித்துள்ளனர். அந்த வகையில் 2,000 ஏக்கர் வரையிலான காணிகள் மோசடியான வகையில் துண்டு துண்டுகளாக விற்கப்பட்டுள்ளன.

இதில் கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டல் உரிமையாளர்களும் நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகளை கொள்வனவு செய்துள்ளனர் என்ற தகவல் கிடைத்துள்ளது. இதனைக் கண்டு அந்த மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதியாக நான் கவலையடைகின்றேன். தொழில் முயற்சியாளர்கள், ஏழைகளுக்கு சிறிய அரச காணியை பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிக்கல்கள் உள்ள நிலையில் இவற்றையெல்லாம் ஊடகங்கள் கூறினாலும் பாராளுமன்றத்தில் பேசினாலும் தீர்க்கப்படாதுள்ளது.

## காரைநகரில் இந்திய...

கடற்படையினர் அவர்களை கைது செய்துள்ளனர். கைதான மீனவர்களையும் அவர்களின் படகையும் மேலதிக நடவடிக்கைக்காக கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றத்தில் கடற்படையினர் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்தனர்.

## கொழும்பின் சில பகுதிகளில் ...

அத்தியாவசிய பராமரிப்பு பணிகளுக்காக கொழும்பு 2,3,4,5,7,8,9 மற்றும் 10 ஆகிய பகுதிகளில் சனிக்கிழமை இரவு 10.00 மணி முதல் மறுநாள் (23) நண்பகல் 12.00 மணி வரை நீர்விநியோகம் தடைப்படும் என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மேலும் தெரிவித்துள்ளது.

## பொருளாதார ஸ்திரதன்மையை...

குறிப்பிட்ட ஜனாதிபதி, அதன் கீழ் முதலீட்டுச்சபை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் என்பவற்றை இணைக்கும் முதலீட்டு ஊக்குவிப்பு நிறுவனமொன்றை ஸ்தாபிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கையின் மூலம், இலங்கைக்கு புதிய வெளிநாட்டு முதலீடுகள் வர ஆரம்பிக்குமெனவும் இதன் மூலம் கிடைக்கும் அதிக வருமானத்துடன், வெளிநாட்டுக் கடன் பெறும் தீய சுழற்சியிலிருந்து இலங்கை வெளியேற முடியுமென்றும் ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க,

ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார நாடாக நாம் மாற வேண்டும். அதேபோல நாம் எமது வெளிநாட்டு முதலீட்டையும் அதிகரிக்க வேண்டும். தற்போது, வெளிநாட்டு முதலீட்டை அதிகரிக்க வேண்டுமாக இருந்தால், எமது பொருளாதாரத் தொடர்புகளை நாட்டுக்கு வெளியில் தேட வேண்டும். எமது பொருளாதாரத்தை நாட்டுக்குள்ளே தேடிக் கொண்டிருக்க முடியாது. அதனடிப்படையில் பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்பட ஆரம்பித்துள்ளது. எமது கடனை எவ்வாறு மறுசீரமைப்பது என்பது தொடர்பில் பிரதான கடன் வழங்குனரான ஜப்பான்,சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுடன் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மீண்டும் வேகமான பொருளாதார வளர்ச்சியை எவ்வாறு ஏற்படுத்துவது என்பது தொடர்பில் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம். முதலீடு தொடர்பில் பல அரசாங்க முகவர் நிலையங்கள் காணப்படுவது எமக்குள்ள மிகப் பெரிய பிரச்சினையாகும்.

சுற்றலாத்துறை வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே, முதற்பணியாக முதலீட்டுக்கான அதிகாரிகள் உள்ளிட்ட முழுமையான கட்டமைப்பை மீளப் பரிசீலிப்பதற்காக நான் குழுவொன்றை நியமித்தேன்.

இந்த குழுவானது முதலீட்டு ஊக்குவிப்புச் சபை (BOI), ஏற்றுமதி அபிவிருத்தி வங்கி( EDB) மற்றும் இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுதாபனம் (SLECIC) ஆகிய மூன்றையும் ஒரு முதலீட்டு ஊக்குவிப்பு முகவர் அமைப்பாக கொண்டுவருவதற்கான பணிகளை முன்னெடுப்பதுடன் அதற்கான சிபாரிசுகளும் முன்வைக்கப்படுகிறது.

## நாட்டில் மீண்டும் கொரோனா...

மொத்த எண்ணிக்கை 16 ஆயிரத்து 772ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் நேற்று காலை வரையான கடந்த 24 மணித்தியாலங்களில் கொரோனா வைரஸ் தொற்றினால் 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 70 ஆயிரத்து 952ஆக அதிகரித்துள்ளது.

## இலங்கையில் உற்பத்தியாகும்...

உட்படுத்தியதன் பின்னரே பயிர்ச்செய்கையை முன்னெடுத்ததாகவும் இரண்டு ஏக்கரில் அறுவடை கிடைத்திருப்பதாகவும் விவசாயி லக்ஷ்மன் குமார தெரிவித்தார்.

இந்த விளைச்சலை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்துவதற்கு தேவையான விதைகளை உற்பத்தி செய்து, அவற்றை விநியோகிப்பதற்கு முடியுமென்றும் இலங்கையில் எந்தவொரு இடத்திலும் இதற்கான பயிர்ச்செய்கையை முன்னெடுக்கும் வகையிலேயே இந்த விதைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

விவசாயி கையளித்த பச்சை நிற ஆப்பிளை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி அதனை ருசித்துப் பார்ப்பதற்கும் மறக்கவில்லை.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் இராஜாங்க அமைச்சர் சம்பிகா பிரேமதாஸ் மற்றும் பீ.ஜே. அசங்க லயனல் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## திரைப்படத்தை பார்த்தார் ...

இயக்குநர் மணிரத்னம் இயக்கியுள்ள படம் பொன்னியின் செல்வன். இதில் விக்ரம், கார்த்தி, ஜெயம் ரவி, விக்ரம் பிரபு, சரத் குமார், பிரபு, ஜெயராம், ரஹ்மான், ஐஸ்வர்யா ராய், த்ரிஷா, ஐஸ்வர்யா லக்ஷ்மி, அஸ்வின், கிஷோர் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

## கோதுமை மாவின்...

பொருட்கள் இறக்குமதியாளர் சங்கம் இதனை அறிவித்துள்ளது.

இதன்படி, 290 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் மொத்த விலை 265 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

## பிரிட்டனின் புதிய பிரதமர்...

பதவியேற்ற 45 நாட்களில் அவர் பதவி விலகியது பிரிட்டனின் அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

## மாணிக்க கங்கையில்... (03ஆம் பக்கத் தொடர்)

கடும் பிரயத்தனத்திற்கு பின்னர் சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக தெபரவெவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் கதிர்காமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அமைச்சர் அலி சப்ரி... (03ஆம் பக்கத் தொடர்)

விஜயங்கள் குறித்து குறிப்பிட்ட வெளிநாட்டமைச்சர், அந்தச் சவால்களை முறியடிப்பதற்காக அமெரிக்கா தொடர்ந்தும் நல்கி வரும் ஆதரவை வரவேற்றார். அண்மைய முன்னேற்றங்கள் மற்றும் சர்வதேச நாணய நிதிய கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகள் உள்ளடங்கலாக, வெளிநாட்டமைச்சர் அலி சப்ரி மற்றும் தூதுவர் லு ஆகியோர் அமெரிக்க இலங்கை இருதரப்பு உறவுகளின் பன்முக அம்சங்கள் குறித்தும் கலந்துரையாடினர்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மற்றும் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் சிரேஷ்ட அதிகாரிகளும் தூதுவர் லூவுடன் இணைந்திருந்தனர். இந்த சந்திப்பில் வெளிநாட்டமைச்சருடன் வெளியுறவுச் செயலாளர் அருணி விஜேவர்த்தன மற்றும் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

தூதுவர் லு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும், பாதுகாப்புச் செயலாளர் (ஓய்வுபெற்ற) ஜெனரல் கமல் குணரத்னவையும் சந்தித்தார்.

## அரசியல்வாதிகளின் தவறுகளுக்கு...

மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அரசியல்வாதிகள் இழைக்கும் தவறுகளுக்கு மக்களும் பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மாணவர் பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நான் அறிந்த காலத்திலிருந்து, நாட்டிலிருக்கும் அரசியல் முறை தவறு. அரசியல்வாதிகள் தவறானவர்கள், வாக்குறுதிகளை நிறைவேற்றும் விடயத்தில் தவறிழைக்கிறார்கள் என ஒவ்வொரு தரப்பினரும் தொடர்ந்து வஞ்சித்து வருகிறார்கள்.

ஆனால், தேர்தலினூடாக மக்களே அந்த அரசியல்வாதிகளை தெரிவுசெய்கிறார்கள். நாட்டிலுள்ள அரசியல்வாதிகளிடமோ அல்லது நிர்வாகமுறையிலோ ஜனநாயக முறை இல்லை அல்லது நாட்டின் அபிவிருத்திப் பணிகள் இடம்பெறவில்லை என்றால் அதற்கு மக்களும் பொறுப்புக் கூற வேண்டும்.

வாக்கெடுப்பு நிலையங்களுக்கு நுழைதல், தாக்குதல் மேற்கொள்ளுதல், வாக்கு மோசடிகள் இடம்பெற்ற யுகமொன்றும் எமது நாட்டில் இருந்தது. அவ்வாறான காலப்பகுதியிருந்தே நாங்கள் வந்தோம்.

வாக்களிக்கும் உரிமையின் பெறுமதி மற்றும் வாக்காளர் பட்டியலில் பெயரிடுவதன் பெறுமதி போன்றவற்றை மக்கள் அறிந்திருக்காததால், இதுதொடர்பில் மக்களுக்கு கற்றுக்கொடுத்து அவர்களின் நிலப்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய நிலைப்பாடும் இருந்தது.

இருந்தபோதும், நாட்டிலுள்ள அரசியல்வாதிகள் தவறிழைக்கிறார்கள் என்றால் புதிய அரசியல்வாதிகளை உருவாக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை பின்னரே புரிந்துகொண்டோம். அரசியல்வாதிகள் தவறிழைக்கிறார்கள் என்றால் அதற்கு மாற்றீடாக புதிய மக்கள் உருவாக வேண்டும்.

இது எனது கருத்து அல்ல. நீண்ட நாட்களுக்கு முன்னர் பேர்டல் பிரிஸ் என்ற அறிஞரே இந்த கருத்தை முன்வைத்திருந்தார்.

எனவே, நாம் புதிய நிலைப்பாடுகளை கொண்ட புதிய மக்களை உருவாக்க வேண்டும். அவ்வாறான புதிய மக்கள் பாடசாலைகளிலும், உயர் கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்களிலுமே இருக்கிறார்கள். எனவே, இந்த தரப்பினரிடம் புதிய சிந்தனைகள் உருவாக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

## கொவிட் -19 சமூக...

நிதியத்தின் செயலாளர் கலாநிதி தாரக்க லியனபத்திரன தெரிவித்தார். எனவே அதில் பணம் வைப்பிலிட வேண்டாமென்றும் இந்தக் கணக்கில் வைப்பிலிடுவதற்காக இனிமேலும் பணமோ, காசோலையோ அனுப்ப வேண்டாமென்றும் நன்கொடையாளர்களிடம் கோரப்பட்டுள்ளது. கொவிட் 19 தொற்றின்போது, நாட்டில் முன்னெடுக்கப்பட்ட சுகாதார பாதுகாப்புப் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக நன்கொடையாளர்கள் அளித்த ஒத்துழைப்புக்கு சுகாதார சமூக பாதுகாப்பு நிதியத்தின் செயலாளர் நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

2022 ஒக்டோபர் 18ஆம் திகதி கணக்கு மிகுதியின் பிரகாரம் கொவிட்19 நிதியில் இருபத்தி ஒரு கோடியே அறுபத்து எட்டு இலட்சத்து எழுபத்தி ஏழாயிரத்து நானூற்று முப்பத்தொரு ரூபா ( 21,68,77,431.05) எஞ்சியுள்ளது. இதனை ஜனாதிபதி நிதியில் வைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மக்களுக்கு அறுவை சிகிச்சை மற்றும் மருத்துவ உதவிகளை வழங்குவதற்காக அந்த நிதி பயன்படுத்தப்படும்.

## 22 ஆவது திருத்தத்துக்கு- சஜித்...

பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 22ஆம் திருத்தம் நாம் முன்வைத்த கொள்கையல்ல என்பதைச் சுட்டிக்காட்டிய அவர்,எனினும் நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு நிபந்தனைகளுடன் அதற்கு ஆதரவளிக்க தயாரென்றும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறெனினும் செயற்குழுவின் போது சூட்சுமமாக மாற்றங்களை கொண்டுவர முற்பட்டால் அதற்கு ஆதரவளிப்பதை தவிர்த்துக் கொள்வோமென்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று 22ஆவது திருத்தம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அதன் கூட்டணிகளின் நிலைப்பாட்டை குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## கொடுத்த வாக்குறுதிகளை... (03ஆம் பக்கத் தொடர்)

நாட்டில் தோன்றி, பலரும் தடுமாறிக் கொண்டிருந்த போது, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நாட்டை வழிநடத்தப் பொருத்தமானவர் என்பதை நாம் திட்டவட்டமாக தெரிவித்திருந்தோம்.

அத்துடன் அவரை நாட்டின் ஜனாதிபதியாக மாற்றுவதற்காக வெளிப்படையாக பல்வேறு செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருந்தோம். அன்றைய நாட்களில் எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவற்றுள் ஒன்றான அரசியல் கைதிகள் தொடர்பாகவும் சாதகமாக பரிசீலிக்கப்படும் என்று உறுதியளித்திருந்தார்.

அந்த வாக்குறுதியை தற்போது கட்டம் கட்டமாக நிறைவேற்றி வருகின்ற ஜனாதிபதி, தமிழ் மக்களின் அபிலாசைகள் தொடர்பான ஏனைய விடயங்களிலும் ஆரோக்கியமான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும்" என்றும் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியின் ஆரோக்கியமான செயற்பாடுகளுக்கு தொடர்ந்தும் பூரண ஒத்துழைப்பு வழங்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

## பாராளுமன்ற ஜனநாயகம்,...

தெரிவித்தார். பெரும்பான்மையான மக்களின் வேண்டுகோளுக்கிணங்கவே 22 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளதாக சபையில் சுட்டிக்காட்டிய அமைச்சர், மக்கள் எதிர்பார்ப்புக்கு மதிப்பளிப்பவர்கள் யார்? அதனை காலால் எட்டி உதைப்பவர்கள் யார்? என்பதை மக்கள் இத்தருணத்தில் மிக அவதானத்துடன் எதிர்பார்ப்பதாகவும் நீதி அமைச்சர் தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்:

22 ஆவது திருத்தம் தொடர்பில் பலரும் பல்வேறு விமர்சனங்களையும் கருத்துக்களையும் முன் வைப்பதற்கு அவர்களுக்கு உரிமை உள்ளது. எனினும் மக்கள் நலன் தொடர்பில் மனசாட்சியுடன் செயல்பட்டு மக்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவது மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பாக வேண்டும்.

அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் கடந்த 2015 ஆம் ஆண்டு தாம் இருந்த நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்போதும் உள்ளார். நிறைவேற்று ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் முழுமையாக வேண்டுமென அவர் நினைக்கவில்லை. அவரது ஒத்துழைப்பு மற்றும் ஆசீர்வாதத்துடனேயே இந்த அரசியலமைப்பு திருத்தம் கொண்டுவரப்படுகிறது. அந்த வகையில் அதனை நிறைவேற்றுவதற்கு நாம் பிளவுபட்டு செயற்படாமல் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும்.

நாம் வரலாறுகளை மறந்து விடக்கூடாது அதனூடாக பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

22 ஆவது திருத்தம் ஒரு கட்சியை பாதுகாக்கவோ அல்லது ஒரு குழுவை பலப்படுத்துவதற்காகவோ கொண்டுவரப்பட்டதல்ல. இது மக்களுக்காக பெரும் பொறுப்புடன் கொண்டு வரப்பட்டுள்ளது.

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து தனியே தலை தூக்க முடியாது. எமக்கு சர்வதேச ஒத்துழைப்பு மிகவும் அவசியமாக உள்ளது. அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகிறது. இதுவரை 17 முறை சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றுள்ளோம். எனினும் எமக்கான பிரச்சினைகள் முழுமையாக தீரவில்லை.

எமது உற்பத்தி பொருட்கள் ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்காவுக்குமே அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதேவேளை, ஜீ.எஸ்.பி பிளஸ் சலுகை எமக்கு மிகவும் முக்கியமானது. அவற்றை இல்லாதொழிக்கும் வகையில் நாம் செயற்படக்கூடாது. அது தொடர்பில் நாம் மிக கவனமாக செயல்பட வேண்டியுள்ளது.

இந்த திருத்தத்தின் மூலம் நிறைவேற்று ஜனாதிபதியின் சில அதிகாரங்கள் பாராளுமன்றத்துக்கும் சபாநாயகருக்கும் வழங்கப்படுகிறது. நீதிமன்றம் மற்றும் அரச சேவை சுயாதீனமாக்கப்படுகிறது.

கடந்த காலங்களைப் போல் அல்லாது மத்திய வங்கி ஆளுநர்கள் அதற்கு மிக பொருத்தமானவர்களாக அவர்கள் பொருளாதார நிபுணர்களாக இருக்க வேண்டும். அவ்வாறானவர்களே அதற்கு நியமிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் இதில் திருத்தம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்கள் அரசியலமைப்பு பேரவை மூலமே நியமிக்கப்பட வேண்டும். அரச துறையில் நிலவும் மோசடிகள் களையப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் போன்ற திருத்தங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இருபதாவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவாறு இரண்டரை வருடத்தில் பாராளுமன்றத்தை கலைக்க முடியும் என்றும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஜனாதிபதி அதை மேற்கொள்ள முடியும் என்பதற்கு பதிலாக மூன்றில் இரண்டு இன்றி பெரும்பான்மை இருந்தால் போதும் என்பது தொடர்பிலும் விடயங்கள் இந்த திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி மூலமாகவே நாட்டின் இறைமை நிர்ணயிக்கப்படுகிறது. நிறைவேற்று அதிகாரத்துக்கு அந்தளவு பலம் உள்ளது. செனட் சபை காலத்திலேயே இனங்களுக்கிடையில் சிறந்த நல்லிணக்கமும் சிறுபான்மை மக்களுக்கான பாதுகாப்பும் காணப்பட்டது.

அந்த வகையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து 22 ஆவது திருத்தத்தை தயாரிப்பதற்கு என்னிடம் கேட்டுக் கொண்டனர்.

மக்களின் சுதந்திரம் மற்றும் உரிமை அரசியலமைப்பின் மூலமே உறுதிப்படுத்தப்படுகின்றது. அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியே இந்த சட்டம் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்ட மூலம் நாட்டின் புதிய கலாசாரத்துக்கு வித்திடுவதுடன் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் அரச நிர்வாகத்தை இதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியுமென்ற நம்பிக்கை எமக்குள்ளதென்றார்.

## தொழில் முனைவோருக்குள்ள... (03ஆம் பக்கத் தொடர்)

அபிவிருத்தியடைந்த நாடுகளைப் போன்று இச்செயற்பாடுகளை இலகுவாக்கும் வகையில் கொள்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென்றும் உபகுழு சுட்டிக்காட்டியது. பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகங்கள், சம்பந்தப்பட்ட நிறுவனங்களை ஒருங்கிணைத்து இந்த செயற்பாட்டை இலகுவான முறையாகக் கொண்டு வருவதற்கு சட்டரீதியான மற்றும் கொள்கை ரீதியான மாற்றங்களை குழுவின் அடுத்த கூட்டத்தில் கலந்துரையாடி தீர்மானிப்பதற்கும் உபகுழு இணங்கியது.

தொழில்முனைவு மற்றும் முதலீடுகளைப் பலப்படுத்துவதற்கான தேசிய கொள்கைகள் குறித்துக் கலந்துரையாடுவதற்கு மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் மற்றும் சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய சபையின் உப குழுவின் முன்னிலையில் நேற்று (19) அழைக்கப்பட்ட போதே இந்தப் பணிப்புரை வழங்கப்பட்டது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புக்கமைய இந்நாட்டில் கல்வி, வேலைவாய்ப்பு அல்லது உரிய பயிற்சி இன்றிக் காணப்படும் இளைஞர்களின் தொகை ( Not in Employment, Education, Training / NEET ) ஏறத்தாழ 8 இலட்சம் என்றும், தொழில்ரீதியான நோக்கங்கள் இன்றியுள்ள அவர்களுக்குத் தொழில்வாய்ப்புக்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

# மகாவலி கங்கையில் இழுத்து செல்லப்பட்ட இரு மாணவர்கள்;

## ஒருவர் காப்பாற்றப்பட்டார்

*அக்குறணை குறூப் நிருபர்*

கண்டி, கன்னொருவ பிரதேசத்தில் பாடசாலை மாணவர்கள் இருவர் மகாவலி கங்கையில் இழுத்துச் செல்லப்பட்டு ஒருவர் காப்பாற்றப்பட்டுள்ளார்.

கண்டி, வராதென்ன என்ற இடத்தில் பாடசாலை மாணவர்கள் குழு ஒன்று களியாட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளையில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்டி பிரதேசத்திலுள்ள பிரபல பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர் குழு ஒன்றே அங்கு கூடி ஆடல் பாடல்களில் ஈடுபட்ட வேளையில் இவ்விபரீதம் இடம்பெற்றுள்ளது.

அங்கு இருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டபோதும் ஒருவர் உயிர் பாதுகாப்பு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார். மகாவலி ஆற்றுக்கு மத்தியில் ஒரு பாறையில் தரித்து நின்ற போது பொலிஸாரால் மீட்கப்பட்டதாகத் தெரியவருகிறது. மற்றைய மாணவன் பற்றிய தகவல்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை. கட்டுகஸ்தோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவருக்கு

# இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் செந்தில் தொண்டமான் வாழ்த்து



இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவிக்கு நடந்த தேர்தலில் மூத்த அரசியல் தலைவரான மல்லிகார்ஜுன கார்கே தேர்வு செய்யப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது.அரசியலில் நீண்ட அனுபவமுள்ளவராக கருதப்படும் மல்லிகார்ஜின கார்கேவின் அறிவாற்றலும் அரசியல் சாதுர்யமும் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்கு மேன்மெலும் வலு சேர்க்கும்.

மலையக மக்களின் வளர்ச்சிக்கு காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் பல்வேறு உதவிகள் மற்றும் திட்டங்கள் வழங்கப்பட்டது. இலங்கை தமிழ் மக்களின் மேல் என்றுமே அன்பும் பரிவும் கொண்டிருக்கும் அகில இந்திய காங்கிரஸ் கட்சிக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே பல ஆண்டுகளாக நல்ல உறவு நீடித்து வருகிறது. இனி வரும் காலங்களில் தற்போது தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கும் மல்லிகார்ஜுன கார்கே அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் அகில இந்திய காங்கிரஸ் கட்சி பல்வேறு சிறப்புகளை பெற மனதார வாழ்த்துகிறேன் என்று தான் வெளியிடுள்ள வாழ்த்துச் செய்தியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

# தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள்



அண்மையில் நம்மை விட்டு மறைந்த பிரபல நடிகர் தர்சன் தர்மராஜ் அவர்களின் நினைவஞ்சலியுடன் சிரேஷ்ட கலைஞர்களை கௌரவிக்கும் முகமாகவும் மிக நீண்ட நாட்களுக்குப் பின் இதமான இடைக்கால இருபத்தைந்து முத்தான பாடல்களின் கோர்வையில் கவிக்கமல் , பாசில், ரஜினி இணைந்து வழங்கும் "அக்ஷரா" "வீனஸ்" இசைக்குழுவினரின் இதமான இசையில் "தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள் " அதிதிகளின் இன்னிசை இரவு. *On Stage Live Concert* எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு கொழும்பு 13 கதிரேசன் வீதியில் அமைந்துள்ள குளிரூட்டப்பட்ட ஸ்ரீ கதிரேசன் மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்விற்கு வத்தளை மாபோலை நகரசபை உறுப்பினர் எஸ் சசிகுமார் தலைமை வகிக்க, கொழும்பு பிரதிமேயரின் பிரத்தியேக செயலாளர் மொஹமட் ஹமீட் முன்னிலை அதிதியாகவும் இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் பிரதம அதிதியாகவும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

கௌரவ அதிதியாக தினகரன் பத்திரிகை பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் கலந்து கொள்ளும் இந்த இசைநிகழ்வில் சிறப்பதிகளாக சமூக சேவையாளர் தேசமான்ய டாக்டர் ஐ வை எம் ஹனீப், முனைவர் சதீஸ்குமார்,தொழிலதிபர் இராமசாமி சதானந்தன், தேசமான்ய பிச்சைக்கிருஷ்ணா, கலைஞர் ஜோசப் பெர்ணான்டோ, சமூக சேவையாளர் உசைன் போல்ட், கிரிக்கட் பயிற்சிவிப்பாளர் ஜே எம் எம் ரிஸ்வான்,சமூக சேவகி முஸ்தபா ஷரீனா, சமூக சேவையாளர் மொஹமட் நிஜாம், நகர சபை உறுப்பினர் எம் பி சுதர்சன்,சமூக சேவையாளர் சமன்குமார்,எஸ் ஐ ஏ ஆர் ஜீனா, இம்ரான் நெய்னார் கலந்து கொள்கிறார்கள்.

விஷேட அதிதிகளாக கலைஞர் ஏ ரவீந்திரன், திருமதி கௌசல்யாதேவி கோவிந்தபிள்ளை, குருசாமி எஸ் யுவராஜா, கலைஞர் சண்மு, ஓவியநாதன், ஜனாப் அஸீஸ் லக்ஹானா, தங்கவேல் யோகராஜன், கவிஞர் தனபாலன், அதிபர் ஹார்க்கோட் மொஹமட் கியாஸ், எஸ் ஆனந்தா கலந்து கொள்கிறார்கள்.

கலை அதிதிகளாக கலைஞர் ராதாமேத்தா,கலைநிலா உவைஸ் செரிப், இசையமைப்பாளர் பசால் ஜின்னாஹ், கலாபூசணம் மொஹமட் அலி, இசையமைப்பாளர் எம் ரி தவராசா, பாடகர் இசையமைப்பாளர் முபாறக் இல்யாஸ், சிரேஷ்ட ஊடகவியலாளர் கே ஈஸ்வரலிங்கம், கவிஞர் ஈழகணேஸ், கலந்து கொள்ள பிரபல சிரேஷ்ட அறிவிப்பாளர் எஸ் சித்தார்த்தராஜா தொகுத்து வழங்குகிறார்.

## வலப்பனை பிரதேச மக்களுக்கு உலக

# உணவுத் திட்டத்தினால் உலர் உணவு பொதிகள்

உலக உணவுத் திட்டத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளின் படி நுவரெலியா மாவட்டம் வலப்பனை பிரதேசங்களில் குறைத்த வருமானம் பெறும் குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 4,000 குடும்பங்களுக்கு உலக உணவு திட்ட அமைப்பின் ஊடாக அத்தியாவசிய உலர் உணவு பொருட்கள் வழங்கி வைக்கப்படவுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் நுவரெலியா மாவட்ட செயலகத்தில் (18) மாவட்ட செயலாளர் நந்தன கலபட தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடல் உலக உணவு நிறுவனத்தின் துணை இயக்குனர் எச்.பி.சோம திலக்கவின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

இதில் நுவரெலியா மாவட்ட திட்டமிடல் இயக்குனர் எல்.எச்.எ.எஸ்.குமார, உதவி மாவட்ட செயலாளர் ஷாலினி விடகும்பர உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது ஜப்பான் அரசாங்கத்திடம் இருந்து உதவியாக பெற்றுக் கொள்ளவுள்ள அரிசி, சமையல் எண்ணெய் உள்ளிட்ட மேலும் பல உலர் உணவு பொருட்கள் வலப்பனை பிரதேச மக்களுக்கு வழங்க இக்கலந்துரையாடலில் யோசனை தெரிவிக்கப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

ஆ.ரமேஸ்

## பகிரங்க ஏல விற்பனை

### கொழும்பு வணிக உயர் நீதிமன்றம்

Sri Lanka Ports Authority,
19, Church Street, Colombo. 02
**Plaintiff**

வழக்கு இல: CHC 09/2006 REM
பிஸ்கல் நிறைவேற்று இல: 13/2022

**Against**

01. "The Formentera,
Now lying at the Port of Galle under arrest in action in REM No. 7 of 2005 **

**Defendant**

மேலே குறிப்பிட்ட வழக்கின்படி என்மேல் சாட்டப்பட்டுள்ள விற்பனை அதிகாரப் பத்திரத்தின் படி இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் கொழும்பு வணிக உயர் நீதிமன்றத்தின் 2022-08-30 ஆம் திகதியிடப்பட்ட கட்டளைப்படி கீழ் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தினை பகிரங்க ஏலத்தில் விற்று பெறப்படும் பணத்தினை இவ்வழக்கின் வரவுக்கணக்கில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது ஆகையால் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனத்தை கௌரவ நீதி மன்றத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கிணங்க வருடம் 2022 நவம்பர் மாதம் 22ம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு கொழும்பு புதுக்கடையில் அமைந்துள்ள வணிக உயர் நீதிமன்ற மண்டப இலக்கம் 04ல் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதை இதன்படி அறிவிக்கப்படுகின்றது

**மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை**

தற்சமயம் காலி துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ள Formentra என பெயரிடப்பட்டுள்ள கப்பல் (Official Registration) இல 17431-87C இனம் Gas Barge GRT/NRT-3, 514/1, 303

இவ் ஏலவிற்பனையில் கலந்து கொள்வதற்காக அனைத்து முனைவுக்காரர்களும் மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அமைந்துள்ள மார்ஷல் அவர்களின் காரியாலயத்தில் அல்லது இணையத்தில் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் கப்பலை பார்வையிடுவதற்கான அனுமதியை மார்ஷல் அவர்களிடம் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**முகவரி:** **உயர் நீதிமன்ற மார்ஷல்**
**வணிக கப்பல் செயலகம்**
**முதலாம் மாடி**
**43-89, யோர்க் வீதி, கொழும்பு 01**
**இலங்கை**

**இணையம்: www.dgshipping.gov.lk**
**தொலைபேசி இல: +94112435127**

**பதிவாளர்**

**2022-10-19 ஆம் திகதி**
**கொழும்பு வணிக உயர் நீதிமன்றத்தில்**

# இலங்கை வங்கி

## ஏலவிலை கூறலுக்கான அழைப்பு

### இலங்கை வங்கிக்கு 72 எண்ணிக்கையிலான தானியங்கி பண இயந்திரங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல்

### கேள்விப்பத்திர இல : BOC/PROP/P/2022/26

இலங்கை வங்கிக்கு 72 எண்ணிக்கையிலான தானியங்கி பண இயந்திரங்களை வழங்கி, விநியோகித்து, நிறுவி, செயற்படுத்திப் பராமரிக்க முத்திரையிடப்பட்ட ஏலவிலை கோரல்கள் கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல.01, "BOC சதுக்கம்", 14ஆம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, பிரதான முகாமையாளரால் கோரப்படுகின்றன. ஏலவிலை கூற ஆர்வமுடைய உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் வெளிநாட்டுப் பிரதான உற்பத்தியாளர்களது உள்நாட்டு முகவர்கள் ஏலவிலை கூறல்களைச் சமர்ப்பிக்க முடியும்.

| | |
|---|---|
| மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் | ரூ.17,400.00 (ரூ.14,750+ரூ.380 SSCL + ரூ.2,270 VAT) |
| சமர்ப்பிக்கப்படவேண்டிய ஏலமுறியின் பெறுமதி | ரூ.700,000 /= |
| கேள்விப்பத்திர ஆவணங்களை விநியோகிக்கும் கடைசித்திகதியும் நேரமும் | 2022.11.10 1400 மணி வரை |
| கேள்விப்பத்திரம் முடிவடையும் திகதியும் நேரமும் | 2022.11.11 1000 மணி வரை |
| முன்கூட்டிய விலைகூறல் கூட்டம் நடைபெறும் திகதியும் நேரமும் இடமும் | 2022.10.31 1100 மணிக்கு இலங்கை வங்கி தலைமையகம் 06ஆம் தளம் |

1. விலை கூறுவோர் இவ் ஏலவிலை கூறலில் கலந்து கொள்வதற்கு பின்வரும் குறைந்தபட்சத் தகைமைகளை கொண்டிருக்க வேண்டும் :
   i. கடந்த மூன்று நிதி ஆண்டுகளில் ஏலவிலை கூறுபவரின் அண்ணளவான வருடாந்தப் பணப் புரள்வானது ரூ.100 மில்லியனாகக் காணப்பட வேண்டும். (2019/2020, 2018/2019 மற்றும் 2017/2018).
   ii. ஏலவிலை கூறுபவர் இலங்கையில் 2016.01.01ஆம் திகதி முதல் ஏலவிலை கூறல் முடிவடையும் திகதி வரையான காலப்பகுதியினுள் குறைந்தபட்சம் 50 ATM / CRM இயந்திரங்களை ஏதேனும் நிதி நிறுவனம் / நிறுவனங்களுக்கு வழங்கி, பொருத்தி மற்றும் பராமரித்துக்கொண்டிருக்க வேண்டியதுடன் அவற்றுள் 25 அலகுகள் உத்தரவாதத்துடன் அல்லது ஏலவிலை கூறுபவரின் பராமரிப்பின் கீழ் காணப்பட வேண்டும்.
   iii. ஏலவிலை கூறுபவர் முன்மொழியப்பட்ட உற்பத்தியினை உடைய 10 ATM / CRM களை வழங்கிப் பொருத்தியிருக்க வேண்டியதுடன் இலங்கையில் தற்போதும் செயற்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்.
   iv. ஏலவிலை கூறுபவர் இலங்கை அரசாங்கத்தினால் அல்லது இலங்கை வங்கியினால் அல்லது ஏதேனும் அரசாங்க நிறுவனத்தினால் நிராகரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியலில் காணப்படாதவராக இருத்தல் வேண்டும்.
   v. ஏலவிலை கூறுபவர் இலங்கையினுள் காணப்படும் வங்கியின் வர்த்தக எல்லை தொடர்பாக வேறுபட்ட ஆர்வத்தை உடையவராகக் காணப்படக் கூடாது.
2. ஏலவிலை கூற ஆர்வமுடையவர்கள் ஆங்கில மொழியிலான முழு விலை கூறல் ஆவணத்தொகுதியை 17,400 ரூபாய் திருப்பிச் செலுத்தாக் கட்டணத்தைச் செலுத்தி (கட்டணம் செலுத்தும் முறை பணமாகும்.) பிரதான முகாமையாளர், சொத்துக்களும் சேகரிப்பும், 14ஆம் தளம், இலங்கை வங்கி, இலங்கை வங்கிச் சதுக்கம், இல. 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரிக்கு எழுத்து மூல விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம் கொள்வனவு செய்யலாம். அவ்வாறு கொள்வனவு செய்த ஆவணங்களை (சொத்துக்களும் சேகரிப்பும்) பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் 0900 மணி தொடக்கம் 1400 மணி வரை பெற்றுக் கொள்ள முடியும்.
3. பூரணப்படுத்தப்பட்ட ஏலவிலை கூறல்களை இலங்கை வங்கி தவிர்ந்த மற்றொரு வர்த்தக வங்கியிடமிருந்து பெற்ற 2023.03.10ஆம் திகதி வரை செல்லுபடியாகும் உரிய பணப் பெறுமதிக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட விலைகூறல் உத்தரவாதத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். விலைகூறல் பிணைக்குப் பதிலாக பணவைப்புகள் / வங்கி வரைவுகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஏலவிலை கூறுபவரால் வரையப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
4. ஏல விலை கூறல்கள் குறித்த முடிவுத் திகதியன்று 1000 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும். 1000 மணிக்குப் பின்னர் பெறப்படும் விலை கூறல்கள் நிராகரிக்கப்படுவதோடு திறக்கப்படாமலே திருப்பி அனுப்பி வைக்கப்படும்.
5. இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் அல்லது கேள்விப்பத்திரமொன்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும், உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.
6. மேலதிக விபரங்களை சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி,
"BOC சதுக்கம்", இல.01,
இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01, இலங்கை.
தொலைபேசி : 0112 544310, 0112 434786
மின்னஞ்சல் : procurement@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2022 ஒக்டோபர் 26ஆம் திகதியன்று ஏல விற்பனையினூடாக 80,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123A272 | LKA18223D281 | LKA36423J274 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 30,000 | 30,000 | 20,000 | 80,000 |

ஏல விற்பனைத் திகதி : 2022 ஒக்டோபர் 26
தீர்ப்பனவுத் திகதி : 2022 ஒக்டோபர் 28
வழங்கப்படும் திகதி : 2022 ஒக்டோபர் 28
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2022 ஒக்டோபர் 26 புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணைய அடையாள இலக்கம்

**எம்.இசட்.எம். ஆசிம்**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

திகதி **19.10.2022** புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் : 4913
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,971,770.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 29,390,854.00
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 6 9 8 8 9 5

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 222
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,008,920.00
இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 06 22 34 44
விசேட இலக்கினம் ரிஷபம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,841,355.20

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் : 1368
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,811,060.00
வெற்றி இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 2 5 4 2 3 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,438,971.60

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் : 943
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,249,080.00
வெற்றி இலக்கினம் S வெற்றி இலக்கங்கள் 51 56 61 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 130,388,588.40

**கொவிசெத** Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3155
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,404,180.00
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 31 34 75 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 83,384,616.80

**Mega POWER மெகா பவர்** கோடி 27+
சீட்டிழுப்பு இலக்கம் 1261
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,914,840.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 276,925,210.00
ஆங்கில எழுத்து B சுப்பர் நம்பர் 14 வெற்றி எண்கள் 31 61 71 75
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475 Email : info@nlb.lk Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

ஆலமுல் இஸ்லாம்
மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# சூழல் நேயத்தை வலியுறுத்தும் இறைவழிகாட்டல்

அஷ்ஷெய்க் யூ.கே. ரமீஸ் (எம்.ஏ சமூகவியல்)...

உலகில் காலநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதன் விளைவாக அடிக்கடி சீரற்ற காலநிலை உருவாகி இயற்கை அனர்த்தங்களும் ஏற்படுகின்றன. அதனால் உயிரிழப்புகளும் சொத்தழிவுகளும் சேதங்களும் ஏற்படவே செய்கின்றன. இக்காலநிலை மாற்றத்திற்கு மனித செயற்பாடுகளே பெரிதும் பங்களித்துள்ளன. இது உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள உண்மையாகும்.

ஆனால் காலநிலை மாற்றத்தினால் இன்றைய காலகட்டத்தில் ஏற்படுகின்ற விளைவுகள் தொடர்பில் அருள்மறையாம் அல் குர்ஆன் இற்றைக்கு 1400 வருடங்களுக்கு முன்பே குறிப்பிட்டிருக்கின்றது.

'மனிதர்களது கரங்கள் செய்தவற்றின் காரணமாக கரையிலும் கடலிலும் அழிவுகள் ஏற்பட்டுள்ளன'

**(அல்குர்ஆன் ரூம்: 41).**

இவ்வசனத்தில் 'பஸாத்' என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. பஸாத் என்பது விவசாயத்திலும் விளைச்சலிலும் குறைவுகள் ஏற்படுவதை குறிப்பதாக இமாம் இப்னு கஸீர்(றஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இமாம் பைழாவி (றஹ்) அவர்கள் 'பஸாத்' என்பது வறட்சி, அதிகமாக தீப்பிடித்தல், மூழ்கிவிடுதல் போன்ற அருள் இல்லாமல் போகின்ற விடயங்களுடன் தொடர்பானது என்று கூறியுள்ளார். (ஆதாரம்: ஸப்வதுத் தபாஸீர்) அதேநேரம் இவ்வசனம் அல்குர்ஆனின் அற்புதத் தன்மையுடன் தொடர்புபடுவதாக நவீன தப்ஸீர் அறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் சுற்றுச் சூழலை பேணுவது ஈமானுடன் தொடர்பான ஒரு கடமை. சூழலில் காணப்படுகின்ற உயிருள்ள, உயிரற்ற, அறிவுள்ள, அறிவற்ற அனைத்தும் இறை படைப்புகளாகும். இவை அல்லாஹ்வை ஸுஜூத் செய்கின்றன. இறைகட்டளைக்கு அடிபணிகின்றன. அல்லாஹ்வை துதிக்கின்றன. என்றாலும் சுற்றுச்சூழலில் மனிதன் பிரதான பங்கை வகிக்கிறான். அவன் அறிவும், ஆன்மாவும் வழங்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளான். பூமியில் தலைமைப் பாத்திரம் ஏற்றிருக்கின்றான். பொறுப்புக்களை (அமானிதம்) சுமந்துள்ளான். மண்ணிலிருந்து படைக்கப்பட்ட அவன் மண்ணை வளப்படுத்தும் இயல்புடன் படைக்கப்பட்டுள்ளான். ஆன்மாவை பெற்ற அவன் இறைபிரதிநிதியாக இருந்து செயல்படவும் கட்டளையிடப்பட்டுள்ளான். பூமி அவனுக்கு வசப்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது. எனவே அவன் அதனை பாதுகாக்குமாறும், பயன்படுத்துமாறும், மேம்படுத்துமாறும் வேண்டப்பட்டுள்ளான். சுற்றுச்சூழலோடு இறைநியதிக்கு முரணாக நடந்து கொள்ளக்கூடாது என்று கண்டிப்பான கட்டளைகள் அவனுக்கு விதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு செயல்படுவது நன்மையான காரியம் என்றும் வழிபாடு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு பூமியில் ஒரு முஸ்லிம் இறைபிரதிநிதியாக இருந்து இறை கட்டளைகளை எடுத்து நடந்து பூமியை வளப்படுத்தி இமாரத் பணி செய்யவேண்டும். பூமியை வளப்படுத்துதல் என்பது சூழலை பாதுகாத்தல், மரம் செடிகளை நாட்டுதல், விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடல், கட்டிடங்களை கட்டுதல், பூமியை பயன்படுத்துதல், சூழலை மாசுபடுத்துகின்ற அனைத்து காரியங்களில் இருந்தும் விலகியிருத்தல் போன்ற விடயங்களை குறித்து நிற்கிறது. இவையெல்லாம் எமது நம்பிக்கைகளுடன் (ஈமான்) தொடர்பான விடயங்கள். இவற்றை நாம் பேணிக்கொள்கின்ற போது தனிமனிதன் மகிழ்ச்சியடைவான். சூழ இருக்கின்றவர்களும் மகிழ்வடைவார்கள். இதனையே அல்லாஹ் 'ஒரு கிராமத்தவர்கள் நம்பிக்கை கொண்டு இறையுணர்வுடன் நடந்துகொண்டால் வானம், பூமியின் அருள்களைத் திறந்து விடுவோம்' (அல் குர்ஆன்: அஃராப் 96) என்று குறிப்பிட்டிருக்கிறான்.

அதேநேரம் சூழலோடு நல்ல முறையில் நடந்து கொள்வது பண்பாட்டுடன் (அக்லாக்) தொடர்பான விடயமாகவும் உள்ளது. படைப்பாளனோடு உண்மையாக நடந்து கொள்வதும் படைப்புகளோடு பண்பாடாக நடந்து கொள்வதும் தான் மார்க்கம் என்று வறையறை செய்வார்கள்.

சுற்றுச்சூழல் என்பது இறைபடைப்புகளின் தொகுப்பாகும். அதனோடு நல்லமுறையில் நடந்து கொள்ளுமாறு நாம் ஏவப்பட்டுள்ளோம். 'எல்லா விடயங்களிலும் நல்ல முறையில் நடந்து கொள்வதை அல்லாஹ் விதியாக்கியுள்ளான். (ஆதாரம்: முஸ்லிம்) நாம் அல்லாஹ்வுடனும் மனிதர்களுடனும் நல்லமுறையில் நடந்துகொள்வது போன்றே தாவரங்கள், மிருகங்கள், சுற்றுச் சூழல், நீர், காற்று, காடு, கடல், ஆறு போன்ற அனைத்து படைப்புக்களுடனும் நல்லமுறையில் நடந்துகொள்வது அவசியம்.

மேலும் அல்லாஹ் 'பூமியில் குழப்பம் விளைவிக்க வேண்டாம்' **(அல் குர்ஆன்: அஃராப் 56)** என்றும் கட்டளையிட்டுள்ளான். சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதும் அதன் சமநிலையைக் குழப்பியடிப்பதும் இந்த வட்டத்தோடு தொடர்பானது. மேலும் சூழலை நேசிக்குமாறும் நாம் ஏவப்பட்டுள்ளோம். நபி (ஸல்) அவர்கள் கூட உஹத் மலையை பார்த்து 'இது உஹத் மலை, அது எம்மை விரும்புகிறது, நாம் அதனை விரும்புகிறோம்' **(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)** என்றார்கள். உஹத் மலையடிவாரத்தில் நபி (ஸல்) அவர்கள் பலரை இழந்துள்ளார்கள். அவர்களில் அன்னாரின் சிறிய தந்தை ஹம்ஸா (ரழி) அவர்களும் அடங்கியுள்ளார்கள். அம்மலையை அன்னார் அபசகுணமாக நோக்கவில்லை. மாற்றமாக உயிரும் உள்ளமும் அறிவும் உள்ள ஒரு படைப்பு போன்று 'அது எம்மை நேசிக்கிறது.

நாம் அதனை நேசிக்கிறோம்' என்று குறிப்பிட்டார்கள். பிலால் (ரழி) அவர்களும் மக்கா, அதன் பள்ளத்தாக்குகள், நீர் நிலைகள், மலைகள், தாவரங்கள் போன்றவற்றை நினைத்து கவி பாடியுள்ளார்கள். பிரபஞ்சம் என்பது இறை அத்தாட்சியாகும். இதனை நாம் கூர்ந்து நோக்கினால் இது ஒரு அருள் என்பதையும் புரிந்துகொள்ளலாம். .

மேலும் சுற்றுச்சூழலை பேணுவது இஸ்லாமிய சட்டத்துடன் தொடர்பானதொரு விடயம். சட்டம் என்பது ஒரு முஸ்லிம் தனது இரட்சகனுடன், சுயத்துடன், குடும்பம், சமூகம், பிரபஞ்சத்துடன் நடந்துகொள்ள வேண்டிய முறையை ஒழுங்குபடுத்துகிறது. இஸ்லாமிய சட்டத்தில் சுத்தம் தொடர்பான ஒரு பகுதி காணப்படுகிறது.

அது உள, உடல், இட சுத்தங்களைப் பற்றி பேசுகிறது.

ஹஜ், உம்ராவின் போது தாவரங்களை வெட்டுவது விலங்குகளை வேட்டையாடுவது என்பன தடுக்கப்பட்டுள்ளன. இஸ்லாமிய சட்டத்தில் காணப்படும் 'ஹிஸ்பா' என்ற முறைமை சுற்றுச்சூழல் பாதிக்காத பிரகாரம் உற்பத்தி, வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவது தொடர்பான விதிகளை வகுத்து வழங்குகிறது. அது முறையாக நிறைவேற்றப்படுகின்றதா என்பதனையும் கண்காணிக்கிறது.

இஸ்லாமிய பொருளாதாரம் விவசாய பங்குடைமை 'முஸாரஆ' தொடர்பாக பேசுகிறது. யுத்தநிலைகளின் போது கூட தாவரங்கள் அழிக்கப்படக் கூடாது என்பதும் இஸ்லாத்தின் கட்டளையாகும்.

இஸ்லாமிய சட்டங்களுக்கு நோக்கங்கள் உள்ளன. அவற்றை அடைவதற்கான ஏற்பாடுகள் காணப்படுகின்றன. அந்த வகையில் மார்க்க உணர்வுகளை பாதுகாப்பது, உயிர்ப்பாதுகாப்பு, எதிர்கால சந்ததியினர்களை பாதுகாப்பது, அறிவை பாதுகாப்பது, செல்வத்தை பாதுகாப்பது போன்றன ஷரீஆவின் நோக்கங்களாகும். சுற்றுச்சூழலை பாதுகாப்பது ஒரு மார்க்க கடமை. சுற்றுச்சூழலை பாழ்படுத்தாது இருப்பதும் அதனை வளப்படுத்தி மேம்படுத்துவதும் மார்க்க கடமைகளே அன்றி வேறில்லை. ஒருவன் சூழலை மாசுபடுத்தும் போது தன்னைத்தானே அழித்துக்கொள்வதோடு பிறரையும் அழிக்க முனைகிறான். எதிர்கால சந்ததியினர்களுக்காக விட்டுச்செல்ல வேண்டிய சூழலை மனிதன் அழிக்கின்ற போது எதிர்கால சந்ததியினர் பாதிக்கப்படுகின்றனர். சூழல் அழிவுகள் காரணமாக மனிதனின் அறிவும் பாதிப்படைகின்றது. இழப்புகளின் முன்பாக பிறழ்வுச் சிந்தனைகளையும் நடத்தைகளையும் எம்மால் காணமுடிகிறது. பூமி, மரங்கள், விவசாய விளைபொருட்கள், கால்நடைகள், நீர், புற்தரைகள், வாழிடம், ஆடைகள், கடல் வளம், கனிய வளம் அனைத்தும் செல்வங்களாகும். இவை அழிந்து விடுவதற்கு நாம் துணைபோகலாகாது.

அல்குர்ஆன், மிருகங்கள், பூச்சிகள், தாவரங்கள், கனிப்பொருட்கள் என்பவற்றின் பெயர்களையும் உள்ளடக்கியுள்ளன. உதாரணமாக மாடு, கால்நடைகள், யானை, குதிரைகள் போன்ற மிருகங்கள் தேன், எறும்பு, சிலந்தி, போன்ற பூச்சியினங்கள், அத்தி போன்ற பழவகைகள், இரும்பு போன்ற கனிப்பொருட்கள், இடி, காற்று, நட்சத்திரம், அதிகாலை, சூரியன், இரவு, காலம் போன்ற விடயங்கள், தூர்மலை, மக்கா, அரபு தீபகற்பம், குகை போன்ற இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவையனைத்தும் ஒரு முஃமினை சுற்றுச்சூழலோடு பிணைக்கும் அம்சங்களாகும். அதனால் முஃமின் என்பவன் எப்போதும் சூழல் நேயம் மிக்கவனாக இருக்கவேண்டும். அதுவே இஸ்லாத்தின் அடிப்படையாகும்.

# பெற்றோரின் மகிமை

மின்ஸார் இப்றாஹிம் ...

அல்லாஹ் இந்த மனித சமுதாயத்துக்கு எண்ணற்ற அருளைச் செய்துள்ளான். அந்த அருளில் ஒன்று தான் ஒவ்வொரு குழந்தைக்கும் இறைவன் கொடுத்துள்ள பெற்றோர் எனும் பாக்கியமாகும்.

'என்னைத் தவிர வேறு யாரையும் வணங்காதீர்கள். பெற்றோருக்கு உபகாரம் செய்யுங்கள்! என்று உமது இறைவன் கட்டளையிட்டுள்ளான். உம்முடன் இருக்கும் அவ்விருவருமோ, இருவரில் ஒருவரோ முதுமையை அடைந்து விட்டால் அவ்விருவரை நோக்கி 'சீ' எனக் கூறாதே! அவ்விருவரையும் விரட்டாதே! மரியாதையான சொல்லையே அவ்விருவரிடமும் கூறுவீராக! **(அல்குர்ஆன் 17:23)**

இவ்வசனத்தில் அல்லாஹ் தனக்கு அடுத்தபடியாகப் பெற்றோரை முன்வைக்கின்றான். காரணம் பெற்றோர் முதுமை அடைவதற்கு முன் நம்மை முன்னேற்றப் பாடுபடுவார்கள். தனது உழைப்பு, திறமை அனைத்தையும் அதற்காக செலவிடுவர். இப்போது அவருக்கு இந்த முதுமை ஏற்பட்டதற்கு அவரது வயது மட்டும் காரணமல்ல. அவரது உடல் உழைப்பும் ஒரு காரணம் தான்.

அதனால் முதுமையை அடைந்த உன் பெற்றோரைப் பார்த்து சீ என்று சொல்லிவிடாதே! ஏனெனில் குழந்தைப் பருவத்தில் எதுவுமே அறிய முடியாத நிலை இருக்கும். அந்நேரத்தில் நீ செய்த அசுத்தங்களையும் இன்னல்களையும் அவர்கள் பொறுத்துக் கொண்டார்கள். அதே பெற்றோர் முதுமையை அடையும் போது நீ எவ்வாறு குழந்தைப் பருவத்தில் நடந்து கொண்டாயோ அதே நிலை அவர்களுக்கும் உருவாகும் தருணமே அந்த முதுமைப் பருவம்.

அப்போது நீ அவர்களை கண்ணியத்துடன் நடத்த வேண்டும். ஏனெனில் உன்னைக் கருவில் சுமக்கும் போது பல இன்னல்களையும் சேர்த்தே தாயார் சுமந்தார். கர்ப்பகாலத்தில் சாப்பிட முடியாமலும், இரவில் தூங்க முடியாமலும், நிம்மதியாக திரும்பியோ, நிமிர்ந்தோ படுக்க முடியாமலும் அடிக்கடி எழுந்தும் சிரமப்படுவாள். இவ்வாறு பல இன்பங்களை அனுபவித்து சிரமப்பட்டு தான் உன்னைச் சுமந்தார். இது குறித்து அல்லாஹ், 'மனிதனுக்கு அவனது பெற்றோரைக் குறித்தும் வலியுறுத்தியுள்ளோம். அவனை அவனது தாய் பலவீனத்துக்கு மேல் பலவீனப்பட்டவளாகச் சுமந்தாள். **(அல்குர்ஆன் 31:14)** என்று குறிப்பிட்டுள்ளான்.

மேலும் ஒவ்வொரு தாய்மாரும் குழந்தையைப் பெற்றெடுக்கும் போது மரணத்தின் வாசலுக்கு சென்று திரும்புகின்றனர். இதை மர்யம் (அலை) அவர்களின் சம்பவத்திலிருந்து அறியலாம். பிரசவ வலி அவரை ஒரு பேரீச்சை மரத்தின் அடிப் பாகத்திற்குக் கொண்டு சென்றது. 'நான் இதற்கு முன்பே இறந்து, அடியோடு மறக்கடிக்கப்பட்டவளாக இருந்திருக்கக் கூடாதா?' என்று அவர் கூறினார்.

**(அல்குர்ஆன் 19:23)**

அந்தத் தாய் குழந்தையைப் பெற்றெடுப்பதற்குள் அவள் படும் சிரமங்களைப் பார்த்து அக்குழந்தையின் தந்தை ஒவ்வொரு நாளும் செத்துப் பிழைப்பார்.

குழந்தையைப் பெற்றெடுப்பதுடன் தாய்மாரின் கடமை முடிந்து விடுவதில்லை. மேலும் மேலும் சிரமங்கள் தொடரும். தாய்ப்பால் ஊட்டும் கடமை அவள் மீது சுமத்தப்படும். 'அவன் பாலருந்தும் பருவம் இரண்டு ஆண்டுகள். எனக்கும், உனது பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக! என்னிடமே திரும்பி வருதல் உண்டு.

**(அல்குர்ஆன் 31:14)**

'தனது பெற்றோருக்கு நன்மை செய்யுமாறு மனிதனுக்கு வலியுறுத்தினோம். அவனை அவனது தாய் சிரமத்துடன் சுமந்தாள். சிரமத்துடனே ஈன்றெடுத்தாள். அவனைச் சுமந்ததும், பால் குடியை மறந்ததும் முப்பது மாதங்கள். அவன் தனது பருவ வயதையும் அடைந்து நாற்பது வயதை அடையும் போது 'என் இறைவா! எனக்கும் என் பெற்றோருக்கும் நீ செய்த அருட்கொடைக்கு நன்றி செலுத்தவும், நீ பொருந்திக் கொள்ளும் நல்லறத்தை நான் செய்யவும் வாய்ப்பளிப்பாயாக! எனக்காக எனது சந்ததிகளைச் சீராக்குவாயாக! நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்கிறேன். நான் முஸ்லிம்களில் ஒருவன்' என்று கூறுகிறான் என்று குறிப்பிட்டுள்ளது. **(அல்குர்ஆன் 46:15)**

மேலும் குழந்தையைப் பேணிப் பராமரித்து வளர்க்க வேண்டிய கடமை. நேர்வழியைப் போதிக்க வேண்டிய கடமை அதன் பெற்றோருக்கு உண்டு. ஏனெனில் ஒவ்வொரு பெண்ணும் அவளது குழந்தைக்குப் பொறுப்பாளி என்று நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்

தாய், சேய் ஆகியோரைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு தந்தையைச் சேர்கின்றது. இக்கடமை அவர்களுக்கு இருப்பதால் அதற்கான சம்பாத்தியத்திற்காகக் கூடுலான சிரமம் எடுத்து வேலை செய்கிறார்கள். இவ்வாறு தாய், தந்தை இருவரும் நமக்காகவே வாழ்பவர்கள். அதனால் அவர்களோடு அதிகமாக நட்பு பாராட்ட வேண்டும் என்றும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, 'அல்லாஹ்வின் தூதரே! நான் அழகிய முறையில் உறவாடுவதற்கு மிகவும் அருகதையானவர் யார்?' என்று கேட்டார். நபி (ஸல்) அவர்கள், 'உன் தாய்' என்று கூறினார்கள். 'பிறகு யார்?' என்று அவர் கேட்டார். நபி (ஸல்) அவர்கள், 'உன் தாய்' என்றார்கள். 'பிறகு யார்?' என்று அவர் கேட்க அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'உன் தந்தை' என்றார்கள். **(ஆதாரம்: புஹாரி)**

மேலும் பெற்றோருக்கு நன்மை செய்வது அல்லாஹ்விற்கு மிகவும் விருப்பமானது. 'அல்லாஹ்விற்கு மிகவும் விருப்பமான செயல் எது?' என்று நபி (ஸல்) அவர்களிடம் கேட்ட போது, 'தொழுகையை அதன் நேரத்தில் தொழுவதாகும்' என்று பதிலளித்தார்கள். 'அதற்கு அடுத்தது எது?' என்றேன். 'பெற்றோருக்கு நன்மை செய்தல்' என்றார்கள். 'அதற்கு அடுத்தது எது?' என்றேன். ' அல்லாஹ்வின் பாதையில் போர் புரிதல்' என்றனர். இவற்றை (மட்டுமே) நபி (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள். (கேள்வியை) மேலும் நான் அதிகப் படுத்தியிருந்தால் நபி (ஸல்) அவர்கள் மேலும் சொல்லியிருப்பார்கள். **(ஆதாரம்: புஹாரி)**

இவ்வாறு பெற்றோரை இஸ்லாம் கண்ணியப்படுத்துகின்றது. அவர்களது தியாகம், பிரதிபலன் எதிர்பாராமல் தன் கடமைகளைச் சரியாகச் செய்து நம்மைக் கண்ணியப்படுத்தியதற்காக நாமும் இஸ்லாம் சொல்லும் வழியில் கண்ணியப்படுத்தி மறுமையில் சுவனத்தைப் பெறுவதற்காக உரிய முறையில் முயற்சிப்போம்.

# இஸ்லாத்தில் வறுமை ஒழிப்பு

வறுமை என்பது உணவு, உடை, உறைவிடம், சுத்தமான குடிநீர், கல்வி பெறும் வாய்ப்பு, சமூக மதிப்புப் பெறுதல் போன்ற வாழ்க்கைத் தரத்தை தீர்மானிக்கின்ற விடயங்களை இழந்த நிலையாகும். இது பொருளாதாரப் பிரச்சினை மாத்திரமல்ல. சமூகம், மானுடம் மற்றும் அரசியல் சார்ந்த பிரச்சினையும் கூட.

சமூகத்தின் வளர்ச்சியிலும் நாட்டின் வளர்ச்சியிலும் அதன் முன்னேற்றத்திலும் பங்களிப்புச் செய்ய முடியாதவனாக வறுமை மனிதனை முடக்கிவிடும். வெறுப்பு, பொறாமை போன்ற பல்வேறுபட்ட உள நோய்களை அது தூண்டிவிடும். சரி பிழை, நன்மை தீமைகளை பிரித்துப் பார்க்காது அதன் சட்டங்கள், பண்பாடுகளுக்கெதிராக நடக்கக்கூடியவர்களாக மனிதர்களை மாற்றி விடலாம்.

அதனால் தான் நபி (ஸல்) அவர்கள் வறுமையிலிருந்து பாதுகாவல் தேடியிருக்கிறார்கள்.'யா அல்லாஹ்! இறைநிராகரிப்பிலிருந்தும் வறுமையிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்' என்று பிரார்த்தனை செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள். **(ஆதாரம்: அபூதாவூத்)**

எனவேதான் இஸ்லாம் இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதிலும் அதன் கோரப்பிடியிலிருந்து மனிதனை விடுவிப்பதிலும் அதிக கவனம் செலுத்தியிருக்கிறது.

செல்வம், சமூகத்தின் எல்லா தரப்பினருக்குமிடையே சுழன்றுகொண்டிருக்க வேண்டும் என்பது இஸ்லாமிய பொருளியலின் அடிப்படையாகும். அல்லாஹு தஆலா அல்குர்ஆனில் தொழுகையோடு இணைத்து ஸகாத்தைக் கட்டளையிட்டுள்ளான். தொழுகையை விடுவதும் ஸகாத்தை கொடுக்காதிருப்பதும் நரகம் செல்வதற்கு காரணமாகவும் அமைந்துவிடும். 'உங்களை நரகில் கொண்டு சேர்த்தது எது? என்று அந்தப்பாவிகளிடம் கேட்கப்படும். அவர்கள் (பதில்) கூறுவார்கள். 'தொழுபவர்களில் நின்றும் நாங்கள் இருக்கவில்லை. இன்னும் ஏழைக்கு உணவளிப்பவர்களாகவும் இருக்கவில்லை. '

**(அல் குர்ஆன்: முத்தஸ்ஸிர் 42)**

வறுமைப்பட்டோரையும் ஏழைகளையும் கவனிக்காது அக்கறையற்றிருப்பது இறை நிராகரிப்பினதும் மறுமை நாளை மறுப்பதினதும் அடையாளம் என அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. 'மறுமையை நிராகரிப்பவனை நீர் கவனித்தீரா? அவன் அனாதையை விரட்டிவிடுகிறான். அவன் ஏழைகளுக்கு உணவளிக்கத் தூண்டுவதுமில்லை.' **(அல் குர்ஆன்: மாஊன் 1,2,3)**

இஸ்லாம் ஸகாத் கடமையை வறுமை ஒழிப்பிற்கான மிகச்சிறந்த திட்டமாக அறிமுகம் செய்திருக்கிறது. அந்தவகையில் அல்லாஹ் வழங்கிய செல்வத்திலிருந்து அவனது கட்டளைப்படி வறியவர்களுக்கு உரிய பங்கை வழங்க வேண்டியது செல்வம் வழங்கப்பட்டவர்கள் மீதான கடமையாகும்.ஒரு காலத்தில் ஸகாத் கொடுக்கத் தகுதியானவர்கள் இருப்பார்கள். ஆனால் அதனைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியானவர்கள் இருக்கமாட்டார்கள். இப்படியொரு நிலை என் சமூகத்தில் தோன்றும் என நபி (ஸல்) அவர்கள் முன்னறிவிப்புச் செய்ததை உமர் (ரழி) அவர்களது ஆட்சிக்காலத்தில் யெமன் நாட்டின் ஆளுனர் முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்கள் சாத்தியப்படுத்திக் காட்டினார்கள். **(ஆதாரம்: முஸ்லிம்)**

அதேபோன்று உமர் இப்னு அப்துல் அஸீஸ் (றஹி) அவர்கள் மரணிக்கும்போது, தன் வீட்டை விட்டு ஸகாத் பணத்துடன் வரும் நபர் அதை வாங்குவதற்குத் தகுதியானவர்கள் எவருமின்றி திரும்பிச் சென்றதாக வரலாறு சான்று பகர்கிறது. **(ஆதாரம்: பைஹகி)**

ஆகவே இஸ்லாம் எமக்கு வழிகாட்டியுள்ள ஸதகா, ஸகாத் போன்ற கடமைகளை மிகச்சரியாக நடைமுறைப்படுத்த முயற்சிப்போம். அது எம்மனைவரையும் பசி, பட்டினி, வறுமை, கடன் சுமை என்பவற்றிலிருந்து பாதுகாப்பதோடு பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டைப் பாதுகாத்து சுபீட்சமான, செழிப்பான வாழ்க்கையை தந்தருளட்டும்.

# தொழுகையின் உயிரோட்டம்

தொகுப்பு: அபூ ஸப்வான் உமைர் ...

தொழுகையில் ஓதும் திக்ர், தஸ்பீஹ் வசனங்கள் (ருக்ஹு, சுஜூத்) மற்றும் துஆக்கள் என்பவற்றின் பொருளை நன்குணர்ந்து கொள்ள முயல வேண்டும். அதற்கு அரபு மொழியறிவு அவசியமானது. அதனால் அவை தொடர்பிலான மொழிபெயர்ப்பையாவது குறைந்தது அறிந்துகொள்வது நல்லது. தொழுகையில் அல்குர்ஆனின் வசனங்கள் ஓதப்படுகின்றன. சர்வ வல்லமை படைத்த அல்லாஹ்வுக்கு முன்பாக இருக்கின்றோம் என்ற உணர்வோடு தொழுகையை ஆரம்பம் முதல் கடைசிவரை நிறைவேற்ற வேண்டும்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், தொழுகையைப் பேணுதலுடன் நிறைவேற்றுங்கள்' என்று கூறினார்கள். அதன்படி தொழுகையின் பேணுதல் என்பது எவ்வளவு முக்கியமானது என்பது தெளிவாகிறது.

அல்லாஹ்தஆலா தன் அருள் மறையில், 'தங்களுடைய தொழுகையைப் பேணுபவர்களாக இருக்கிறார்கள்'. (23:09) என்றும் 'நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார் தூய்மையை மேற்கொண்டு மேலும் தன் இறைவனின் பெயரை நினைவுகூர்ந்து தொழுகையை நிறைவேற்றியவர் (14:15) என்றும் 'தொழுகையாளிகளுக்கு கேடுதான் அவர்கள் தொழுகையில் அலட்சியமாக இருக்கிறார்கள். அவர்கள் பிறருக்கு காட்டுவதற்காகவே செயல்படுகிறார்கள் (107:4,5,6) என்றும் குறிப்பிட்டுள்ளான்.

இந்த வசனங்களின் படி தொழுகையை நிறைவேற்ற வேண்டிய ஒழுங்கு தெளிவாக எடுத்தியம்பப்பட்டு இருக்கின்றது.

அதேநேரம் நபி (ஸல்) அவர்கள், ஐவேளைத் தொழுகைகளை அல்லாஹ் மக்கள் மீது கடமையாக்கியுள்ளான். எவர் சிறந்த முறையில் ஒழுச் செய்து உரிய நேரத்தில் தொழுகையை நிறைவேற்றுகிறாரோ, இன்னும் எவருடைய உள்ளம் தொழுகையில் பணிந்திருக்கிறாரோ அவரை மன்னிப்பது அல்லாஹ்வின் பொறுப்பாகும். மேலும் எவர் தொழுகையில் இவ்வாறு பேணுதலுடன் செயற்படவில்லையோ அவரை அல்லாஹ்வின் மன்னித்தல் எனும் வாக்குறுதி சேராது. அல்லாஹ் நாடினால் மன்னிப்பான், நாடினால் தண்டிப்பான் என்று கூறியுள்ளார்கள். (ஆதாரம்: அபூதாவூத்)

தொழுகையைப் பொறுமையுடனும் நிதானத்துடனும் நிறைவேற்றுவது அவசியமானது. இதைவிடுத்து ருக்ஹு சுஜூத், நடு இருப்பு போன்றன அடங்கலாக தொழுகையில் அவசர அவசரமாக ஈடுபடுவதை, 'தொழுகையில் திருடாதீர்கள்' எனவும் நபி (ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளார்கள். அதேநேரம் வெளிப்பகட்டுக்காகத் தொழுதவன் இணைவைத்தவன் போலாவான் என்றும் அன்னார் குறிப்பிட்டுள்ளார்கள்.

**(ஆதாரம்: முஸ்னத் அஹ்மத்)**

எனவே அல்லாஹ்வின் கட்டளைக்கும் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கும் அமைய தொழுகையை உரிய பேணுதலுடன் நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துவோம்.



# புலமைக் கதிர்

## தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**I.** **கீழே கொடுக்கப்பட்டுள்ள பந்தியை வாசித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு பதிலளிக்குக.**

ஔவையார் தமிழ் நாட்டில் வாழ்ந்த பெண் புலவர். அவர் வள்ளல் அதியமான் அளித்த நெல்லிக்கனியை உண்டு நீண்ட காலம் உயிர்வாழ்ந்தார். நல்வழி, கொன்றைவேந்தன், மூதுரை, ஆத்திசூடி, ஞானக்குரல், ஆசாரக்கோவை போன்றவை அவர் பாடிய பாடல் தொகுப்புக்களாகும்.

1. ஔவையார் எங்கு வாழ்ந்து வந்தார்?

   ………………………………………………………………………………

2. ஔவையார் எழுதிய பாடல்கள் இரண்டின் பெயர்களை எழுதுக.

   ………………………………………………………………………………

3. இடப்பெயர் ஒன்றினை பந்தியில் இருந்து தெரிவுசெய்து எழுதுக.

   ………………………………………………………………………………

4. பெயர் அடைமொழியொன்றினை பந்தியிலிருந்து தெரிவு செய்க.

   ………………………………………………………………………………

5. பந்தியிலிருந்து உயர்திணை, படர்க்கை பெண்பால் ஒருமை, பெயர்ச்சொல் ஒன்றினை எழுதுக.

   ………………………………………………………………………………

6. ஒத்த கருத்து தருக.

   i. புலவர் - …………………………  ii. காலம் - ……………………………

**II** **பின்வருவனவற்றை சேர்த்தெழுதுக.**

7. i. கல் + குகை - …………………… ii. கண் + புலம் - ……………………
   iii. பல் + பசை - …………………… iv. முள் + செடி - ……………………
8. கூட்டத்தைக் குறிக்கும் மரபுப் பெயர்களை எழுதுக.

   i. அறிஞர் - …………………… ii. பல் - ……………………

   iii. ஆடு - …………………… iv. புகையிலை - ……………………

**III.**

9. பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி சரியான முறையில் எழுதுக.
   i. இட்டு / காகம் / முட்டை / பொரித்தது / கூடுகட்டி / மரத்தில் / குஞ்சு

   ………………………………………………………………………………

   ii. கவலைப்பட்டான் / எண்ணிக் / அவன் / தனது / புத்தியை / அவசர

   ………………………………………………………………………………

10. ஒருமை வாக்கியத்தை பன்மை வாக்கியமாக மாற்றுக.
    i. தீக்கோழி வேகமாக ஓடும்

    ………………………………………………………………………………

    ii. நான் தேநீர் குடித்தேன்

    ………………………………………………………………………………

11. தனி வாக்கியங்களை தொடர் வாக்கியமாக மாற்றுக.
    - ஜூடி சித்திரம் வரைந்தாள்
    - ஜூடி நிறம் தீட்டினாள்

    ………………………………………………………………………………

**IV.**

12. இயல்பொலி சொல்லை தெரிந்து கோடிடுக.
    i. க – கம்பி / காகம் / தங்கம்   ii. ப – பன்னீர் / கோபம் / கம்பம்

13. இருதிணை யாது?

    ………………………………………………………………………………

14. ஐம்பூதங்கள் எவை?

    ………………………………………………………………………………

15. முக்கனிகள் எவை?

    ………………………………………………………………………………

**V** **பெயராகவும் வினையாகவும் பொருள் எழுதுக.**

16. மறை - ……………………, ……………………

17. அணி - ……………………, ……………………

18. நகை - ……………………, ……………………

**VI.**

19. பின்வரும் தமிழ் சொற்களின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
    i. அணில் - …………………… ii. கிளி - ……………………
    iii. இருபது - …………………… iv. தாத்தா - ……………………

20. பின்வரும் படங்கள் உணர்த்தும் கருத்தின் சிங்கள மொழிச் சொற்களை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.





    i. ……………………………   ii. ……………………………

**VII**

21. 84279 இவ்வெண்ணில் இலக்கம் இரண்டினால் வகைக்குறிக்கப்படும் பெறுமானம் யாது?

    ………………………………………………………………………………

22. 475, 612, 199, 457, 621
    i. இவ்வெண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக.

    ………………………………………………………………………………

    ii. இவற்றில் மிகப்பெரிய எண்ணுக்கும் மிகச்சிறிய எண்ணுக்கும் இடையேயான வித்தியாசம் யாது?

    ………………………………………………………………………………

23. VI + X – VII = ? உரோமன் எண்ணில் விடை எழுதுக. ……………………

24. யுதேஸ் மு.ப. 6.30 க்கு வீட்டிலிருந்து புறப்பட்டு மு.ப. 9.45க்கு கண்டியை அடைந்தான். அவன் பிரயாணத்திற்கு செலவழித்த மொத்த நேரம் எவ்வளவு?

    ………………………………………………………………………………

25. 



    இந்த கடிகார முகம் 10 நிமிடங்கள் தாமதமாக ஓடுகிறது. நேரம் 3.20 ஆகின்ற போது இந்த கடிகார முகம் காட்டும் நேரம் என்ன?

    ……………………………………………………

26. 390 கதிரைகளை ஒரு வரிசையில் 6 கதிரைகள் வீதம் எத்தனை வரிசைகளில் அடுக்கலாம்?

    ………………………………………………………………………………

27. 15080g இதனை kg, g இல் எழுதுக.

    ………………………………………………………………………………

28. 

    இத்திண்ம உருவின் மேல் பகுதியை படத்தில் காட்டியுள்ளவாறு வெட்டி அகற்றினால் பெறப்படும் முகத்தின் வடிவம் யாது?

    ……………………………………………………

29. 500 ml எண்ணெய் ரூபாய் 650.00 எனில்,

    i. 1 ½ *l* எண்ணெய் எவ்வளவு ரூபாய்? ……………………………

    ii. 2 *l* எண்ணெய் வாங்குவதற்கு நவிக்ஷன் கடைக்காரரிடம் ரூபாய் 5000.00 கொடுத்தான். அவனுக்கு கிடைக்கும் மிகுதிப்பணம் எவ்வளவு?

    ………………………………………………………………………………

**VIII** **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. எமது நாட்டின் தேசிய கீதத்தில் உள்ள வரிகளின் எண்ணிக்கை யாது?
    i. 29   ii. 27   iii. 25

31. கிழக்கு மாகாணத்தின் தலைநகரம் எது?
    i. மட்டக்களப்பு   ii. திருகோணமலை   iii. அம்பாறை

32. இந்துக்களின் புனித நூல் எது?
    i. பகவத்கீதை   ii. வேதம்   iii. திரிபீடகம்

33. கொழும்பு நகரத்தில் கடலுடன் கலக்கும் நதி எது?
    i. மகாவலி கங்கை   ii. களுகங்கை   iii. களனிகங்கை

34. சூரியன் இருக்கின்ற திசையை நோக்கி திரும்புகின்ற மலர் எது?
    i. நாகமலர்   ii. சூரியகாந்தி   iii. தாமரை

35. பூ ஒன்றில் காயாக மாறும் பகுதி எது?
    i. சூலகம்   ii. குறி   iii. மகரந்தம்

36. பின்வருவனவற்றுள் பானம் தயாரிக்க பயன்படும் இலை எது?
    i. வில்வம்   ii. தேயிலை   iii. எலுமிச்சை

37. பின்வருவனவற்றுள் தாவர உண்ணிகளான மிருகங்கள் எவை?
    i. மான், யானை, கிளி   ii. மான், எலி, முயல்
    iii. மான், முயல், யானை

38. அவசரமாக நோய் காவுவண்டியை அழைப்பதற்கு அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கமானது
    i. 1990   ii. 1991   iii. 1929

39. 

    இக்குறியீடு உணர்த்துவது
    i. நனையக்கூடியது
    ii. நனையக்கூடாதது
    iii. ஈரலிப்பானது

40. சூரிய கிரகணம் தோன்றுவது
    i. பௌர்ணமி தினத்தில்   ii. அட்டமி தினத்தில்   iii. அமாவாசை தினத்தில்

41. பின்வருவனவற்றுள் கல்சியம் அதிகளவு காணப்படும் உணவுகள்
    i. பால், நெத்தலி   ii. பால், சோறு   iii. பால், பயறு

42. வீட்டுத்தோட்டத்தில் பூச்சிகளை வரவிடாது தடுக்க வளர்க்கப்படும் தாவரங்கள்
    i. செவ்வரத்தை, துளசி   ii. செவ்வந்தி, இஞ்சி
    iii. இஞ்சி, வேம்பு

43. நீருடன் தொடர்புடைய தொழில்களில் ஒன்று
    i. பானங்கள் தயாரித்தல்   ii. காகிதங்கள் உற்பத்தி
    iii. பிராணிகள் வளர்ப்பு

44. பாதைகளை சேதப்படுத்துவதனால் ஏற்படும் விளைவு அல்லாதது
    i. பயணத்தடை   ii. வாகன நெரிசல்
    iii. வாகனங்களின் விலை அதிகரிப்பு

45. கப்பல்கள் தரித்து நிற்கும் இடமானது
    i. துறைமுகம்   ii. கடல்   iii. நீர்நிலைகள்

(10ஆம் பக்கம் பார்க்க)

09 ஆம் பக்கத் தொடர்

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

46. பாரமான கல்லை புரட்ட மிகவும் பொருத்தமானது
i. மண்வெட்டி ii. அலவாங்கு iii. தடி

47. காற்றின் வேகத்தால் ஏற்படும் அனர்த்தம் அல்லாதது
i. மண்அரிப்பு ii. சூறாவளி iii. வெள்ளப்பெருக்கு

48. ஒரு வேலையை செய்யத் தொடங்கும் முன் கடைபிடிக்க வேண்டிய விடயமானது
i. திட்டமிடல் ii. ஒற்றுமை iii. விட்டுக்கொடுத்தல்

49. ஆதிகால தொடர்பாடல் முறைகளில் ஒன்றல்லாதது
i. முரசு ii. வானொலி iii. தீ

50. அவுக்கன புத்தர் சிலையை அமைத்த மன்னன்
i. தாதுசேனன் ii. துட்டகைமுனு iii. தேவநம்பியதீசன்

51. அதிக இதழ்களைக் கொண்ட பூக்களில் ஒன்றானது
i. ஓர்கிட் ii. சூரியகாந்தி iii. பவளமல்லிகை

52. கொல்லன் பட்டறையில் நெருப்பு எரிய காற்று வழங்கும் உபகரணம்
i. சாவணம் ii. தணல் இருக்கி iii. துருத்தி

53. தொண்டைக்கழலை நோய் ஏற்படாமல் எம்மை பாதுகாக்க நாம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டிய போசணையானது
i. இரும்புச்சத்து ii. கல்சியம் iii. அயடின்

54. சிவப்பு, நீலம் ஆகிய நிறச்சாயங்களை கலப்பதனால் கிடைக்கும் நிறமானது
i. பச்சை ii. ஊதா iii. கபிலம்

55. அசுத்தமான நீரினால் பரவாத நோயானது
i. மலேரியா ii. மஞ்சட்காமாலை iii. வாந்திபேதி

56. நகரங்களிலுள்ள பிரதான வீதிகளை கடக்க பயன்படும் நவீன முறையானது
i. பாதசாரிக்கடவை ii. நடைபாதை iii. மேம்பாலம்

57. நீரை விரைவாக உறிஞ்சும் மண் வகையானது
i. களிமண் ii. மணல் மன் iii. இருவாட்டி மண்

58. சிறிய தீக்காயங்களுக்கு மருந்தாக பயன்படும் மூலிகையானது
i. கற்றாளை ii. துளசி iii. தூதுவளை

59. கூர்மையான பார்வைத்திறன் கொண்ட பறவையானது
i. ஆந்தை ii. புறா iii. கழுகு

IX.

60. “புத்தகம் வாசிப்பது எம் அறிவை மேம்படுத்தும்” என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் அமைக்குக. ஒவ்வொரு வாக்கியமும் எழுத்து பிழைகளின்றி இருப்பதோடு ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும். எழுவாய் பயனிலை தொடர்பு சரியாக பேணப்பட வேண்டும்.

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

**கடந்த வார (14.10.2022) வினாத்தாள் 1 இற்கான விடைகள்**

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | 3 | 05 | 2 | 09 | 2 | 13 | 3 | 17 | 1 | 21 | 3 | 25 | 1 | 29 | 3 | 33 | 3 | 37 | 2 |
| 02 | 2 | 06 | 3 | 10 | 3 | 14 | 2 | 18 | 3 | 22 | 2 | 26 | 3 | 30 | 1 | 34 | 1 | 38 | 3 |
| 03 | 1 | 07 | 1 | 11 | 3 | 15 | 1 | 19 | 1 | 23 | 1 | 27 | 2 | 31 | 3 | 35 | 1 | 39 | 1 |
| 04 | 2 | 08 | 1 | 12 | 1 | 16 | 2 | 20 | 2 | 24 | 2 | 28 | 2 | 32 | 2 | 36 | 3 | 40 | 1 |

# கிழக்கின் குரல்



## கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளிலுள்ள சவால்களுக்கு தீர்வு காண விஷேட கலந்துரையாடல்

*மட்டக்களப்பு விஷேட நிருபர்*

கழிவுகளை முகாமைத்துவம் செய்வதில் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான கலந்துரையாடல், நேற்று (20) மட்டக்களப்பு மாநகரசபை நகர மண்டபத்தில் நடைபெற்றது. நாளாந்தம் சேரும் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதில் ஏற்பட்ட சர்ச்சையையடுத்தே இக்கூட்டம் கூட்டப்பட்டது.

மட்டக்களப்பு மாநகரசபையின் இருபது வட்டாரங்களிலுமிருந்து நாளாந்தம் சேரும் 45,000 மெட்ரிக் தொன் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதிலே இப்பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இக்குப்பைகள், சேகரிக்கப்படு திருப்பெருந்துறையில் முகாமைத்துவம் செய்யப்பட்டது. இந்நிலையில், சேகரிக்கப்படும் கழிவுகளால் தங்களது சுகாதாரத்திற்கு கேடு விளைவதாக நீதிமன்றத்தில் பொது மக்கள் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.



இதுகுறித்து, விசாரணை நடாத்திய நீதிமன்றம், மட்டுப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் மட்டுமே, மாநகரசபை கழிவுகளை முகாமைத்துவம் செய்ய முடியும் என தீர்ப்பளித்திருந்தது.

இதற்கமைய உக்காத பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகளை ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கொடுவாமடுவில் கொட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டது. போத்தல்களை சேகரித்து சிறு, சிறு துகள்களாக்கி விற்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில், உக்கக்கூடிய கழிவுக் குவியலில் அடிக்கடி தீப் பிடிக்கும் நிலை ஏற்படுகிறது. இதனால், தொடர்ந்து அப்பிரதேசத்தில் குப்பைகளை கொட்ட முடியாதுள்ளது. இதைச்சமாளிக்கும் பொருட்டு, உணவின் மிச்சக் கழிவுகள் மற்றும் பொலித்தீன்களை மட்டுமே தற்போது மாநகரசபை நாளாந்தம் சேகரித்து வருகிறது.

இவற்றுக்குத் தீர்வு காணும் நோக்கோடு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் விஷேட கூட்டம் நடாத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் மாநகரசபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, கரையோரம் பேணல் திணைக்களம், வீதி அபிலிருத்தி அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, சுகாதார வைத்திய அலுவலகம், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகம் மாவட்டச் செயலகம், பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்களது ஆலோசனைகளை முன்வைத்தனர்.

இறுதியில், ஒருவாரத்தினுள் குறித்த பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக துறைசார் அதிகாரிகளைக் கொண்ட குழுவும் அமைக்கப்பட்டது.

## முன்பள்ளி மாணவர்களுக்கு இலைக்கஞ்சி விநியோகம்

*பாலமுனை தினகரன் நிருபர்*



சர்வதேச வறுமை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு அட்டாளச்சேனை பிரதேச சமுர்த்தி பிரிவினர், இலைக்கஞ்சி வழங்கும் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளனர். இதனை, ஆரம்பிக்கும் முகமாக, அட்டாளைச்சேனை, பாலமுனை பிரதேசங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட முன்பள்ளி சிறார்களுக்கு இலைக்கஞ்சிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வு அண்மையில் (17) இடம்பெற்றது.

சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம். ஹமீட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ சி. அஹமட் ஸாபிர், பிரதம அதிதியாகவும் ,உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி எப். நஹீஜா முஸாபிர், சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எல்.இஸ்மாயீல் ஆகியோர் கௌரவ அதிதியாகவும் பங்கேற்றனர். சமுர்த்தி வலய முகாமையாளர் எம்.ஏ.இமாமுதீன்,திட்ட முகாமையாளர் ஏ.எல்.ஏ.அஸீஸ், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எஸ்.எம்.உனைஸ் ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் இதில்,கலந்து கொண்டனர்.



திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டிய நடைபவனி, நேற்றுமுன்தினம் (19) நடைபெற்றது. காலை 8.00 மணிக்கு கல்லூரியிலிருந்து ஆரம்பமாகி, திருகோணமலை பிரதான வீதியூடாக பவனி வலம் வந்தது. தமிழர் பண்பாட்டு நிகழ்வுகளுடன் இந்நடைபவனி இடம் பெற்றமை சிறப்பாகும்.

அன்புவழிபுரம் தினகரன் நிருபர்

## கல்முனையில் உலக நோயாளர் பாதுகாப்பு தினம்!

*காரைதீவு குறுப் நிருபர்*

உலக நோயாளர் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்திய சாலையில் நேற்று (20)உலக நோயாளர் பாதுகாப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா.முரளீஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, உலக சுகாதார ஸ்தாபனத்தின் இந்தவருட நோயாளர்கள் பாதுகாப்பு தினத்தின் குறிக்கோள்கள், இலக்குகளை நோக்காக கொண்டு பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்றன.

நிகழ்வின் ஆரம்பத்தில் பிரதி வைத்திய அதிகாரிகளான டாக்டர் ஜே.மதன், டாக்டர் எஸ் .ராஜேந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.இதனைத் தொடர்ந்து "மெடிகேஷன் சேஃப்டி" என்ற தொனிப் பொருளில்,வைத்திய நிபுணர்களான என். உதயகுமார் டாக்டர் எம்.சமீம், டாக்டர் முஸ்தபா இக்ரம் டாக்டர் எஸ் எம். ரொசாந்த் டாக்டர் எஸ். எம். ரசீன் மொஹமட் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

நிகழ்ச்சிகளை சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர் எஸ்.சிறிகரன் தொகுத்து வழங்கினார்.

## கிராமத்திற்குள் புகுந்த இராட்சத முதலை மடக்கிப்பிடிப்பு

*பெரியபோரதீவு தினகரன் நிருபர்*

மகிழூர் கண்ணகிபுரம் பகுதியில் வியாழக்கிழமை (20) கிராமத்திற்குள் புகுந்த இராட்சத முதலையை, வனஜீவராசிகள் பாதுகாப்பு அதிகாரிகள் பொதுமக்களின் உதவியுடன் மடக்கிப்பிடித்தனர். பிரதேசத்தின் வாவிகளிலிருந்து இது, ஊருக்குள் ஊடுருவியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

மட்டக்களப்பு வாவியிலும், அதனை அண்டிய சிறு குளங்களிலும் முதலைகளின் அட்டகாசங்கள், தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

இதனால், மீனவர்கள் மற்றும் கால் நடைவளர்ப்பாளர்கள் பெரும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், வியாழக்கிழமை அப்பகுதியிலுள்ள வாவியிலிருந்து இக்கிராமத்திற்குள் முதலை புகுந்துள்ளது. இதுகுறித்து வன ஜீவராசிகள் பாதுகாப்பு காரியாலயத்திற்கு அப்பகுதி மக்கள் அறிவித்திருந்தனர். உடன் ஸ்த்தலத்திற்கு விரைந்த அப்பகுதி வன ஜீவராசிகள் பாதுகாப்பு பொறுப்பதிகாரி ப.ஜெகதீஸ்வரன், மற்றும் வன உத்தியோகத்தர்களான வி.ஜெயசாந், எஸ்.சிறிதரன், என். நதீஸ் உள்ளிட்ட குழுவினர் அப்பகுதி மக்களின் உதவியுடள் முதலையை மடக்கிப் பிடித்துள்ளனர்.



சுமார் 8 அடி நீளமுள்ள இராட்சத முதலையையே அதிகாரிகள் மடக்கிப்பிடித்தனர்.இதனை, கல்லோயா சரணாலயத்திலுள்ள குளத்தில் விடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக வெல்லாவெளி மற்றும் களுவாஞ்சிகுடி பகுதிகளுக்குப் பொறுப்பான வன ஜீவராசிகள் பாதுகாப்பு பொறுப்பதிகாரி ப.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

## தமிழ் பிரதேசங்களில் பொலிஸார் முறையாக கடமைகளை செய்யாமல் பெரும் அசிரத்தை

*வாச்சிக்குடா விஷேட நிருபர்*

தமிழ் பிரதேசங்களில் பொலிஸர் கடமைகளை செவ்வனே செய்வதில்லை என்றும், இதனால்,இப்பிரதேசங்களில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதாகவும் அம்பாறை மாவட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று சுவாமி விபுலானந்தா பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா அக்கரைப்பற்று விபுலானந்தா இல்லத்தில் நடைபெற்றது. இங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். தொடர்ந்து பேசிய அவர் கூறியதாவது,

வடக்கிலும், கிழக்கிலும் அதிகமான இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர். இங்கு வாழும் இளைஞர்களை போதைப்பொருளால் அழிக்கும் முயற்சிகளும் திட்டமிட்டு செயற்படுத்தப்படுகின்றன. இதனை நிறுத்தவேண்டிய பொறுப்பு ஆரம்பத்தில் பெற்றோர்களுக்கு இருந்தாலும், சட்டத்தையும், நீதியையும் நிலைநாட்டவேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கே உள்ளது.எனவே பொலிஸார் பொறுப்புடன் செயற்பட வேண்டும். ஆலையடிவேம்பு பிரதேச சபை தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஆட்சியின் கீழ் இல்லாமையும் இங்கு பலவீனமான அரசியல் இடம்பெறுவதற்கு காரணம். எனவே, சமூகத்தில் அக்கறையுள்ள நல்லதொரு பிரதேச சபையை எதிர்காலத்தில் உருவாக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

## கல்முனையில் இரத்ததான முகாம்



*கல்முனை மத்திய தினகரன் நிருபர்*

கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நிலவும் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் பொருட்டு இரத்ததான முகாம் நடாத்தப்பட்டது.

கல்முனை கல்வி,கலாசார மேம்பாட்டு தாபனம் ஏற்பாடு செய்த இந்நிகழ்வு, பள்ளி ஒழுங்கையில் அமைந்துள்ள எக்டொ நூலகத்தில் இடம்பெற்றது.

கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் ஏ.எல்.எப். ரகுமானின் வழிகாட்டலில் இவ்விரத்ததான முகாம் நடைபெற்றது. இரத்த வங்கி பொறுப்பாளர் வைத்தியர் கே.வித்யா தலைமையிலான இரத்த வங்கி பிரிவினர் இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இரத்ததான முகாமில் அதிகமான ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.



கண்டி, மார்க்கட் முஸ்லிம் வாலிப மீலாதுன் ஷெரிப் அமைப்பினால் 75 ஆவது முறையாகவும் இடம்பெற்ற மீலாதுன் நபி விழா மற்றும் கந்தூரி விநியோக வைபவம் கண்டி லைன் பள்ளிவாயல் (மர்கஸ் ) மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றன.அத்தோடு மிலாதுன் ஷெரீப் அமைப்பின் அண்மையில் காலம் சென்ற ஸ்தாபக தலைவர் மர்ஹூம் ஹனிபா ஹாஜியாரின் மறுமை வாழ்வுக்காகவும் விசேட து ஆ பிரார்த்தனை நடைபெற்றது படம் எம்.ஏ.அமீனுல்லா



பெருந்தோட்ட மக்களின் வீட்டுரிமை மற்றும் நிலவுரிமை பாதுகாக்கப்பட வேண்டுமென கோரி கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையோடு மலையகத்தில் தோட்ட மக்களுக்கென நிர்மாணிக்கப்பட்டுள்ள 37,000 வீடுகளுக்கு சட்டபூர்வமான உறுதிப்பத்திரம் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கையளிக்கும் மகஜருக்கான கையெழுத்து வேட்டை மாத்தளை உணுகலை கிராமிய அபிவிருத்தி சங்க ஒன்றியத்தினால் மாத்தளை கொங்காவளை பஸ்தரிப்பு நிலையத்தில் நடைபெற்ற போது,....

படங்கள்: உக்குவளை விசேட நிருபர்

## விவசாயப் பயிர்களை அழித்து, உயிர்களை காவு கொண்ட காட்டு யானை மடக்கிப் பிடிப்பு

*தம்புள்ள தினகரன் நிருபர்.*

சிகிரியா பிரதேச மக்களைத் தொடர்ந்து அச்சுறுத்தி வந்ததுடன், விவசாயப் பயிர்களையும் நாசம் செய்து உயிர்களையும் காவு கொண்ட காட்டு யானையொன்றை வெற்றிகரமாக மடக்கிப் பிடித்து மரத்தில் கட்டிப் போட முடிந்ததாக சிகிரியா வனஜீவி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இக் காட்டு யானை தொடர்ச்சியாக பிரதேசத்திலுள்ள விவசாயப் பயிர் நிலங்களுக்குள் ஊடுருவி தென்னை,வாழை, மற்றும் காய்கறிப் பயிர்களையும் அழித்து நாசம் செய்து வந்ததாகவும் பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

தொடர்ச்சியாக கிடைக்கப் பெற்று வந்த விவசாயிகளின் முறைப்பாடுகளைத் தொடர்ந்து திணைக்களத்தின் கிரித்தலை வனஜீவி வலயத்திற்குப் பொறுப்பான உயரதிகாரி சமீர கலிங்கு ஆரச்சி; யானைகளைப் பிடிக்கும் குழுவினருடன் சென்று மேற்கொண்ட சுற்றி வளைப்பின் பின்னர் சுமார் 30 வயதான காட்டு யானையை சீகிரிய அபய பூமிப் பிரதேசத்தில் வைத்துக் மடக்கிப் பிடித்து கட்டிப் போட்டதாகத் தெரிவித்தார்.

## நாவலப்பிட்டி நகரில் மோட்டார் சைக்கிள் திருட்டு

*நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்*

நாவலப்பிட்டி நகர மத்தியில் உள்ள தனியார் நிதி நிறுவனம் ஒன்றுக்கு பின்புறம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று முன்தினம் ( 19) அடையாளம் தெரியாத இருவரால் திருடிச் செல்லப்பட்டுள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் இருவர், தலைக்கவசம் அணியாமல் திருடிய மோட்டார் சைக்கிளுடன்,நாவல ப்பிட்டியிலிருந்து கம்பளை பகுதி நோக்கி சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

4 இலட்சம் ரூபாய் பெறுமதியான மோட்டார் சைக்கிளைத் திருடிச் சென்ற சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை நாவலப்பிட்டி பொலிஸார் ஆரம்பித்துள்ளதுடன், சந்தேக நபர்கள் மோட்டார் சைக்கிளைத் திருடிச் செல்லும் காட்சிகள், நகரிலுள்ள சீசீடிவி கமராக்களில் பதிவாகியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

## விவசாயத்தில் வன விலங்குகளினால் ஏற்படும் பாதிப்பு தேசிய பிரச்சினையாகியுள்ளது

### இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க

*அக்குறணை குறூப் நிருபர்*

பயிர்ச்செய்கையின் போது வன விலங்குகளினால் ஏற்படும் பாதிப்புகள் தற்போது தேசியப் பிரச்சினையாக மாறி வருகிறது, அதற்கு தனியான தீர்வு காணப்பட வேண்டுமெனவும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

உக்குவெல பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதிப்படுத்தும் கிராமிய பொருளாதார மறுமலர்ச்சி நிலையங்களை வலுவூட்டுவதற்கான பல்துறை கூட்டுப் பொறிமுறைக்கான கூட்டத்திலே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

உக்குவெல பிரதேசத்தின் பல கிராமங்களில் குரங்குகள், காட்டுப்பன்றிகள் மற்றும் மயில்களால் சேதம் ஏற்படுவதால் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக மக்கள் தமது கோரிக்கையை முன்வைத்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,...

தற்போது தேசியப் பிரச்சினையாக மாறி வரும் வனவிலங்குத் தொல்லைக்கு முடிவு கட்ட, ஒருதேசிய கொள்கை உருவாக்கப்பட வேண்டும். இது தொடர்பாக துறை சார்ந்தவர்களுடன் கலந்துரையாடி நாம் விரைவில் நடவடிக்கை எடுப்போம் என்றார். அதற்கு தனியான தீர்வு காணப்பட வேண்டும் என்றும் கூறினார்.


## விலைமனுக்களுக்கான அழைப்பு

**வனசீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சு**

### தேசிய மிருகக்காட்சிச்சாலை திணைக்களம்

### தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்திற்கு Blow Pipe மற்றும் Air Pressure Injector Gun என்பவற்றுக்கான துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

**IFB No. DNZG/A/10/22/11**

பின்வரும் Blow Pipe மற்றும் Air Pressure Injector Gun என்பவற்றுக்கான துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தலுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தேசிய மிருக்ககாட்சிச்சாலைத் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

**அட்டவணை-1**

| இலக்கம் | துணைப்பாகங்கள் | மொத்தத் தேவைப்பாடு |
|---|---|---|
| | Syringes for Dan Injector Gun/pistol - 13 mm barrel | |
| 1. | 10 ml dart syringe mount with stabilizer, to be used in 13 mm (13 mm Ø) Nylon barrel | 06 |
| 2. | 5 ml dart syringe mount with stabilizer, to be used in 13 mm (13mm Ø) Nylon barrel | 10 |
| | Syringes for Dan Injector Gun/pistol - 11 mm barrel | |
| 3. | 1.5 ml dart syringe mount with stabilizer, to be used in 11 mm (11 mm Ø) Nylon barrel | 25 |
| 4. | 3 ml dart syringe mount with stabilizer, to be used in 11 mm (11 mm Ø) Nylon barrel | 75 |
| | Needles to be used in Dan Injector Rifle and Pistol | |
| 5. | Injection needle, Stainless Steel, sharp tip, side pore, Needle shaft diameter 1.5 mm, length 25 mm (1.5 x 25 mm plain) | 25 |
| 6. | Injection needle, Stainless Steel, sharp tip, side pore, Needle shaft diameter 1.5 mm, length 30 mm (1.5 x 30 mm plain) | 30 |
| 7. | Injection needle, Stainless Steel, sharp tip, side pore, Needle shaft diameter 2.0 mm, length 30 mm (2.0 x 30 mm plain) | 15 |
| 8. | Injection needle, Stainless Steel, sharp tip, side pore, Needle shaft diameter 2.0 mm, length 40 mm (2.0 x 40 mm plain) | 10 |
| 9. | Injection needle, Stainless Steel, sharp tip, side pore, Needle shaft diameter 2.0 mm, length 60 mm (2.0 x 60 mm plain) | 10 |
| 10. | Injection needle, Stainless Steel, sharp tip, side pore, Needle shaft diameter 2.2 mm, length 60 mm (2.2 x 60 mm plain) | 10 |
| 11. | Injection needle, Stainless Steel, sharp tip, side pore, Needle shaft diameter 2.2 mm, length 100 mm (2.2 x 100 mm plain) | 10 |
| 12. | Silicone Oil 10 ml to be used to lubricate the black plunger inside the dart syringe for better dart maintenance | 6 |
| 13. | Sealing sleeves only, Colour red for needle diameter: 2.0 and 2.2 mm (50 pcs in a pack) | 40 |
| 14. | Sealing sleeves only, Colour green for needle diameter: 1.5 mm (50 pcs in a pack) | 13 |

2. இந்த விலைகூறல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக் (NCB) கோரல் நடைமுறையின் கீழ் இடம்பெறும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை தெஹிவளை, அனகாரிக்க தர்மபால மாவத்தை, தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்தின் மிருகக்காட்சிச்சாலைத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011-2710807. மற்றும் 2022 ஒக்டோபர் 21ஆம் திகதி முதல் 2022 நவம்பர் 10ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பின்வரும் முகவரியில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. விலைமனுக்களுடன் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
   1. வியாபாரப் பதிவுச் சான்றிதழ்
   2. கடந்த 3 வருடங்களுக்கான விற்பனை வரலாறு பற்றிய ஆவணச் சாட்சி
   3. கடந்த வருடத்திற்கான கணக்காய்வு செய்யப்பட்ட இறுதி அறிக்கை
   4. கடந்த 6 மாதங்களுக்கான வங்கிக் கூற்றுக்கள்
   5. உற்பத்தியாளரின் கடிதத் தலைப்பில் கையொப்பம் மற்றும் நிறுவனத்தின் முத்திரை சகிதம் உற்பத்தியாளரின் அங்கீகாரக் கடிதம் (முறையான அங்கீகாரம்)
5. மீளளிக்கப்படாத கட்டணமான மூவாயிரம் ரூபாவைச் (ரூ. 3000.00) செலுத்துவதன் பேரில், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்த பின்னர் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் செலுத்துதல் வேண்டும்.
6. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை 2022 நவம்பர் 11ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் ஒப்படைத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மேற்படி முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அல்லது நிகழ்நிலை ஊடாக முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
7. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களம்,**
**அனகாரிக தர்மபால மாவத்தை,**
**தெஹிவளை.**



**தாருல் உலூம் அல்-மீஸானிய்யாஹ் அரபுக் கல்லூரி**
**குருகொடை, அக்குரணை**

## அல்குர்ஆன் மனனப்பிரிவிற்கும் இஸ்லாமிய கற்கைகள் பிரிவிற்கும் புதிய மாணவர்கள் சேர்த்தல்

- அல்குர்ஆன் மனனப்பிரிவிற்கு 12 வயதுக்கு மேற்படாத அல்குர்ஆனை சரளமாக ஓதத் தெரிந்த தரம் 6க்கு சித்தியடைந்த மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.
- இஸ்லாமிய கற்கைகள் பிரிவிற்கு அல்குர்ஆனை சரளமாக ஓதத் தெரிந்த, தரம் 9க்கு சித்தியடைந்த 14 வயதுக்கு மேற்படாத மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

நேர்முகப்பரீட்சை அல்குர்ஆன் மனனப்பிரிவிற்கு 06.11.2022 ஞாயிறு காலை 9.00 மணிக்கும், இஸ்லாமிய கற்கைகள் பிரிவிற்கும் 07.11.2022 திங்கள் காலை 9.00 மணிக்கும் கல்லூரியில் நடைபெறும்.

முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்களுடன் 03.11.2022 திகதிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். அல்லது நேர்முகப் பரீட்சை திகதியன்று நேரடியாக கல்லூரிக்கு எடுத்துவரவும்.

**076 4716333/077 2791755**
**The Secretary,**
**Dharul Uloom Al-Meezaniyyah,**
**Kurugoda, Akurana.**



## இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை

### முதலீட்டு சந்தர்ப்பங்கள்

### எரிபொருள் களஞ்சியப்படுத்தும் தாங்கிகள்/கொழும்பு எண்ணெய் குதங்களின் இடப்பரப்புக்கள் மற்றும் அருகாமையிலுள்ள இடப்பரப்புக்களில் அவற்றை தாபித்தல் மற்றும் இயக்க செயற்பாட்டிற்காக நீண்டகால குத்தகையில் காணிகளை வழங்குவதற்கான விலைமனு

**REF. No.: EW/6/PT/2022/03/MW**

1. கொழும்பு துறைமுக எல்லைகளுக்குள் 30 வருட கால எல்லைக்கு எரிபொருள் களஞ்சியப்படுத்தும் தாங்கிகள்/கொழும்பு எண்ணெய் குதங்கள் அமைந்துள்ள இடப்பரப்புக்கள் மற்றும் அருகாமையிலுள்ள இடப்பரப்புக்களில் மேற்குறிப்பிட்டுள்ளவற்றை தாபித்தல் மற்றும் செயற்படுத்துவதற்காக இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் தலைவரின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் பெறுமதிமிக்க காணிகளை குத்தகைக்கு வழங்குவதற்காக விரும்புகின்றார்.
2. காணிகளின் விபரங்கள் பின்வருமாறு: கொழும்பு-15, வோல்ஸ் ஒழுங்கை 69 ஆம் இலக்கத்திலுள்ள 0.34 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ள 1 ஆம் இலக்க காணித்துண்டு மற்றும் 1 ஆம் இலக்க காணித்துண்டிற்கு அருகாமையிலுள்ள **0.62** ஹெக்டேயர்கள் விஸ்தீரணமுள்ள 2 ஆம் இலக்க காணித்துண்டு.
3. கீழே அமைந்துள்ள மற்றும் விலைமனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள பணிப்புரைகளின் அடிப்படையில் வளமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முன்மொழிவுகள் அழைக்கப்படுகின்றன.
4. **ஒவ்வொரு காணித் துண்டிற்குமான விலைமனுப் பிணையானது, 1,000,000.00 ரூபாவென்பதுடன்** இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாத மூலமாக அல்லது இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் நிதிப் பிரிவில் ரொக்கப் பணத்தில் வரவு வைக்கப்படல் வேண்டும். வங்கி உத்தரவாதம் அல்லது ரொக்கப் பணக்கொடுப்பனவின் பற்றுச்சீட்டு ஆகியன இரு பிரதிகளில் முன்மொழிவுகளின் ஒவ்வொரு சமர்ப்பித்தலுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
5. 2022.10.21 ஆம் திகதியிலிருந்து 2022.11.18 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 10 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் கொழும்பு-01, லேடன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் பொறிமுறை வேலைகளுக்கான பிரதான பொறியியலாளரினால் விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு விலைமனுவிற்கும் பெசேவ அடங்கலாக 100,000 ரூபாவை மீளளிக்கப்படாத வைப்பாக செலுத்திய பின்னர், விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். முன்மொழிவுகளின் ஒவ்வொரு சமர்ப்பித்தலுடனும் பணவரவிற்கான பற்றுச்சீட்டின் பிரதியொன்று இரு பிரதிகளில் இணைக்கப்படல் வேண்டும். பொறிமுறை வேலைகளுக்கான பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களின மாதிரிப் பிரதியொன்று பார்வையிடுவதற்காக வைக்கப்பட்டுள்ளது. 2022.10.21 ஆம் திகதியிலிருந்து 2022.11.18 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 10 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் ஆர்வமுள்ள சாரார் விலைமனு ஆவணங்களின் மாதிரிப் பிரதியை இலவசமாக பார்வையிடலாம்.
6. மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் 2022.11.09 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமும் அதனைத் தொடர்ந்து தள பார்வையிடலுக்கும் ஏற்பாடு செய்யப்படும்.
7. முன்மொழிவுகள் பாதுகாப்பாக முத்திரையிடப்பட்ட தபாலுறையில் அடக்கப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் "Establishment and Operation of Fuel Storage Tanks/Facility in Colombo Oil Bank premises and adjacent areas (Ref. No. EW/6/PT/2022/03/MW) – Plot No. 1/2" என குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் பிரதான பொறியியலாளர் (பொறிமுறை வேலைகள்), இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-01, லேடன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள தொழில்நுட்பத்திற்கான பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
8. முன்மொழிவுகள் 2022.11.21 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 2022.11.21 ஆம் திகதியன்று பி.ப. 2.15 மணிக்கு முன்மொழிவுகள் திறக்கப்படும். முன்மொழிவுகளை திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமுள்ள பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.
9. அதிகரிக்கப்பட்ட வருமானம், வேலைவாய்ப்பு உருவாக்கம் இன்னும் பலவற்றை பெறுவதற்காக பெறுமதி சேர்ப்பு மூலமாக அதிகரிக்கப்பட்ட பொருளாதார செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக ஆகக் குறைந்த தகைமை தகவுத்திறனானது பின்வருமாறு இருத்தல் வேண்டும்.
   (1) **ஒவ்வொரு காணித் துண்டிற்கும் எதிர்பார்க்கப்படும் ஆகக் குறைந்த முதலீடானது 10 மில்லியன் அ.ஐ. டொலராகும்.**
   (2) சித்திகரமான விலைமனுதாரர் ஒப்பந்தத்தை வழங்கும் கடிதத்தை பெற்றுக் கொண்டதும் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட முன்னர், முழுத் தொகையையும் செலுத்தும் வரையும் ஆவணங்களை தடுத்து வைத்தல் (escrow) கணக்கொன்றில் 5 மில்லியன் அ.ஐ.டொலரை வரவு வைப்பதுடன் குத்தகை உடன்படிக்கையை கைச்சாத்திடும் திகதியன்று மீதி முதலீட்டை வரவு வைப்பதுடன் செயற்பாட்டாளர் அவ்வாறான தொகையை நிர்மாண வேலைகள் மற்றும் குத்தகை வாடகைக்கு மாத்திரம் பயன்படுத்தல் வேண்டும். சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்காக எக்ஸ்ரோ கணக்கானது நிர்மாண வேலைகள் பூர்த்தியாகும் வரையும் எக்ஸ்ரோ கணக்கானது பேணப்படல் வேண்டும்.
   (3) விலைமனுதாரர் கம்பனியொன்றாக/ கூட்டுமுயற்சியாக/ நிறுவனங்களின் கூட்டமைப்பாக இருப்பதுடன் கடந்த மூன்று (3) வருட கால எல்லைக்குள் 5 மில்லியன் அ.ஐ.டொலர் தேறிய வருமானமாகவிருத்தல்.
   (4) கடந்த ஐந்து (5) வருடங்களில் மூன்று (3) வருடங்களில் வருடமொன்றிற்கு பெற்றோலியம் தொடர்பான உற்பத்திகளில் ஆகக் குறைந்தது 50,000 மெ.தொன்னை கையாளுவதின் அனுபவத்தை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
10. ஒரு காணித்துண்டிற்கு மேலதிகமாக விலைமனுதாரரொருவர் விலைமனுவை சமர்ப்பிப்பதெனின், தனித்தனியான ஆவணங்களின் தொகுதியொன்றும் விலைமனுப்பிணையும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
11. குத்தகை உடன்படிக்கையை கைச்சாத்திட முன்பதாக எந்தவொரு நேரத்திலும் எந்தவொரு முன்மொழிவையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் அல்லது குத்தகைக்கு வழங்கல் செயற்பாட்டை இரத்துச் செய்வதற்காக உரிமையை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது கொண்டுள்ளது.
12. எந்தவொரு மேலதிக விபரங்களையும் பொறிமுறை வேலைகளுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து மேலேயுள்ள முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி: 011-2451906)

**பிரதான பொறியியலாளர் (பொறிமுறை வேலைகள்),**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**





கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்தி கிளையினால், ஏற்பாடு செய்திருந்த தேசிய மீலா தின விழா கல்வி அமைச்சின் 7ம் மாடி கேட்போர் கூடத்தில், நேற்று கல்வி அமைச்சின் செயலாளர் .ரணசிங்க தலைமையில் நடைபெற்றது. விழாவில், பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் கலந்து சிறப்பித்தார். அத்தோடு கல்வி அமைச்சின் உயரதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### கிளங்கன் வைத்தியசாலைக்கு

# மின்சாரத்தை கட்டுப்படுத்தும் (யு.பி.எஸ்.) இயந்திரம் கையளிப்பு



**நுவரெலியா தினகரன் நிருபர்**

ஹற்றன் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு மிகவும் அவசரமாக தேவைப்பட்ட மின்சாரத்தை கட்டுப்படுத்தும் (யு.பி.எஸ்.) இயந்திரம் ஒன்றை டிக்கோயா ரோட்டரி கழகத்தின் ஏற்பாட்டில் அஸ்திரேலியா கெளி ஹில்ஸ் ரோட்டரி கழகத்தின் முழுமையான பங்களிப்புடன் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் டிக்கோயா ரோட்டரிக் கழகத்தின் தலைவர் சுப்பிரமணியம் தியாகு, உறுப்பினர்களான டாக்டர்.சந்திரராஜன் ராஜேந்திரன், சோமசுந்தரம் சப்பாணி ஆகியோர் கலந்து கொண்டதுடன் கிளங்கன் வைத்தியசாலையின் சார்பாக வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எப்.எம்.பஸ்லி கலந்து கொண்டதுடன் அவரிடம் இயந்திரம் கையளிக்கப்பட்டது.

இந்த இயந்திரம் இல்லாத காரணத்தால் பல சிரமங்களை தாங்கள் எதிர் நோக்கியதாகவும் இதனால் நோயாளர்களுக்கு தங்கு தடையின்றி பல சேவைகளை முன்னெடுக்க முடியும் எனவும் வைத்திய அதிகாரி வைத்தியர் பஸ்லி தெரிவித்தார்.


# தொம்பே பிரதேச சபை

## 2023 வருடத்திற்கு வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்குவதற்காக, வழங்குநர்கள் மற்றும் கைத்தொழிற்துறை வேலைகளை மேற்கொள்வதற்காக ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் 2022.10.24 முதல் 2022.11.30 அன்று பி.ப. 3.00 மணி வரையான வாரத்தின் அனைத்து வேலை நாட்களிலும் பொறுப்பேற்கப்படும்.

பதிவிற்காக விண்ணப்பிக்கும் நிறுவனத்தின் அல்லது நபரின் சுயவிபரக் கோவை உள்ளிட்ட விண்ணப்பமொன்றை நீங்களே தயார் செய்து கொள்ள வேண்டும். இந்த அனைத்து விண்ணப்பங்களும் பதிவுக் கட்டணத்துடன், பதிவுத் தபாலில் ‘தலைவர், தொம்பே பிரதேச சபை, கிரிந்திவெல’ என்ற முகவரிக்கு 2022.11.30 அன்று பி.ப. 3.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். வழங்குநருக்கு எந்தவொரு உருப்படி தொகையையும் வழங்குவதற்காக பதிவு செய்து கொள்ள முடிவதுடன், உருப்படியொன்றிற்காக ரூ. 1000.00 (வரி நீங்கலானது) செலுத்தப்படல் வேண்டும். இது தொடர்பாக காசுக் கட்டளை பொறுப்பேற்கப்படாததுடன் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கிரிந்திவெலயில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்திற்கு வந்து காசோலை மூலம் அல்லது ரொக்கப்பணமாக செலுத்தப்படல் வேண்டும். காசோலை மூலம் பணம் செலுத்தப்படுவதானால் ‘தலைவர், தொம்பே பிரதேச சபை’ என்ற பெயரில் காசோலை அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ‘வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2023’ எனக் குறிப்பிட வேண்டும்.

**அட்டவணை இல 01**

**(அ) வழங்கல்கள்**

01. அலுவலக உபகரணங்கள் (உலோகம், பிளாஸ்டிக் மற்றும் மரத்திலான உபகரணங்கள்)
02. காகிதாதிகள்.
03. வீதி விளக்கு தொகுதி மற்றும் அனைத்து மின்சார பராமரிப்பு உபகரணங்கள்.
04. குப்பை வண்டி, சுகாதார உபகரணங்களை வழங்கல்.
05. கட்டிடப் பொருட்கள் மற்றும் நிறப்பூச்சு வகைகள்.
06. வாகனங்களைப் புதுப்பித்தல், டின்கரின், பெயின்டின் போன்றவை.
07. கைத்தொழில் உபகரணங்கள், வீதி உபகரணங்கள் மண்வெட்டி மற்றும் பட்டறை ஆயுதங்கள் வழங்கல்
08. சீருடைத் துணி மற்றும் பாதணிகள்.
09. கொங்கிறீட் ஹியும் குழாய்கள்
10. அனைத்து வகையான தார்.
11. தட்டச்சு, ரோணியோ இயந்திரம், போட்டோக்கொப்பி இயந்திரம், கணக்கிடும் இயந்திரம், கணனி இயந்திரம் போன்ற உபகரணங்கள் வழங்கல்.
12. நுண்ணுயிர் கொல்லி பொருட்கள் வழங்கல்.
13. இலொக்ட்ரோணிக் உபகரணங்கள் வழங்கல்.
14. டயர், டியூப், டேபர் மற்றும் வாகன பற்றரி வகைகளை வழங்கல்.
15. விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்.

**(ஆ) சேவைகளை வழங்கல்**

01. நொத்தாரிஸ் மற்றும் சட்டத்தரணி சேவைகள்.
02. நில அளவை சேவை.
03. வாகனங்களைப் புதுப்பித்தல்.
04. பட்டறை தொழிலாளிகளின் சேவை.
05. களி பவுசர்/ நீர் பவுசரை வாடகைக்கு வழங்கல்.
06. தகனசாலையைப் பழுதுபார்த்தல்.
07. வளிச்சீராக்கிகளைப் பழுதுபார்த்தல் (வாகனம் மற்றும் அலுவலகம்)
08. காகிதாதிகள் அச்சிடல்
09. குப்பை வண்டிகள், சுகாதார உபகரணங்களைப் பழுதுபார்த்தல்.
10. மோட்டார் வாகனங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் குஷன் வேலை.
11. தட்டச்சு, ரோணியோ இயந்திரம், போட்டோக் கொப்பி இயந்திரம் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல்.
12. கணனி இயந்திரங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்.
13. அபாயகரமான மரங்களை வெட்டி அகற்றல்.
14. மொழிபெயர்ப்புச் சேவைகளை வழங்கல் (ஆங்கிலம்/ தமிழ்)

**(இ) ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்ளல்.**
**ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான கட்டணம்.**

| | | |
|---|---|---|
| 01. | ரூ. 100,000.00 இற்குக் குறைவான ஒப்பந்தங்கள் தொடர்பாக | ரூ. 1000.00 |
| 02. | ரூ. 100,001.00 முதல் 250,000.00 வரை | ரூ. 1500.00 |
| 03. | ரூ. 250,001.00 முதல் 500,000.00 வரை | ரூ. 2000.00 |
| 04. | ரூ. 500,001.00 முதல் 1,000,000.00 வரை | ரூ. 2500.00 |
| 05. | ரூ. 1,000,001.00 இற்கு மேற்படும் ஒப்பந்தங்கள் தொடர்பாக | ரூ. 3000.00 |

**பொதுவான நிபந்தனைகள்**

01. முன்னைய வருடத்தில் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்பட்ட வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள், பதிவு செய்து கொள்ளப்படமாட்டார்கள் என்பதுடன் அவர்களின் விண்ணப்பங்கள் இரத்துச் செய்யப்படும்.
02. பதிவு செய்து கொள்வது தொடர்பாக விண்ணப்பிக்கும் அனைத்து வழங்கல் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் தமது வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்குபவர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள், அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட வரி நிபந்தனைகளுக்கு மற்றும் சபை சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படல் வேண்டும்.
04. வழங்குநர்கள் குறைந்தபட்சம் 60 நாட்கள் கடன் வசதியொன்றைப் பெற்றுக்கொடுப்பது கட்டாயமாகும்.
05. தேவைப்படும் பட்சத்தில் பதிவு பட்டியலிற்கு வெளியேயும் பண்டங்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை தொம்பே பிரதேச சபை கொண்டுள்ளது.
06. உருப்படி 01 இற்கு மேல் விண்ணப்பிப்பவர்களேயானால் ஒவ்வொரு உருப்படி தொடர்பாகவும் வெவ்வேறாக விண்ணப்பித்து குறித்த பதிவுத் தொகையைச் செலுத்துவது கட்டாயமாகும்.
07. மேலதிக விபரங்கள் தேவையெனில், எமது பொது தொலைபேசி இலக்கமான 033-2269260 இற்கு அழைத்து அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

**2022.10.19**

**பியசேன காரியப் பெரும,**
**கௌரவ தலைவர்,**
**தொம்பே பிரதேச சபை**



**கைத்தொழில் அமைச்சு**

# பிசீசீ லங்கா லிமிட்டட்

## கழற்றி அகற்றப்பட்டுள்ள இயந்திராதிகள் மற்றும் கழிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக் கோரல்

பிசீசீ லங்கா லிமிட்டட் கேள்விச் சபையின் தலைவரால் நிறுவனத்தின் இயந்திர வேலைத்தள பிரிவில் கழற்றி அகற்றப்பட்ட செயற்பாட்டு நிலைமையிலான இயந்திராதிகள் மற்றும் கழிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கான பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படுகின்றன.

| | |
|---|---|
| 500 KVA, 600 KVA, 800 KVA Transformers | 4' Plate Rolling Machine |
| Bed Centre Lath Machine | Overhead Travelling Crane |
| Grinding Machine | Power Hacksaw |
| Gear Box | Bar Cutter Machine |
| Pedestal grinding with 10HP Motor | Face Plate Mounted on RSJ Frame |

மேலும் இயந்திர பாகங்கள் மற்றும் கழிக்கப்பட்ட பொருட்கள்

ரூ. 3000/- மீளளிக்கப்படாத மற்றும் ரூ. 25,000/- மீளளிக்கப்படும் பைப்பின் கீழ் மேற்படி இயந்திராதிகள் மேலும் இயந்திர பாகங்கள் மற்றும் கழிக்கப்பட்ட பொருட்களுக்காக 2022 ஒக்டோபர் 24 முதல் 2022 நவம்பர் 02 வரை கேள்விப் பத்திரங்களை தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மிளளிக்கப்படாத மற்றும் மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை காசாளரிடம் செலுத்தி அதற்காக விநியோகிக்கப்படும் கேள்விப் பத்திர இயக்கத்தை கேள்விப் பத்திரத்தில் முறையாக குறப்பிடுதல் வேண்டும். 2022 ஒக்டோபர் 24 முதல் 2022 நவம்பர் 02ஆம் திகதி வரை சகல வேலை நாட்களிலும் (வாரத்தின் 5 நாட்களுக்குள்) மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை ஹல்ஸ்டொப் மில்ஸ், மீரானியா வீதி, கொழும்பு -12இல் பிசீசீ லங்கா லிமிட்டட் நிறுவனத்திற்கு பொருட்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

2022 நவம்பர் 03ம் திகதி பி.ப. 2.00 இற்கு கேள்விப் பத்திரங்களைப் ஏற்றுக் கொள்ளல் முடிவடைவதுடன் அதன் பின் அவ்வேளையிலேயே பிசீசீ லங்கா லிமிட்டட் ஹல்ஸ்டொப் மில்ஸ், மீரானியா வீதி, கொழும்பு -12 அலுவலகத்தில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் வேலையில் சமுகமளிக்கலாம்.

**தலைவர் கேள்விச் சபை,**
**பிசீசீ லங்கா லிமிடட்,**
**ஹல்ஸ் டொப் மில்ஸ்,**
**மீரானியா வீதி, கொழும்பு -12**

**தொலைபேசி: 011-2422111, 011 2438755, 011-2327049.**



# பொது வைத்தியசாலை – ஸ்ரீ ஜயவர்தனபுர

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**கேள்வி இல.: Q – 412/22**

**TENDER FOR THE OBTAINING CONSULTANCY SERVICE FOR STUDY AND UPGRADE SOFTWARE SYSTEMS**

கீழே விபரிக்கப்பட்டவாறு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு **“ study and upgrade software systems”** ஆகியவற்றிற்காக உசாத்துணை சேவையை பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கத்துடன் இணைந்த தொழில்சார் நிறுவனங்கள்/ தனியார் தொழில்சார் நிறுவனங்களிடமிருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சார்பாக திணைக்கள உசாத்துணை பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார். அரசாங்கத்துடன் இணைந்த தொழில்சார் நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

1. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கடந்த 10 வருடங்களில் நிகரான அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 0112778610-நீடிப்பு 3142/ 0112778624 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் பணிப்பாளரிடமிருந்து பெற்று கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
4. 2022.11.09 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக மூவாயிரம் ரூபாவை (3,000 ரூபா) செலுத்திய பின்னர், நுகேகொட, தளபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வழங்கல் அலுவலருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
5. 2022.11.10 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை, தளபத்பிட்டிய, நுகேகொட என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது தலைவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், விரிவுரை மண்டபத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
6. கேள்வியை முடுவதற்கு முன்னராக வைத்தியசாலையிலுள்ள தகவல் தொழில்நுட்ப அலகுடன் தொடர்பு கொள்வதன் மூலம், சிஸ்டத்தை (System) பரீட்சிக்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள உசாத்துணை பெறுகைக் குழு,**
**பொது வைத்தியசாலை - ஸ்ரீ ஜயவர்தனபுர,**
**தளபத்பிட்டிய, நுகேகொட.**




# சீனன்கோட்டை ஆரம்ப பாடசாலையில் முப்பெரும் விழா

பேருவளை சீனன்கோட்டை ஆரம்ப பாடசாலையின் முப்பெரும் விழா எதிர்வரும் புதன்கிழமை (26) மு.ப 10.30 மணிக்கு பாடசாலையின் இரீபதுல் கைரா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ஜனாபா எம்.வை.எப் ஜெஸீலா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் புதிய மாணவர் தலைவர்களுக்கு சின்னம் சூட்டல், சுற்றாடல் கழக அங்கத்தவர்களுக்கு சின்னம் சூட்டல் மற்றும் புதிய கற்றல் வள நிலைய திறப்பு விழாவும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வியாபார அபிவிருத்தி ஆலோசனை ஊக்குவிப்பு பேச்சாளரும் Elon கல்லூரியின் பணிப்பாளருமான மபாஸ் மக்கி மற்றும் விசேட அதிதியாக பன்னில பிரதேச கிராம சேவகர் திருமதி எம்.என்.எப் நஸ்லா ஆகியோர் கலந்து சிறப்பிப்பர்.

இந்நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள் உட்பட பெற்றோர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# கண்டியில் கவிதை நூல் வெளியீடு

**எம்.ஏ.அமீனுல்லா**

உடதும்பர பிரதேச செயலாளர் திருமதி நிலூஷா மனோரத்னவினால் தொகுக்கப்பட்ட 'கவி சித்தம் தம்பாட்டாய்' கவிதை நூல் வெளியீட்டு விழா மத்திய மாகாண ஆளுநர் லலித் யு.கமகே தலைமையில் கண்டி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (19) நடைபெற்றது.

அரச உத்தியோகத்தர் ஒருவரின் அனுபவங்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட இந்தக் கவிதைத் தொகுப்பு நூல் ஆளுநருக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது விழாவுக்கு ஹுன்னஸ்கிரிய தலதா விகாரையின் பிரதம வண. கெவுல்கம ஹேமலோக தேரர், மத்திய மாகாண பிரதம செயலாளர் காமினி ராஜரத்ன, கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

டி20 உலகக் கிண்ணத்திற்கான இலங்கைக் குழாத்தில் இருந்து இடதுகை துடுப்பாட்ட வீரர் தனுஷ்க குணதிலக்கவும் காயம் காரணமாக விலகியுள்ளார். அவருக்கு பதில் மேலதிக வீரரான அஷேன் பண்டார அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தொடைப் பகுதியில் காயத்திற்கு உள்ளான குணதிலக்க ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு எதிரான போட்டியில் ஆடவில்லை. அவரது காயம் தீவிரம் அடைந்ததை அடுத்தே உலகக் கிண்ணத் தொடரில் இருந்து வெளியேறியுள்ளார்.

இந் நிலையில் இலங்கை குழாத்துடன் அவுஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்ட அஷேன் பண்டாரவை இலங்கை அணியில் இணைக்க ஐ.சி.சி தொழில்நுட்பக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

ஏற்கனவே துஷ்மன்த சமீர மற்றும் டில்சான் மதுசங்க இலங்கை அணியில் இருந்து விலகிய நிலையில் அவர்களுக்குப் பதிலாக கசுன் ராஜித மற்றும் பினுர பெர்னாண்டோ இணைக்கப்பட்டுள்ளனர்.

## பத்துமுக்கு சிறு காயம்



நெதர்லாந்துக்கு எதிரான போட்டியின்போது இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பத்தும் நிசங்கவுக்கு சிறு காயம் ஏற்பட்டுள்ளது. இதனால் அவர் நேற்றைய போட்டியில் களத்தடுப்பில் ஈடுபடவில்லை.

துடுப்பெடுத்தாடிய நிசங்க 21 பந்துகளில் 14 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார். அவரின் தொடைப் பகுதியில் சிறு காயம் ஏற்பட்டுள்ளதாக அணி முகாமைத்துவம் தெரிவித்துள்ளது.

முன்னெச்சரிக்கையாக அவர் ஸ்கேன் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே காயம் காரணமாக இலங்கை குழாத்தில் இருந்து மூன்று வீரர்கள் வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கால்பந்து சம்மேளனத்தின் தேர்தலை நடத்த உறுதி



இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தேர்தலை 69 நாட்களுக்குள் நடத்த நடவடிக்கை எடுப்பதாக விளையாட்டு அபிவிருத்தி பணிப்பாளர் நாயகம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று உறுதி அளித்துள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில், இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமர் மற்றும் செயலாளர் உபாலி ஹெவகே ஆகியோர் தாக்கல் செய்த வழக்கு விசாரணைக்கு வந்தபோதே இந்த உறுதி அளிக்கப்பட்டது.

தேர்தலை விரைவாக நடத்துமாறு கோரி 40 கால்பந்து லீக்குகள் இந்த வழக்கில் இடையீட்டு மனுதாரர்களாக இணைந்துள்ளதாகவும் ஜஸ்வர் உமர் கூறினார். துரிதமாக தேர்தலை நடத்துவதன் மூலம் விரைவாக இந்த பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

## உலகக் கிண்ணத்தில் இருந்து விலகுவதாக பாக். எச்சரிக்கை



பாகிஸ்தானில் நடைபெறும் 2023 ஆசிய கிண்ணத்திற்கு இந்தியா தனது அணியை அனுப்பாது என்று அந்நாட்டு அதிகாரிகள் கூறிய நிலையில், இந்தியாவில் நடைபெறும் அடுத்த உலகக் கிண்ணத்தில் இருந்து பாகிஸ்தான் விலகும் என்று பாக். கிரிக்கெட் சபை எச்சரித்துள்ளது.

ஆசிய கிரிக்கெட் கௌன்சிலின் தலைவராகவும் உள்ள இந்திய கிரிக்கெட் சபை செயலாளர் ஜெ ஷாஹ், பாகிஸ்தானுக்கு இந்திய அணியை அனுப்ப முடியாது என்றும் மாற்றாக ஆசிய கிண்ணம் பொதுவான இடம் ஒன்றுக்கு மாற்றப்படக் கூடும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கடுமையான பதில் கொடுத்துள்ளது. "இவ்வாறான அறிக்கைகள் ஆசிய மற்றும் சர்வதேச கிரிக்கெட் சமூகத்தை பிளவுபடுத்தும்" என்று அது கூறியுள்ளது.

இது 2023 உலகக் கிண்ணத்திற்காக பாக். அணி இந்தியா செல்வது மற்றும் 2024–2031 இந்தியாவில் நடைபெறும் ஐ.சி.சி போட்டிகளில் தாக்கம் செலுத்தும் என்று பாகிஸ்தான் எச்சரித்துள்ளது.

2012 தொடக்கம் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் தமது சொந்த மைதானத்தில் மற்ற அணியை எதிர்கொண்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஸஹிரியன் பிரிமியர் லீக் கிரிக்கெட் இன்று ஆரம்பம்

மாளிகைக்காடு குறூப் நிருபர்

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி பழைய மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் இடம் பெறும் மெற்றோபொலிடன் ஸஹிரியன் பிரிமியர் லீக் கிரிக்கெட் சுற்று போட்டி இன்று (21) ஸாஹிரா தேசியக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

ஸாஹிரா தேசியக் கல்லூரி பாடசாலை பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து 29 அணிகள் பங்கு கொள்ளும் 07 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியின் கல்லூரி முதல்வர் எம்.ஐ ஜாபிர் தலைமையில் இடம் பெறவுள்ள ஆரம்ப நிகழ்வில், கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும், மெற்றோபொலிடன் கல்லூரியின் தவிசாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் பிரதம அதிதியாக கலந்து கொள்கிறார்.

இந்தத் தொடரின் இறுதிப் போட்டி வரும் திங்கட்கிழமை (24) நடைபெறவுள்ளது.

## நமீபியாவின் தோல்வியால் அடுத்த சுற்றில் நெதர்லாந்து



ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு எதிரான போட்டியில் 07 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்த நமீபிய அணி டி20 உலகக் கிண்ண அரம்ப சுற்றில் இருந்து வெளியேறியுள்ளது. இதனை அடுத்து ஏ குழுவில் இருந்து இரண்டாவது அணியாக நெதர்லாந்து அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது.

கீலொங்கில் நேற்று நடைபெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஐக்கிய அரபு இராச்சியம் 20 ஓவர்களுக்கும் 3 விக்கெட்டுகளை இழந்து 148 ஓட்டங்களை பெற்றது.

எனினும் பதிலெடுத்தடிய நமீபிய அணி ஆரம்பம் தொடக்கம் மளமள வென்று விக்கெட்டுகளை பறிகொடுத்தது. இறுதியில் அந்த அணி 20 ஓவர்கள் முடிவில் 08 விக்கெட்டுகளை இழந்து 141 ஓட்டங்களை பெற்றது.

## தீபாவளிக்கு பட்டாசு கொளுத்தினால் சிறை



இந்திய தலைநகர் டெல்லியில் சூழல் மாசு மோசமடைந்திருக்கும் நிலையில் தீபாவளி காலத்தில் அங்கு பட்டாசு கொளுத்தினால் ஆறு மாத சிறைத் தண்டனைக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும் என்று நகரின் சுற்றுச்சூழல் அமைச்சு அறிவித்துள்ளது.

பட்டாசு கொளுத்தி அகப்பட்டால் 200 இந்திய ரூபா அபராதமும் விதிக்கப்படும் என்று அரசு குறிப்பிட்டுள்ளது.

தீவிரமான சூழல் மாசை கட்டுப்படுத்துவதற்கு கடந்த செப்டெம்பரில் அறிவிக்கப்பட்ட பட்டாசு கொளுத்துவதற்கான தடையை விரிவுபடுத்துவதாகவே தற்போதைய அறிவிப்பு உள்ளது. டெல்லி உலகின் மோசமான சூழல் மாசு கொண்ட நகராக உள்ளது.

# சர்வதேச செய்திகள்

## பிரிட்டன் பிரதமருக்கு ஆளும் கட்சியில் எதிர்ப்பு வலுக்கிறது



பிரிட்டன் உள்துறை அமைச்சர் சுவெல்லா பிரவெர்மன் பதவி விலகி, பாராளுமன்றத்தில் ஷெல் கேஸ் தொடர்பான வாக்கெடுப்பில் கன்சர்வேட்டிவ் எம்.பிக்கள் வெளிப்படையாக மோதலில் ஈடுபட்ட நிலையில் பிரதமர் லிஸ் டிரஸ் தனது பதவியை தக்கவைத்துக்கொள்ள போராட வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

பிரவெர்மனின் பதவி விலகல் மூலம் டிரஸ் ஒரு வாரத்திற்குள் தனது அமைச்சரவையில் இரு மூத்த உறுப்பினர்களை இழந்துள்ளார். அவரது தலைமைக்கு இவர்கள் ஆதரவு அளிக்கவில்லை.

பிரதமர் லிஸ் டிரஸ் பதவி விலக வேண்டும் என்று ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளனர்.

பதவி விலகிய பிரவெர்மன், பிரதமர் லிஸ் டிரஸின் அரசாங்கம் குறித்துத் தமக்குச் சில ஆழ்ந்த கவலைகள் ஏற்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், லிஸ் டிரஸைப் பதவியில் அமர்த்தியவர்களைத் 'திறமை இல்லாதவர்கள்' எனக் குறிப்பிட்டுக் குறை கூறினார்.

இந்நிலையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற வாக்கெடுப்பில் அரசு வெற்றியீட்டியபோதும் ஆளும் கட்சியின் 40 எம்.பிக்கள் வாக்களிப்பதை தவிர்த்துள்ளனர். இது ஆளும் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிளவை வெளிப்படையாக காண்பிப்பதாக உள்ளது.

பதவிக்கு வந்து ஆறு வாரங்களே கடந்திருக்கும் நிலையில் கடந்த செப்டெம்பர் 23ஆம் திகதி இடைக்கால வரவுசெலவுத் திட்டம் ஒன்றை ஆரம்பித்தது தொடக்கம் டிரஸின் பதவிக்கு ஆளும் கட்சிக்குள் எதிர்ப்பு வலுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கால்நடை ஏப்பத்திற்கு வரி: நியூசிலாந்தில் ஆர்ப்பாட்டம்



பண்ணை விலங்குகளின் பசுமை இல்ல வாயு உமிழ்வுக்காக வரி விதிக்கும் அரசின் திட்டத்திற்கு எதிராக நியூசிலாந்து பண்ணையாளர்கள் நாடு முழுவதும் நேற்று ஆர்ப்பட்டத்தில் ஈடுபட்டனர்.

வெளிங்கடன், ஒக்லாந்து மற்றும் ஏனைய பிரதான நகரங்களில் பண்ணை நில வாகனங்களால் வீதிகளை இடைமறித்து ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. கால்நடைகள் ஏப்பம் விடுவது, சிறுநீர் கழிப்பதற்கு வரி விதிக்கும் திட்டத்தை கைவிடும்படி அவர்கள் அரசை வலியுறுத்தினர்.

காலநிலை மாற்றத்தை சமாளிக்கும் முயற்சியாக நாட்டின் ஆறு மில்லியன் மாடுகள் மற்றும் 26 மில்லியன் ஆடுகள் மூலம் உருவாக்கப்படும் மீத்தேன் மற்றும் நைதரசொட்சைட்டு உமிழ்வு மீது உலகில் முதல் வரி விதிப்பு பற்றி நியூசிலாந்து பிரதமர் ஜசின்டா ஆர்டன் கடந்த மாதம் கூறியிருந்தார்.

இந்நிலையில் வீதிகளில் கூடிய ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசின் கொள்கை 'துர்நாற்றம்' கொண்டது என்றும் இந்த வரி உணவு விலையை அதிகரித்து தமது வாழ்வாதாரத்தை பாதிக்கும் என்றும் குறிப்பிடுகின்ற பதாகைகளை ஏந்தி நின்றனர். உலகளாவிய வெப்ப அதிகரிப்புக்கு மீத்தேன் 30 வீதம் காரணமாக இருப்பதாக விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

## 99 சிறுவர்களின் மரணத்தைத் தொடர்ந்து இந்தோனேசியாவில் திரவ மருந்துக்கு தடை



இந்தோனேசியாவில் சுமார் 100 சிறுவர்களின் இறப்பில் சிரப் மருந்து தொடர்புபட்டிருக்கும் அச்சம் காரணமாக அந்நாட்டில் திரவ மருந்துகள் அனைத்துக்கும் தேசிய அளவில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

காம்பியாவில் சுமார் 70 சிறுவர்களின் மரணத்தில் இருமல் சிரப் மருந்து தொடர்புபட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு சில வாரங்களிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சில சிரப் திரவ மருந்துகளில் சிறுநீரகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய மூலப்பொருட்கள் இருப்பதாகவும் இதனுடன் தொடர்புபட்டு இந்த ஆண்டில் 99 சிறுவர்களின் உயிரிழப்புகள் பதிவாகி இருப்பதாகவும் இந்தோனேசியா குறிப்பிட்டுள்ளது.

எனினும் இந்த சிரப் மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டவையா அல்லது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டவையா என்பது உறுதி செய்யப்படவில்லை.

சிறுவர்களிடையே சுமார் 200 சிறுநீரகப் பாதிப்பு சம்பவங்கள் பதிவானதாகவும் அதில் கிட்டத்தட்ட பாதி அளவான 99 சிறுவர்கள் உயிரிழந்திருப்பதாகவும் இந்தோனேசிய சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்தது.

காம்பியாவில் 70 சிறுவர்களின் மரணத்துடன் தொடர்புபட்ட நான்கு இருமல் சிரப் மருந்துகள் தொடர்பில் உலக சுகாதார அமைப்பு இந்த மாத ஆரம்பத்தில் சர்வதேச எச்சரிக்கை ஒன்றை விடுத்தது.

இதில் பயன்படுத்தப்பட்ட இருமல் மருந்துகள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டவை என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒக்டோபர் மாதம் 21ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

தினகரன்
THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## பெறுகை அறிவித்தல்

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

**(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

### தர்மோ பிளாஸ்டிக் மூலப் பொருட்களை கொள்வனவு செய்தல்

இவ் அதிகார சபையின் திவுலபிட்டிய முன்வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியம் மற்றும் கொழும்பு நிறைவேற்று பொறியியல் அலுவலகத்திற்கு தேவையான கீழ்க்காணும் உற்பத்தி மூலப் பொருட்களை வழங்குவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரம் | அளவு | கேள்விப் படிவக் கட்டணம் (அதிகார சபையில் பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்த்து) | கேள்விப் பிணை முறி | |
|---|---|---|---|---|---|
| | | | | காசாக (ரூ) | வங்கி/ காப்புறுதி பிணை முறி (ரூ) |
| PRDA/ WP/PRO/ 2022/38 | தர்மோ பிளாஸ்டிக் மூலப் பொருட்கள் | வெள்ளை உறை - 62500kg | ரூ. 2,000.00 + Vat | ரூ.97,500.00 | ரூ. 195,000.00 |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2022.10.21 முதல் 2022.11.10ஆம் திகதி வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை மேற்படி கேள்விப் படிவக் கட்டணங்களுக்கு உற்பட்டு இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை காசாக அல்லது வங்கிப் பிணையின் மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி வழங்குவதற்கு தகைமை பெறுவதற்காக கேள்வித் தொகை ரூபா 5.0 மில்லியனுக்கு மேற்படும் வேளையில் கேள்விதாரரரால் 1987 இல 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் விநியோகிக்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல் 2022.11.11 பி.ப. 2.30 இற்கு மேற்படி நாட்களில் இவ் அலுவலகத்தில் இடம் பெறுவதுடன், அவ் வேளையில் கேள்விதாரர் அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)**
**இல. 59, சென் செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு-12.**
**தொ.பே. இலக்கம் :-** 011-5676903

## அம்பலாந்தோட்டை பிரதேச சபை

### 2023 ஆம் ஆண்டுக்காக வழங்குநர்களை பதிவு செய்தல்

2023 ஆம் ஆண்டுக்காக இந்த சபைக்கு கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு வழங்குநர்களை பதிவு செய்யும் நோக்கில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள்/ அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள்/ நபர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழுள்ள ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவைகளுக்காக வெவ்வேறாக பதிவு செய்வதற்கு ஒரு உருப்படிக்காக மீளளிக்கப்படும் 500.00 ரூபா கட்டணம் ஒன்று அறவிடப்படும்.

உங்களால் A4 அளவுக்கு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் ஒன்றின் மூலம் உங்களுக்கு விண்ணப்பிக்க முடியும் என்பதோடு, விண்ணப்பப் படிவங்களை இட்டு அனுப்புகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்கள் பதிவு செய்தல் 2023" என்று குறிப்பிடுதல் வேண்டும். மேலும் உங்களால் பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் உருப்படி இலக்கத்தை விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும். அத்துடன் அவ் உருப்படித் தொகையின் பிரகாரம் குறித்த கட்டணத்தை செலத்துதல் வேண்டும்.

காசோலை மூலம் பதிவுக் கட்டணத்தை செலுத்துவதாயின் "செயலாளர், பிரதேச சபை, அம்பலாந்தோட்டை" என்ற பெயருக்கு எழுதிய காசோலை ஒன்றுடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, விண்ணப்பங்கள் 2022.12.30 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது கைகளால் கொண்டு வந்து ஒப்படைக்க முடியும். அனைத்து விண்ணப்பங்களும் தலைவர், பிரதேச சபை, அம்பலாந்தோட்டை என்ற பெயருக்கு அனுப்ப வேண்டும் என்பதோடு, காசுக் கட்டளை ஏற்கப்படமாட்டாது.

| உருப்படி இலக்கம் | வழங்கல் | விண்ணப்பப் படிவக் கட்டணம் |
|---|---|---|
| 1 | சகல அலுவலக எழுது பொருட்கள் | 500 |
| 2 | அலுவலக உபகரணங்கள் (மரச்சாமான், உருக்கு, இரும்பு) | 500 |
| 3 | கணினி இயந்திரங்கள் மற்றும் அது சார்ந்த துணைப் பொருட்கள்/ அச்சுப்பொறி இயந்திரம்/ நிழற்பிரதி, தொலைநகல், டுப்ளோ, மல்டிமீடியா, ப்ரொஜெக்டர் இயந்திரம், பணம் எண்ணும் இயந்திரம், அச்சுப்பொறி இயந்திரம் மற்றும் தேவையான வண்ணப் பூச்சு மற்றும் டோனர் உட்பட உபகரணங்கள் | 500 |
| 4 | அலுவலக உபகரணங்கள் (மரத்தளபாடம், உருக்கு, இரும்பு) | 500 |
| 5 | துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் (தும்புத்தடி, விளக்குமாறு, சவர்க்கார வகைகள், டைல் கிளீனர், ஹாப்பிக், பினோல், லைசோல், கையுறை, முகக்கவசம், தொற்று நீக்கி வகைகள்) | 500 |
| 6 | வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள் (டயர், ட்யூப், பெட்டரி, ரிம்டேப் உட்பட) | 500 |
| 7 | கட்டிட பொருட்கள் வழங்கல் மற்றும் நிர்மாண உபகரணங்கள் மற்றும் துணைப் பொருட்கள் வழங்கல் | 500 |
| 8 | வீதி விளக்கு மற்றும் மின் உபகரணங்கள் முதலியன | 500 |
| 9 | நூலக புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் | 500 |
| 10 | அச்சிடப்பட்ட எழுது பொருட்கள் (இறப்பர் முத்திரை/ நாள் முத்திரை வகை, பதக்கங்கள், நினைவுச் சின்னங்கள், கிண்ணங்கள்) | 500 |
| 11 | விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் (பாலர் பாடசாலை விளையாட்டு பொருட்கள் மற்றும் வேறு விளையாட்டுப் உபகரணங்கள்) | 500 |
| 12 | தீயணைப்பு உபகரணங்களை வழங்கல் | 500 |
| 13 | நீர் வடிகட்டி மற்றும் குடிநீர் போத்தல் வழங்கல் | 500 |
| 14 | வீதி பராமரிப்பு உபகரணங்கள் (தாச்சி, முல் கரண்டி, மண்வெட்டி, தள்ளு வண்டி, அலவாங்கு, புல் வெட்டும் இயந்திரத்திற்கு தேவையான பராமரிப்பு உபகரணங்கள்) | 500 |
| 15 | செடி வகைகள்/ விவசாய இரசாயனங்கள், இயற்கை உரம் மற்றும் கிருமி நாசினிகள்/ தோட்ட அலங்காரத்திற்கான உபகரணங்கள் மற்றும் கருவிகள் | 500 |
| 16 | குழாய் வேலைகளுக்கு தேவையான நீர் மோட்டார், பிளாஸ்டிக் நீர் தொட்டி, PVC துணைப் பொருட்கள் மற்றும் உரக் கொள்கலன்களை வழங்கல் | 500 |
| | **சேவைகள்** | |
| 17 | சகல வாகன பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் டிரக்டர், டெயிலர், குப்பை வண்டி பழுதுபார்த்தல் மற்றும் வெல்டிங் வேலைகள், டயர் மீள்நிரப்புதல், டெக் செய்தல் மற்றும் பழைய டயர் கொள்வனவு செய்தல்/ வாகன குஷன் செய்தல்/ வாகன வளிச்சீராக்கல், மோட்டார் பழுதுபார்த்தல் கராஜ் சேவைகள் பிரதேசத்திற்குள் | 500 |
| 18 | காப்புறுதி சேவை, சட்டத்தரணி சேவை, உத்தரவு பெற்ற நில அளவை சேவை, மொழிபெயர்ப்புச் சேவை வழங்குதல் | 500 |
| 19 | CIDA பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் பிரதேச சபை ஊடாக மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்காக பதிவு செய்து கொள்ளல் (வீதி, கட்டிடம், பொது) | 500 |
| 20 | குப்பை முகாமைத்துவ நிலையத்தில் சேகரிக்கப்படும் மீள் சுழற்சி கழிவுப் பொருட்களை விற்பனை செய்தல் (பிளாஸ்டிக், வெள்ளை, பச்பைச, கபிலநிற கண்ணாடி போத்தல்கள், இரும்பு, பியர்கேன், அலுமினியம், பெட் போத்தல் | 500 |
| 21 | சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் அபாயகரமான மரங்களை வெட்டி அகற்றுதல் | 500 |
| 22 | ஒப்பந்த சங்கங்கள் (கமத்தொழில் அமைப்புகள், கிராமிய அபிவிருத்தி சங்கம், சனசமூக சங்கம் போன்றன | 1000 |

**2022.10.19 ஆம் திகதி**
**அம்பலாந்தோட்டை பிரதேச சபை**

**எம்.ஆர்.பீ. தர்ஷன சஞ்சீவ**
**தலைவர்**
**அம்பலாந்தோட்டை பிரதேச சபை**

## வனசீவராசிகள், வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு

## தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களம்

### வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2023

**DNZG/A/10/22/12**

மேற்குறிப்பிடப்பட்ட தலைப்பில் 2022-10-18ஆம் திகதி இந்த பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திற்கு இயைபான பொருட் பட்டியல் பின்வருமாறாகும்.

| இல. | வகைப்படுத்தல் | விபரம் | தேவையான இடங்கள் |
|---|---|---|---|
| **1. பொருட்கள்** | | | |
| 01. | கட்டிடப் பொருட்கள் | மணல், செங்கல், கிரவல், தரையோடுகள், மெட்டல் சக்கைக் கற்கள், கூரைத்தகடுகள், உகரணங்கள், கருவிகள், கம் மற்றும் குளு, பலகை, நிறப்பூச்சு, பாதுகாப்பு கருவிகள் மற்றும் அங்கிகள், ஹோஸ், வீல்பெரோ, வாளி, தும்புத்தடி, மண்வெட்டி, சவல், திருகி, சுத்தியல், வாள், இரும்பு சட்டம், GI குழாய், GI தகடுகள், இரும்புக் கம்பி, வெல்டிங்கோள், ஆணி, திருகாணி, ஆணிகள் மற்றும் சுரைகள், பூட்டுகள், PVC குழாய் சொக்கட், பித்தளைப் பொருட்கள் மற்றும் சகல கனரகப் பொருட்கள். | தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, பின்னவலை யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச்சாலை வளாகம், சபாரி பூங்கா |
| 02. | மருத்துவ வழங்கல்கள் | மருந்தாக்கங்கள், மருந்துகள், முதலுதவி வழங்கல்கள், உபகரணங்கள். கண்ணாடிப் பொருட்கள், இரசாயனங்கள் மற்றும் ஏனைய கருவிகள் போன்றன. | மேலுள்ளவாறு |
| 03. | காகிதாதிகள் | புகைப்படப் பிரதி தாள், நகல் தாள், தட்டச்சுதாள், காட்போட் கோவைகள், CR புத்தகங்கள், குறிப்புப் புத்தகங்கள், ஊசி, கிளிப், ஸ்டெப்லர், ஸ்டெப்லர் பின், பேனை, பென்சில், மை அழுத்தி Pad ink, வைட்போர்ட் மார்கர், Permanent Marker, கம், குளு, கல்குளேட்டர், பஞ்சர், செலோடேப் அடிமட்டம், கட்டும் நூல் போன்ற ஏனைய காகிதாதிகள் | தலைமையகம், தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, பின்னவலை யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச்சாலை வளாகம், சபாரி பூங்கா |
| 04. | டோனர்கள் | புகைப்படப் பிரதி இயந்திர டோனர், அச்சப்பொறிகள் மற்றும் தொலைநகல் இயந்திரங்களுக்கான கார்ட்ரிஜ், ஸ்டென்சில் பிரிண்டர் ரிப்பன், டுப்ளோ இயந்திரத்திற்கான மை | மேலுள்ளவாறு |
| 05. | அச்சு வேலைகள் | கடிதத் தலைப்புகள், டிக்கெட்டுகள், புத்தகம், துண்டுப்பிரசுரங்கள், பதாதைகள் போன்றன | மேலுள்ளவாறு |
| 06. | துணி, ஆடைகள் மற்றும் பாதணிகள் | ஆடைகளுக்கான துணிகள், டிசேர்ட் சப்பாத்து, பூட்ஸ் முதலியன | தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச்சாலை வளாகம், சபாரி பூங்கா |
| 07. | சவர்க்காரம் மற்றும் அழுக்ககற்றி | சவர்க்காரம், T-Pole, டெட்டோல், கை கழுவும் திரவம் போன்றன. | மேலுள்ளவாறு |
| 08. | துப்புரவு உபகரணங்கள் | தும்புத்தடி, விளக்குமாறு மற்றும் துடைப்பான் போன்றன | மேலுள்ளவாறு |
| 09. | பல்வேறு வகையான உணவு வகைகள் | புளி, வெள்ளை பாண், முட்டை, மேசை உப்பு, கோட் அக்மா எண்ணெய், கித்துள் கருப்பட்டி, திரவப் பால், அவுஸ்திரேலிய தேன், வேப்பெண்ணெய், தேன் (போத்தல்) SLS சான்றிதழ் , ஆர்ட்மியா | தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச்சாலை வளாகம், சபாரி பூங்கா |
| 10 | பெலட் | குதிரைகள் மற்றும் பட்சிகளுக்குத் தேவையான பெலட் வகைகள் | தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச்சாலை வளாகம், சபாரி பூங்கா |
| 11 | உணவு வகைகள் | சோள விதைகள், சோளத் துண்டுகள், அரிசி - சிங்கள சிவப்பு, கடலை, பாசிப்பயறு, கொள்ளு, பார்ளி, சிப்பி ஓடுகள், பஜிரி, நெல், கனியக் கலவைகள், சோயா துண்டுகள், மீன் உணவு, ரைஸ் பொலிஷ், எழும்பு உணவுகள், கனியத் துண்டுகள், கணவாய் ஓடுகள் (முழுமையானவை), நிலக்கடலை, உப்புக் கல், சூரியகாந்தி விதைகள் | தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச்சாலை வளாகம், சபாரி பூங்கா |
| 12 | இறைச்சி மற்றும் மீன் | திலாபியா, இறால், அதிகுளிரூட்டப்பட்ட தோல் அகறப்பட்ட கோழியிறைச்சி (ISO தரம் சகிதம் உணவுச் சான்றிதழ்), இரண்டு மாத வயதுடைய உயிருள்ள கோழி இறைச்சி, இறைப்பை, இருதயம், சிறுநீரகம், நுரையீரல் மற்றும் ஒரு மாட்டின் மண்ணீரல் உட்பட எலும்புடன் கூடிய மாட்டிறைச்சி, மாட்டு இருதயம், எலும்பற்ற இறைச்சி, ஆட்டிறைச்சி, ஆட்டு சிறுநீரகம், இருதயம், இறைப்பை மற்றும் ஏனைய அவயவங்கள், ஆட்டுக் குடல், மாட்டு இருதயம் | தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச்சாலை வளாகம், சபாரி பூங்கா |
| 13 | பழங்கள் | புளி வாழை, இனிப்பு தர்ப்பூசனி, அன்னாசி, யானை வாழை, பப்பாசி, இளநீர், மாம்பழம், தர்ப்பூசனி, கொடித் தோடை, அப்பிள், கரும்பு | தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச்சாலை வளாகம், சபாரி பூங்கா |
| 14 | மரக்கறி | வற்றாலை, பொன்னாங்கன்னி, வல்லாறை, வற்றாலை இலை, கங்குங், பயற்றங்காய், வெள்ளரி, கெக்கிரி, வெண்டி, சலாது இலை, கெரட், பீட்ரூட், கொகில இலை, பூசனி, கோவா, முருங்கை இலை / இபில் இபில், போஞ்சி | தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச்சாலை வளாகம், சபாரி பூங்கா |
| **2. சேவைகள் மற்றும் திருத்தவேலைகள்** | | | |
| 15 | இயந்திராதிகள் மற்றும் வாகனங்களை வாடகைக்கு பெறல் | பெக்கோ லோடர், எஸ்கவேட்டர், லொறி, பூம்டிரக், டிரக்டர்கள், வைப்ரேட்டர்கள், கொம்பிரசர்கள், ஹைபிரசர்ஸ் நீர் பம்பி, வெல்டர்கள் சகிதம் வெல்டிங் பொறித்தொகுதிகள், கொங்கிறீட் கலவை மற்றும் JCB போன்றன | மேலுள்ளவாறு |
| 16 | வாகன சேவை வழங்கல், உதிரிப் பாகங்கள் மற்றும் திருத்தவேலைகள் | மோட்டார் உதிரிப்பாகங்கள், பெற்றிரிகள், டயர்கள், டியூப், மோட்டார் வாகனங்களைப் பழுதுபார்த்தல், சேர்விஸ் மற்றும் உள்ளக சுத்திகரிப்பு போன்றன. | தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, பின்னவலை யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச்சாலை வளாகம், சபாரி பூங்கா |
| 17. | ஏனைய வாகன சேவைகள் | வாகன கெனபி, குஷன் வேலை, கவர் மற்றும் கார்பட் செய்தல், தகர வேலைகள் மற்றும் நிறப்பூச்சு பூசுதல் போன்றன | மேலுள்ளவாறு |
| 18 | பொதுவான திருத்தவேலைகள் | இயந்திராதிகள், வளிச்சீராக்கிகள், தொடர்பாடல் உபகரணங்கள். மின்சாரப் பொருட்கள், புகைப்படப்பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம், கணனிகள் மற்றும் சார்ந்த உருப்படிகள் போன்றன. | மேலுள்ளவாறு |
| 19 | மரங்கள் மற்றும் மரக் கிளைகளை வெட்டுதல் | தேவையற்ற மரக் கிளைகளை வெட்டுதல் | தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச்சாலை வளாகம், சபாரி பூங்கா |
| 20 | குப்பை மற்றும் கழிவுநீர் அகற்றல் | குப்பைகளை அகற்றுதல், மிருகக்காட்சிச்சாலை கழிவுகள், மரங்களின் பாகங்கள் மற்றும் குற்றிகள் மற்றும் சாக்கடைகள் | மேலுள்ளவாறு |
| 21 | நிர்மாண இடிபாடுகளை அகற்றுதல் | இரும்பு, திண்மங்கள். கட்டிடப் பொருட்கள், பிளாஸ்டிக் போன்றன. | மேலுள்ளவாறு |
| 22 | மின்சார துணைப்பாகங்கள் | CFL மின்குமிழ் LED மின் குமிழ், சாதாரண மின்குமிழ், ஹோல்டர், வயர், பிளக், பிளக்பேஸ், ஆளி, டிரிப் சுவிட்ச், Contube இன்சுலேஷன் டேப் | மேலுள்ளவாறு |
| 23 | நிலச் சீராக்கம் மற்றும் தாவரங்கள் | நிலச் சீராக்கம் மற்றும் பூக்கள் மற்றும் ஏனைய அலங்காரத் தாவரங்களை வழங்குதல் | தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச்சாலை வளாகம், சபாரி பூங்கா |
| 24 | தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சியற்ற தொழிலாளர்களை வழங்குதல் | உருக்கியொட்டுபவர்கள், குழாய் வேலையாட்கள், மின்னியலாளர்கள், தச்சர்கள் மற்றும் தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் | தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச்சாலை வளாகம், சபாரி பூங்கா |
| 25 | ண | வாடகை அடிப்படையில், 20 - 36 இருக்கை வசதியுள்ள காற்றுச் சீராக்கப்பட்ட பஸ்கள் | வனப் பயணப் பூங்கா, ஹம்பாந்தோட்டை |
| **3. வேலைகள்** | | | |
| 26. | நிர்மாணங்கள் | சிறிய நிர்மாண வேலைகள் மற்றும் புதுப்பித்தல் வேலைகள் | தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை மற்றும் கோனபல பண்ணை, பின்னவலை யானைகள் சரணாலயம் மற்றும் மிருகக்காட்சிச்சாலை வளாகம், சபாரி பூங்கா |

# பண்டாரவளை பல்லகெட்டுவ நகரத்தில்

## உங்கள் வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கு அரிய வாய்ப்பு

வ/ப பண்டாரவளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குரித்தான பண்டாரவளை நகரத்தில் அமைந்துள்ள வேகமாக முன்னேற்றமடைந்து வரும் பல்லகெட்டுவ நகரத்தில் உங்களது வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கான கடை அறைகள் குத்தகைக்கு வழங்கப்படும்.







**மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 1500.00**
**2022-10-20ஆம் திகதி முதல் 2022-11-11ஆம் திகதி வரை**
**கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.**

**கௌரவ தலைவர்,**
**வ/ப பண்டாரவளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், இல. 04,**
**பெரேரா மாவத்தை, பண்டாரவளை.**

- உங்களது கேள்விப் படிவங்களை இன்றே பதிவுத் தபாலில் அனுப்புங்கள்
- கேள்விப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- கேள்விக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் வருகை தந்து அல்லது பின்வரும் தொலைபேசி இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம்.**

**0572222173, 0718427332, 0722858124, 0718427383**

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## இலங்கை இராணுவம்

# வழங்கல் மனுக்கோரல்

## இறுதிச்சடங்குகளுக்கான சேவை வழங்கல் - 2023

1. **2023 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி** வரையான காலப்பகுதியினுள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களுக்கான இலங்கை இராணுவத்திற்கு இறுதிச்சடங்குகளுக்கான சேவைகளை வழங்குவதற்கு கொழும்பு, ஸ்ரீ ஜெயவர்தனபுரவில் அமைந்துள்ள இராணுவ தலைமைகாரியாலயத்தின் வழங்கல் குழு தலைவரினால் வழங்கல்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| அவிசாவளை | காலி | மாத்தறை |
| அநுராதபுரம் | திருகோணமலை | மாத்தளை |
| அம்பலாந்தோட்டை | தியதலாவை | நீர்கொழும்பு |
| அம்பாறை | தம்புள்ளை | முல்லைத்தீவு |
| எம்பிலிபிடிய | நாவுல | மொனராகலை |
| கந்தளாய் | நுவரெலியா | யாழ்ப்பாணம் |
| களுத்துறை | பனாகொடை | இரத்தினபுரி |
| கேகாலை | புத்தளம் | வவுனியா |
| குருநாகல் | பொலன்னருவை | சிலாபம் |
| கிளிநொச்சி | பதுளை | ஹபரணை |
| கொழும்பு | பண்டாரவளை | ஹம்பாந்தோட்டை |
| கம்பஹா | கண்டி | ஹட்டன் |

2. மனு ஆவணங்களை வழங்குதல், மனுக்களை சமர்ப்பித்தல், மனுக்களை திறப்பதற்கான திகதி மற்றும் நேரம் பின்வருமாறு, மேலும் விண்ணப்பதாரர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி அச்சந்தர்ப்பத்தில் பங்கேற்க முடியும்.

| | | |
|---|---|---|
| மனு ஆவணங்களை வழங்குவதற்கான ஆரம்பம் | - | 2022.10.25 |
| மனு ஆவணங்கள் வழங்கும் கடைசி இறுதி மற்றும் நேரம் | - | 2022.11.23 பி.ப. 3.00 மணி வரை |
| மனுக்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி இறுதி மற்றும் நேரம் | - | 2022.11.24 மு.ப.10.00 மணி வரை |
| மனு திறக்கப்படும் திகதி, நேரம் மற்றும் இடம் | - | 2022.11.24 மு.ப.10.00<br>செலிங்கோ கட்டிடம்<br>இல 167/30 அவிசாவளை வீதி<br>ஒருகொடவத்த |

3. வழங்கலுக்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள ஒரு முகாமிற்கு மீள் செலுத்தப்படும் **ரூபா.1,500.00** வழங்கல் வைப்பு பணம் மற்றும் மீள் செலுத்தப்படாத **ரூபா.1,000** வழங்கல் விண்ணப்ப கட்டணத்தையும் **கொழும்பு, ஸ்ரீ ஜெயவர்தனபுரவில் அமைந்துள்ள இராணுவ தலைமைகாரியாலயத்தின் பணிப்பாளர் - நிதி இற்கு** செலுத்தப்பட வேண்டும். (காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.) அக்கட்டணத்தை செலுத்தியதன் பின் வழங்கப்படும் பற்றுச்சீட்டை **கொழும்பு, ஸ்ரீ ஜெயவர்தனபுரவில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்தின் விநியோக மற்றும் போக்குவரத்து பணிப்பகத்திற்கு** வழங்கி வழங்கலுக்கான மனு விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ளலாம்.

4. மனுக்களை இடும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **"இறுதிச்சடங்குகளுக்கான சேவை வழங்கல் இலங்கை இராணுவம் 2023"** எனக்குறிப்பிட்டு முத்திரயிடப்பட்ட வழங்கல் விண்ணப்பங்களை பதிவுத்தபாலின் மூலம் **தலைவர், இராணுவ வழங்கல் சபை, உபகரண பணிப்பாளர் நாயகம் கிளை, இராணுவ தலைமையகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கொழும்பு** இற்கு அனுப்பி வைக்கவோ முடியும் அல்லது **வழங்கல் சபை, தலைவர், இராணுவ முகாம், செலிங்கோ கட்டிடம், இல, 167/30, அவிசாவளை வீதி, ஒருகொடவத்தை** எனும் விலாசத்திற்கு சமூகமளித்து, அங்கு வைக்கப்பட்டுள்ள தேசிய வழங்கலுக்கு உரித்தான பெட்டியில் இடவேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் மனு விண்ணப்பத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை முன்வைக்க வேண்டும்.

அ. வியாபார பதிவுச் சான்றிதழ் (உறுதி செய்யப்பட்ட நகல்படிவம்)

ஆ. விண்ணப்பதாரரினால் பராமரிக்கப்படும் வங்கி கணக்கு தொடர்பிலான வங்கி அறிக்கைகள்

இ. மேற்கொள்ளப்பட்ட இறுதிச்சடங்குகள் தொடர்பான ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழ்கள்

ஈ. விண்ணப்பதாரர் அரச அல்லது அரசு தொடர்பிலான எந்த ஒரு தொழிலையும் மேற்கொள்ளவில்லை என்பதற்கான கிராம சேவகரினால் உறுதி செய்யப்பட்ட எழுத்துமூல அறிக்கை முன்வைக்க வேண்டும்.

உ. விண்ணப்பதாரியின் சொத்துக்கள் மற்றும் நிதி நிலைத்தன்மையை உறுதிசெய்யும் வகையில் மாகாணத்தின் மாவட்ட செயலாளர் / பிரதேச செயலாளரினால் பரிந்துரைத்த படிவம் (பொது 170) இனால் ஒவ்வொரு இடத்திற்கும் ரூபா.10,000 இற்கு குறையாத சொத்துமதிப்பீட்டு சான்றிதழை முன்னைக்க வேண்டியதுடன், அச்சான்றிதழ் வழங்கலுக்கான மனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதிக்கு 30 நாட்களுக்கு மேற்பட்டதாக இருத்தல் கூடாது.

6. விண்ணப்பதாரரினால் வழங்கல் விண்ணப்பத்தை கோரும் போது சேவைக்கு விண்ணப்பிக்கும் இடங்களைக் குறிப்பிட வேண்டும்.

7. விண்ணப்பதாரர்களினால் வழங்கப்பட வேண்டிய சேவைகளை வழங்குவதற்கு வேறு தரப்பினரை நியமிப்பின் / நியமிக்க திட்டமிட்டிருப்பின் அவர்களின் (துணை ஒப்பந்ததாரர்கள்) தகவல்களும் அந்தந்த விண்ணப்பிக்கும் இடங்களுக்கு ஏற்ப குறிப்பிடப்படல் வேண்டும்.

8. குறித்த தேவைகளை நிவர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். திணைக்களத்தின் வழங்கல் சபைக்கு எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொள்ளும் / நிராகரிக்கும் முழு உரிமையும் உண்டு.

9. ஆர்வமுள்ள மனுதாரர்கள், இலங்கை இராணுவத் தலைமையகத்தின் வழங்கல் மற்றும் போக்குவரத்துப் பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும், மேலும், **2022.10.25** முதல் **2022.11.23** வரை **மு.ப.9.00** மணி முதல் **பி.ப.3.00** வரை அரசு வேலை நேரங்களில் கீழே கொடுக்கப்பட்டுள்ள பந்தி 10 ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் எவ்வித கட்டணச் செலுத்துகையும் இன்றி தொடர்புடைய மனு ஆவணங்களை பரீட்சித்துக்கொள்ள முடியும்.

10. மேல் குறிப்பிடப்பட்ட முகவரி ஆவது.

| | |
|---|---|
| **கவனத்திற்கு** | **: பணிப்பாளர் (வழங்கல் மற்றும் போக்குவரத்து)** |
| **விலாசம்** | **: இலங்கை இராணுவத் தளபதி,<br>இலங்கை இராணுவத் தலைமையகம்,<br>ஸ்ரீ ஜெயவர்தனபுர, கொழும்பு.** |
| **தொலைபேசி** | **: 0112302568, 0112302569** |
| **தொலைநகல்** | **: 0112302569** |
| **மின்னஞ்சல்** | **: dtesandt@army.lk / dtesandt0@gmail.com** |

**இராணுவத் தளபதி**
**இலங்கை இராணுவ தலைமையகம்,**
**ஸ்ரீ ஜெயவர்தனபுர, கொழும்பு.**

## மாவட்டச் செயலகம் - பொலன்னறுவை

### 2023ஆம் வருடத்திற்கான வழங்கல் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் வருடத்திற்காக மாவட்டச் செயலகம் மற்றும் பொலன்னறுவை மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு வழங்கல் மற்றும் சேவை வழங்கல்களை பெற்றுக்கொள்வதற்கு 2023ஆம் வருடத்திற்காக பதிவு செய்து கொள்ள விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள்/ உள்ளூர் முகவர்கள்/ வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழே காணப்படும் வழங்கல் மற்றும் சேவை வழங்கல்களை வழங்குவதற்காக பொலன்னறுவை மாவட்ட செயலகத்தில் பதிவு செய்து கொள்வதற்காக 2022 நவம்பர் 30ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. வழங்கல்கள்**

| | |
|---|---|
| i | அனைத்து வகையான காகிதாதிகள் டோனர் மற்றும் பொதுவான அலுவலக பாவனைப் பொருட்கள் |
| ii | கணனி, கணனி துணையுறுப்புக்கள் மற்றும் வன் பொருட்கள், மென் பொருட்கள் |
| iii | அலுவலக மற்றும் வீட்டு உபகரணங்கள் (உருக்கு, பிளாஸ்டிக், ∴பைபர், மரம், மின்சாரம் போன்றன...) |
| iv | இலத்திரனியல், இயந்திர உபகரணங்கள் (தட்டச்சு, புகைப்படப் பிரதி இயந்திரம், ரோணியோ இயந்திரம் போன்றவை....) |
| v | சீருடைக்கான துணி மற்றும் திரைச்சீலைகள் |
| vi | தோற் பைகள், பாதணிகள், மழை அங்கிகள் மற்றும் குடைகள் |
| vii | இலத்திரனியல் உபகரணங்கள் (வயர், மின்சார பிளக், போன்ற இலத்திரனியல் கருவிகள்) |
| viii | பிளாஸ்டிக் வேலை, பெயர்ப்பலகை, இறப்பர் முத்திரை, புத்தகம் கட்டுதல், டிஜிட்டல் பிரிண்டிங், ∴பைபர் தயாரிப்பு மற்றும் அச்சு வேலைகள் |
| ix | டயர், டியூப் மற்றும் வாகன பற்றரிகள் |
| x | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் |
| xi | கருங்கல், அதுசார்ந்த ஆரம்ப உற்பத்திகள் (சிறு கற்கள், சரளைக்கல், கற்தூள், சிப்ஸ் போன்றவை.....) |
| xii | முற்றவெளிப் பொருட்கள் (செங்கல் / மணல் / கிரவல் / மண் போன்றவை....) |
| xiii | சீமெந்து சார்ந்த உற்பத்திகள் (இன்டர்லொக் கல்/கொங்கிறீட் தூண்/கொங்கிறீட் கல்/பூச்சாடிகள் போன்ற...) |
| xiv | கனரக உருப்படிகள் |
| xv | முன்கலவை கொங்கிரீட் வழங்குதல் |
| xvi | விளையாட்டு மற்றும் நலன்புரி பொருட்கள் |
| xvii | நூலகப் புத்தகங்கள், சஞ்சிகைகள், பருவ வெளியீடுகள் மற்றும் ஏனைய வெளியீடுகள் |
| xviii | சங்கீதக் கருவிகள் மற்றும் நாட்டியக் குழுக்கள் |
| xix | மனித ஆகாரத்திற்காக சமைக்கப்பட்ட உணவை வழங்குதல் |
| xx | மனித ஆகாரத்திற்காக உலர் உணவை வழங்குதல் |
| xxi | கட்புல/ செவிப்புல உபகரணங்களை வழங்குதல் |
| xxii | தீயணைக்கும் உபகரணங்கள் மற்றும் ஏனைய பாதுகாப்பு உபகரணங்கள் |
| xxiii | நிறுவன அடையாள அட்டைகளை வழங்குதல் |
| xxvi | மின்சாரப் பொருட்களை வழங்குதல் (நீர்ப் பம்பிகள், மின் பிறப்பாக்கிகள், அதிகுளிரூட்டிகள், வளிச்சீராக்கிகள் போன்றவை...) |
| xxv | அனைத்துவித விவசாய உபகரணங்கள் (மண்வெட்டி, கடப்பாறை, வீல் பரோ, வாரிகள் போன்றவை...) |
| xxvi | மிருக வளங்கள் (கோழிக்குஞ்சுகள், மீன் குஞ்சுகள், பசு மாடுகள் ஆகிய உயிருள்ள விலங்குகள்) |
| xxvii | கடற்றொழில் கருவிகள் |
| xxviii | இயற்கையான மலர்கள் மற்றும் மலர் அலங்கரிப்புகள்/ நடனக்குழுக்கள் |
| xxix | மரங்களை வழங்குதல் - உள்நாட்டு/ வெளிநாட்டு |
| xxx | கெனபி ஹட்/ கூடாரம் / தகர மறைப்புகள் போன்றவை |
| xxxi | அனைத்து விதமான உருக்கு உருப்படிகள் |
| xxxii | அனைத்து விதமான நிறப்பூச்சு வகைகள் |
| xxxiii | அனைத்து விதமான மட்பாண்டப் பொருட்கள் |
| xxxiv | அனைத்து விதமான அலுமினியப் பொருட்கள் |
| xxxv | நினைவுப்படிகம் மற்றும் கற் சிற்பங்கள் |
| xxxvi | சிறுவர் பூங்காவிற்கான உபகரணங்கள் வழங்குதல் (ஊஞ்சல், சிசோ, விளையாட்டுப் பொருட்கள், உடற்பயிற்சி உபகரணங்கள் போன்றன...) |
| xxxvii | சூரியசக்தி மற்றும் அது சார்ந்த உபகரணங்களை வழங்குதல் |
| xxxviii | வீட்டுத் தோட்டச் செய்கை மற்றும் அலங்காரத்திற்கான தாவரங்கள் வழங்குதல் |
| xxxix | கூரைத் தகடு உருப்படிகள் |
| xl | சுயதொழில் உபகரணம் (வழங்கக்கூடிய சுயதொழில் உபகரணம் யாது? அவை உற்பத்தி செய்யப்படுகிறதா இல்லை விற்பனை மாத்திரமா என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். |
| xli | வாயு துப்பாக்கிகளை வழங்குதல் |
| xlii | ஒப்பனையலங்கார உபகரணங்கள் |
| xliii | குடிநீர் வழங்குதல் |
| xliv | நீரைச் சுத்திகரித்தல் மற்றும் அதுசார்ந்த உபகரணங்கள் |
| xlv | கை விரல் ரேகை பதிவு இயந்திரங்கள் வழங்குதல் |
| xlvi | அனைத்து வகையான கண்ணாடிப் பொருட்கள் |
| xlvii | பொலிசெக் உறைகள் |
| xlviii | விவசாய தானிய விதைகள் (நெல், சோளம் போன்றன) |
| xlix | சுத்திகரிப்பு இரசாயனப் பொருட்கள் (நீச்சல் குளம் பொன்றவற்றிற்கு) |

**02. சேவைகள் மற்றும் வேலைகள்**

| | |
|---|---|
| i | கட்டிட நிர்மாணங்கள், திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் |
| ii | நெடுஞ்சாலை நிர்மாணித்தல் மற்றும் திருத்தவேலைகள் |
| iii | குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்களை நிர்மாணித்தல் மற்றும் திருத்தவேலைகள் |
| iv | கனரக வாகனம் மற்றும் காணி, வாகனங்களை வழங்குதல் (பெகோ இயந்திரம், கல் உருளைகள், கெட்டபிலர், மண்ணை இறுக்கும் இயந்திரம், டிராக்டர்) |
| v | அலுவலக சிறு பராமரிப்பு வேலைகள் |
| vi | வாகன சிறு திருத்தவேலைகள், இயந்திர திருத்தவேலைகள் |
| vii | வாகன தகர வேலைகள், நிறப்பூச்சிடல் வேலைகள் |
| viii | வாகன மின்சார முறைமை திருத்தவேலைகள் |
| ix | எலைன்மன்ற் பரீட்சார்த்தம் மற்றும் வீல் பெலன்ஸ் செய்தல் |
| x | வாகனங்களை சேர்விஸ் செய்தல் |
| xi | வாகன மற்றும் அலுவலக உபகரணங்களை குஷன் செய்தல் |
| xii | பதாகை, சுவரொட்டி, புத்தகங்கள் அச்சு மற்றும் புத்தகம் கட்டும் வேலைகள் |
| xiii | அலுவலக மற்றும் வீட்டு உபகரணங்களின் திருத்தவேலைகள் |
| xiv | மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்களின் திருத்தவேலைகள் |
| xv | அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் (தட்டச்சு, புகைப்படப் பிரதி இயந்திரங்கள், ரோணியோ இயந்திரங்கள்) |
| xvi | கணனி/ கணனி துணையுறுப்புக்கள் மற்றும் கணனி அச்சு இயந்திரங்களின் திருத்தவேலைகள் |
| xvii | பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக வாகனங்களை வழங்குதல் (கார், வேன், ஜீப், லொறி, பஸ் போன்றவை...) |
| xviii | உள்ளக தொலைபேசி அமைப்பு/ கையடக்கத் தொலைபேசி வசதி மற்றும் இணையத்தள வசதிகளை வழங்குதல் |
| xix | பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத தொழிலாளர் சேவையை வழங்குதல் |
| xx | அலுவலக கட்டிட, அலுவலக வளவை சுத்திகரிக்கும் சேவையை வழங்குதல் |
| xxi | பாதுகாப்புச் சேவையை வழங்குதல் |
| xxii | கணனி, கணனி துணைப்பாகங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல் |
| xxiii | வளிச்சீராக்கி திருத்தவேலைகள் (வாகன வளிச்சீராக்கி, குளிர்சாதனப் பெட்டி, கட்டிட வளிச்சீராக்கிகள்) |
| xxiv | கட்டிட மின்சார முறைமைகளின் திருத்தவேலைகள் |
| xxv | நீர்க்குழாய் முறைமைகளின் திருத்தவேலைகள் |
| xxvi | தச்சு/ மேசன் சேவைகளை வழங்குதல் |
| xxvii | அலுமினியக் கதவு/ யன்னல் / சுருட்டும் கதவுகள் வழங்கல் மற்றும் பொருத்துதல் |
| xxviii | சகல உருக்கு உற்பத்திகள் (கிறில்/ கேட் போன்றன...) |
| xxix | கட்டிட நிர்மாணிப்புப் பொருட்களை வாடகை அடிப்படையில் வழங்கல் (மின் பிறப்பாக்கி/ கொங்கிரீட் மிக்ஷர்/ ஸ்க்றூ ஜெக்/ சாரம்) |
| xxx | பீடை கொல்லிகள் (கறையான், ஈ, எறும்பு போன்றவை....) |
| xxxi | வாடகை அடிப்படையில் மேடை, கதிரை, பெரபோல் ஹட் போன்ற வைபவப் பொருட்களை வழங்கல் |
| xxxii | ஒலிபெருக்கி இயந்திரங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல் |
| xxxiii | CCTV கமராக்களை வழங்கி பொருத்துதல் |
| xxxiv | சூரிய சக்தி பெனல் மற்றும் அது சார்ந்தவைகளை வழங்குதல் |
| xxxv | சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல் |
| xxxvi | விரிவுரை மண்டபங்கள் மற்றும் தங்குமிட வசதிகள் வழங்குதல் |
| xxxvii | நடமாடும் வர்த்தக கூடம் |
| xxxviii | மின் பிறப்பாக்கி பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் |

சேவைகளின் கீழாக i, ii, iii பதிவு செய்து கொள்ள விரும்பும் விண்ணப்பதாரரின் கட்டிடங்கள் நிர்மாணிப்பு துறையில் நிலைத்திருந்தமைக்காக நிர்மாணிப்புப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் (CIDA) பதிவு செய்யப்பட்டுள்ள எல்லைகளைக் காட்டும் சான்றிதழ்களின் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கும் மேற்பட்ட உருப்படிகளுக்குப் பதிவு செய்து கொள்ள எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரர்கள் ஒரு உருப்படிக்காக ஒரு விண்ணப்பம் வீதம் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் பதிவு செய்து கொள்ள எதிர்பார்த்துள்ள ஒரு உருப்படிக்காக 1000.00 ரூபா வீதம் இலங்கை வங்கி புதிய நகரக் கிளையின் 7042222 எனும் பொலன்னறுவை மாவட்டச் செயலக உத்தியோகபூர்வ கணக்கு இலக்கத்திற்கு வைப்புச் செய்து இயைபுடைய பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் பொலன்னறுவை மாவட்டச் செயலக சிறாப்பருக்கு அலுவலக நாட்களில் மு.ப. 08.30 முதல் பி.ப. 3.00 மணி வரை கட்டணம் செலுத்தி உரித்தான பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்புதல் வேண்டும். **(காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகளுடன் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.)**

இதற்காக விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாதென்பதுடன் விண்ணப்பதாரரினால் கீழ்க்காணும் விபரங்களுக்குப் பொருத்தமாக விண்ணப்பங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

i விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி : ........................................

ii தொலைபேசி இலக்கம்/ தொலைநகல் இலக்கம்/ மின்னஞ்சல் இலக்கம் :........................................

iii பதிவு செய்துகொள்ள எதிர்பார்த்துள்ள வழங்கல்கள்/ சேவைகளின் இலக்கம் மற்றும் பெயர்: ........................................

iv வியாபாரத்தின் வர்த்தகப் பெயர் : ........................................
(பெயரிடப்பட்ட உருப்படியை தயாரிக்கின்றீரா என்பது பற்றி குறிப்பிடவும்)

v பெசேவ பதிவிலக்கம் :........................................
(பெசேவ சான்றிதழின் பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்)

vi வங்கியாளரின் பெயர் மற்றும் முகவரி : ........................................

vii வியாபாரத்தின் முகவரி : ........................................

viii வியாபாரப் பதிவிலக்கம்: ........................................
(வியாபாரத்தைப் பதிவு செய்யும் சான்றிதழின் பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்)

ix வழங்கக்கூடிய கடன் வசதியின் பெறுமதி ரூ. ................. கால எல்லை மாதங்கள் : ............................

x அனுபவம் தொடர்பான விபரம் : ........................................

xi நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகள் துறையில் பதிவைக் கொண்டுள்ளமை தொடர்பான விபரம் : ........................................
(பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்)

xii பணம் செலுத்தப்பட்ட வங்கிக் கிளை மற்றும் செலுத்தப்பட்ட தொகை: ........................................
(பற்றுச்சீட்டு இணைத்தல் வேண்டும்)

xiii நிறுவனததின் வங்கிக் கணக்கு பற்றிய தகவல்கள்
வங்கியின் பெயர்:............................................ கணக்கு இலக்கம்:...................... கிளை:........................................
(Bank Code:................................ Branch Code:........................................

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது விசுவாசம் மற்றும் அறிவுக்கமைவாக சரியானவையென உறுதியளிக்கின்றேன்.

திகதி ...................... ........................................
விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் திகதி முத்திரை

இப்பெயர் பட்டியல் பெறுகை வழிகாட்டி 3.4 இன் பிரகாரம் மட்டுப்படுத்தப்பட்ட தேசிய போட்டி கேள்வி கோரல் பட்டியலாக கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதால் நாட்டின் எப்பிரதேசத்தினதும் வழங்குநர்களுக்கு இதற்காக பதிவு செய்வதற்கு வாய்ப்பு உண்டு எனத் தெரிவிக்கிறேன்.

விசேட வேளைகள் தவிர்ந்த ஏனைய சகல சந்தர்ப்பங்களிலும் பதிவு செய்துள்ள வழங்குநர்களின் பெயர்ப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு விலைமனுக்கள் கோரப்படுவதால் விசேட நிலைமையொன்று இல்லையாயின் இப்பெயர் பட்டியல் வருடத்திற்கு ஒருமுறை மீள் திருத்தம் செய்ய வேண்டியதால் மேற்படி வழங்கல் வேலைகள் மற்றும் சேவைகள் சார்பாக விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற சகலரும் இங்கு பதிவு செய்தல் அவசியம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட செயலாளர் திருப்திப்படும் வகையில் விலைமனுக்களை சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் கட்டளைகளை வழங்கத் தவறும், வழங்கல் மற்றும் சேவை வழங்குநர்களின் பெயர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்படும். பதிவுக்காக அனுப்பப்படும் விண்ணப்பங்களை எவ்வித காரணங்களையும் முன்வைக்காமல் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை மாவட்ட செயலாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

அனைத்து விண்ணப்பங்களும் 2022 நவம்பர் 30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், பொலன்னறுவை" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது நேரில் வந்து ஒப்படைக்கலாம். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"2023ஆம் வருடத்திற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல்"** எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். 2022.11.30ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என அறிவிக்கப்படுகின்றது.

**டப்.ஏ. தர்மசிறி,**
**மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர்,**
**பொலன்னறுவை**

# கேள்வி கோரல் அறிவித்தல்

## அகலவத்த பிரதேச சபை

அகலவத்த பிரதேச சபைக்கு உரித்தான கீழ்க் காணப்படும் அட்டவணையிலுள்ள ஆதனங்களின் உரிமையை 2023.01.01 முதல் 2023.12.31 வரை குத்தகைக்கு விடுவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன. இதற்கான கேள்விப்படிவங்களை இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்பட்ட நபர்கள் விண்ணப்பிக்க வேண்டாம்)

கேள்விப்படிவங்களை வழங்கல் : 2022.10.25 முதல் 2022.11.14 பி.ப. 3.00 வரை
கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினம் மற்றும் நேரம் : 2022.11.15 பி.ப. 1.30 வரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் : 2022.11.15 பி.ப. 2.00 இற்கு

கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொளளும் வேளையில் விண்ணப்பதாரர் தம் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| தொடர் இலக்கம் | விபரம் | ஆகக் குறைந்த கேள்வி ரூபா. ச. | கேள்விப் பிணைத் தொகை ரூபா. ச. | படிவக் கட்டணம் ரூபா. ச. |
|---|---|---|---|---|
| 01 | அகலவத்த மாட்டிறைச்சிக் கடையில் தினசரி மாட்டிறைச்சி விற்பனை செய்யும் உரிமையைக் குத்தகைக்கு விடுதல் | 3615500.00 | 75000.00 | 2500.00 |
| 02 | அகலவத்தை மீன் சந்தையில் தினசரி மின் விற்பனை செய்யும் உரிமையைக் குத்தகைக்கு விடுதல் | 50575.00 | 5500.00 | 1500.00 |
| 03 | அகலவத்த கோழி இறைச்சி ஆட்டிறைச்சிக் கடைகளில் தினசரி இவ் இறைச்சிவகைகளை விற்பனை செய்யும் உரிமையைக் குத்தகைக்கு விடுதல் | 77000.00 | 5500.00 | 1300.00 |
| 04 | யட்டியன மயான பூமியின் தென்னை விளைச்சலை குத்தகைக்கு விடுதல் | 3090.00 | 750.00 | 750.00 |
| 05 | பிம்புர மயான பூமியில் தேயிலை மற்றும் தென்னை விளைச்சலைக் குத்தகைக்கு விடுதல். | 17400.00 | 1100.00 | 750.00 |
| 06 | மாகஸ்வத்த விளையாட்டு மைதானத்தின் காணியில் தென்னை விளைச்சலைக் குத்தகைக்கு விடுதல் | 3000.00 | 750.00 | 750.00 |
| 07 | அகலவத்த திரவப்பால் விற்பனை நிலையத்தைக் குத்தகைக்கு விடுதல் | 120000.00 | 750.00 | 750.00 |

கேள்வி நிபந்தனைகள் தொடர்பான மேலதிக விபரங்களை கேள்விப் படிவங்கள் வழங்குகையில் மற்றும் 034-2243236 தொலைபேசி இலக்கத்தை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஜயசேன கம்புராவல**
**தலைவர்,**
**அகலவத்த பிரதேச சபை**

**2022.10.18**
**அகலவத்த பிரதேச சபை அலுவலகத்தில்**

# நிவித்திகல பிரதேச சபை

## 2023ஆம் ஆண்டிற்கான ஆதனங்களின் வர்த்தக உரிமையைக் குத்தகைக்கு விடுதல்

**(2023.01.01 முதல் 2023.12.31)**

நிவித்திகல பிரதேச சபைக்கு உரித்தான பின்வரும் அட்டவணையில் காணப்படும் ஆதனங்களை 2023.01.01 முதல் 2023.12.31 வரையான ஒருவருட காலத்திற்குக் குத்தகைக்கு விடுவதற்காக முத்திரையிடப்பட்ட கேள்விகள் 2022.11.08 அன்று மு.ப. 10.00 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொடர் இலக்கம் | குத்தகைக்கு விடப்படும் ஆதனங்களின் விபரம் | ஆகக்குறைந்த வருடாந்தக் கேள்வி ரூபா | கேள்வி வைப்புத் தொகை ரூபா | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | நிவித்திகல வாரசந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,896,000.00 | 100,000.00 | 500.00 |
| 02 | நிவித்திகல வாரசந்தை மீன் தட்டு | 440,000.00 | 100,000.00 | 500.00 |
| 03 | நிவித்திகல வாரசந்தை இலக்கம் 01 கோழிஇறைச்சிக்கடை | 288,100.00 | 10,000.00 | 500.00 |
| 04 | நிவித்திகல வாரசந்தை இலக்கம் 02 கோழிஇறைச்சிக்கடை | 62,000.00 | 10,000.00 | 500.00 |
| 05 | நிவித்திகல வாரசந்தை இலக்கம் 03 கோழிஇறைச்சிக்கடை | 71,000.00 | 10,000.00 | 500.00 |
| 06 | நிவித்திகல வாரசந்தை இலக்கம் 04 கோழிஇறைச்சிக்கடை | 62,000.00 | 10,000.00 | 500.00 |
| 07 | நிவித்திகல பொது வர்த்தகக் கட்டிடத் தொகுதி பொதுக் கழிவறை | 10,000.00 | 5,000.00 | 500.00 |
| 08 | நிவித்திகல வாரசந்தை - பொதுக் கழிவறை | 25,000.00 | 5,000.00 | 500.00 |
| 09 | நிவித்திகல நகரில் மோட்டார் வாகனங்களிலிருந்த கட்டணம் அறவிடுதல் | 180,000.00 | 10,000.00 | 500.00 |

02. கேள்வி மாதிரிப் படிவங்கள் 2022.10.21 முதல் 2022.11.04 அன்று பி.ப. 01.00 வரை வழங்கப்படுவதுடன் 2022.11.08 அன்று மு.ப. 10.00 வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் அன்றைய தினம் மு.ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும். அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

03. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை காசாகச் செலுத்திய பின்னர் இவ் அலுவலகத்தில் மாதிரிப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட கேள்விகள் உரிய தினத்தன்று உரிய நேரத்தில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது நேரடியாக இவ் அலுவலகத்தின் கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் முடியும்.

04. கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான மேலதிக விபரங்களை, வார வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் அலுவலகத்திற்கு நேரில் சமுகமளித்து அல்லது தொலைபேசி மூலம் விசாரித்து அறிந்து கொள்ளலாம்.

05. கேள்வி தொடர்பான இறுதித் தீர்மானம் நிவித்திகல பிரதேச சபைக்கு உரித்தாகும்.

**குலதுங்க லியனகே**
**தலைவர்**
**நிவித்திகல பிரதேச சபை**
**நிவித்திகல.**

**2022.10.21**
**நிவித்திகல பிரதேச சபையில்**

# கேள்வி அறிவித்தல்

## ஆதனங்களை குத்தகைக்கு வழங்குதல் – 2023

## திம்புலாகல பிரதேச சபை

திம்புலாகல பிரதேச சபையினால் நிர்வகிக்கப்படும் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களிலுள்ள ஆதனங்களை 2023-01-01-ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரையான ஒரு வருட கால எல்லைக்கு மட்டும் குத்தகைக்கு வழங்குவதற்காக என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.

I கேள்விப் படிவ விநியோகம் - 2022-10-20 முதல் 2022-11-10ஆம் திகதி (மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை)
II. கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள்- 2022-11-11ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை
III. கேள்விப் படிவங்கள் திறத்தல் - 2022-11-11ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு திம்புலாகல பிரதேச சபை அலுவலகத்தில்

(குறித்த விண்ணப்பப் படிவம் மற்றும் நிபந்தனைகளை திம்புலாகல பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு 027-2057514 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.)

| வாரச் சந்தை | கேள்விப் படிவக் கட்டணம் ரூபா | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி பிணை வைப்புத் தொகை (1%) ரூபா | ஆரம்பக் கொடுப்பனவு (1.2) ரூபா | வினைத் திறன் பிணை முறி ரூபா |
|---|---|---|---|---|---|
| எல்லேவெவ வாரச்சந்தை | 1,000.00 | 367,616.66 | 4,000.00 | 183,808.33 | 20,000.00 |
| திம்புலாகல வாரச்சந்தை | 1,000.00 | 170,123.33 | 2,000.00 | 85,061.67 | 10,000.00 |
| அரலகங்வில வாரச்சந்தை மற்றும் மலசலகூடம் | 1,000.00 | 869,400.00 | 8,700.00 | 434,700.00 | 80,000.00 |
| சிரிபுர வாரச்சந்தை, சிற்றுண்டிச்சாலை, மீன் தட்டு மற்றும் மலசலகூடம் | 1,000.00 | 798,560.00 | 8,000.00 | 399,280.00 | 40,000.00 |
| நுவரகல வாரச்சந்தை | 1,000.00 | 542,248.00 | 5,500.00 | 271,124.00 | 30,000.00 |
| அரலகங்வில பொது மலசலகூடம் | 1,000.00 | 30,000.00 | 1,000.00 | 15,000.00 | 5,000.00 |

**தலைவர்,**
**திம்புலாகல பிரதேச சபை,**
**மன்னம்பிட்டிய.**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

**(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு மேல் மாகாணம்)**

## திவுலபிட்டிய/ ஹொரண முன்வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியத்திற்கு தேவையான மூலப் பொருட்களை பெற்றுக்கொள்ளல்

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திவுலபிட்டிய/ ஹொரண முன்வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியத்திற்கு தேவையான மூலப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்காக வழங்குநர்களிடமிருந்து திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரம் | வகை (SLS Standard) | அளவு | கேள்விப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணையின் பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | காசாக | வழங்கிப் பிணை மூலம் |
| PRDA/ WP/PRO/ 2022/37 | திவுலபிட்டிய/ ஹொரண முன்வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியத்திற்கு தேவையான மூலப் பொருட்கள் கொள்வனவு செய்தல் | 10 மிமி முறுக்கப்பட்ட உருக்குக் கம்பி | 3000 | ரூ. 1,000.00 + Vat | ரூ. 130,000.00 | ரூ. 260,000.00 |
| | | 12 மிமி முறுக்கப்பட்ட உருக்குக் கம்பி | 3500 | | | |
| | | சீமெந்து (50kg) | 3000 | | | |
| | | பைன்டிங் கம்பி (18g) | 400 | | | |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2022.10.21 முதல் 2022.11.08ஆம் திகதி வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.45 வரை மேற்படி கேள்விப் படிவக் கட்டணத்தை செலுத்தி (அதிகார சபையில் பதிவு செய்துள்ள வழங்குநர்கள் தவிர்ந்து) இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணை முறியை காசாக அல்லது வங்கிப் பிணை மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2022.11.09 பி.ப. 2.30 இற்கு முடிவடைவதுடன் கேள்விகள் திறக்கப்படல் அத்தினம் அந் நேரத்திலேயே இவ் அலுவலகத்தில் இடம்பெறும். அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)**
**இல. 59, சென் செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு-12.**
**தொ.பே. இலக்கம் :-** 011-5676903

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இல. | கேள்விப் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/ PT/6354(EL) | Spares for the Buoys of Colombo Port | 30,000.00 | 1,000.00 | 2022.11.17ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/ PT/6375(EL) | Spare Parts for MGDUFF Shaft Bonding and Monitoring System of Pilot 16,17 and 18. | 200,000.00 | 3,500.00 | 2022.11.17ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/02/ PT/6389(MP) | Spares for Nissan TD27 Engines fitted with Hangcha Forklift Trucks | 90,000.00 | 1,000.00 | 2022.11.17ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/ PT/6392(MP) | Spare Parts for Rear Axle of the Terberg Yard Tractors | 45,000.00 | 1,000.00 | 2022.11.17ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/04/ PT6360(EL) | 25 Nos. Capacitors for the Yaskawa FS Drive Modules of the STS Cranes | 40,000.00 | 1,000.00 | 2022.11.22ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/02/ PT/6394(MP) | Allison Transmission Spares for UD Nissan Prime Movers at JCT | 50,000.00 | 1,000.00 | 2022.11.22ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/04/ PT/6396(MP) | Spares for Volvo Penta TAD 1250 VE Engines of Terex Toplift Trucks | 70,000.00 | 1,000.00 | 2022.11.22ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/ PT/6397(MP) | Complete Front Axle for the Terberg Yard Tractors | 30,000.00 | 1,000.00 | 2022.11.22ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/22/ PT/16/032 | MS Angles (75x75x6mm 5.8m Per length and 50x50x6mm 5.8 per length | 120,000.00 | 3,500.00 | 2022.11.10ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/21/ PT/20/022 | 10 Nos. Steel Roll handling C-Hooks | 80,000.00 | 1,000.00 | 2022.11.10ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/22/ PT/16/058 | 120 Nos. Industrial 600x9 Forklift Tyres | 130,000.00 | 3,500.00 | 2022.11.10ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

5. 2022 ஒக்டோபர் 21 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம் பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

# நுவரெலியா மாநகர சபை

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல் 2023

2023ஆம் வருடத்தில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக நுவரெலியா மாநகர சபையில் பதிவு செய்து கொள்வதற்கு உத்தேசிக்கும் ஒப்பந்தக்காரர்கள்/ உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்கள், முகவர்கள், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் எந்தவொரு நபர்களிடமிருந்தும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பங்களை 2022.12.31ஆம் திகதிக்கு முன்னர் மாநகர ஆணையாளர் மாநகர சபை நுவரெலியா என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது நேரில் கொண்டு வந்து மாநகர சபையின் வழங்கல் பிரிவிற்கு ஒப்படைப்பதன் மூலம் பதிவு செய்து கொள்ளலாம் என்பதுடன் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''2023ஆம் வருடத்திற்கான ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்" என குறிப்பிடுதல் வேண்டும். (இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கமைவாக விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்தல் வேண்டும்)
02. பதிவுக் கட்டணமாக 1500.00 ரூபா (அரச வரிகளுடன்) மீளளிக்கப்படாத கட்டணத்தை மாநகர சபை காசாளருக்குச் செலுத்துவதன் பேரில், மாநகர ஆணையாளர் நுவரெலியா என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசோலை, காசுக் கட்டளை மூலம் அல்லது மக்கள் வங்கியில் மாநகர சபையின் 134-1002-400-17-534 சேகரிப்புக் கணக்கிலக்கத்திற்கு வரவு வைத்துப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். இத்தொகை மீளளிக்கப்பட மாட்டாது.
03. நுவரெலியா மாநகர சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பின்னர் நுவரெலியா மாநகர சபையின் வழங்குநராக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்கு அது தொடர்பாக எழுத்து மூலம் அறிவிக்கப்படும்.
04. வழங்கப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகள் உரிய தரத்துக்கு மற்றும் மாதிரிகளுக்கு அமைய இருத்தல் வேண்டும். மேலும் உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கல் மற்றும் சேவைகளை மேற்கொள்ளாத மற்றும் மூன்று முறை விலை கோரலுக்கு பதிலளிக்காதிருக்கின்ற வழங்குநர்களின் பெயர்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
05. மாநகர சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

    05.1 வழங்குநராகப் பதிவு செய்து கொள்வதற்கான நிபந்தனைகள்

    - பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்குப் புறம்பாக தேவையான வேளைகளில் ஏனைய விலைக்கோரல்களின் மூலம் விலைகளைக் கோரி பொருட்களைக் கொள்வனவு செய்யும் அதிகாரம் இந்தச் சபைக்கு / மாநகர சபை ஆணையாளருக்கு உண்டு.
    - தேவைப்படும் வேளைகளில் மாதிரிகளை (சாம்பல்) சமர்ப்பிக்காத மற்றும் கட்டளையின் பிரகாரம் உரிய வேளையில், தரமான, உயர்ந்த குணவியல்புகளைக் கொண்ட பொருட்களை வழங்காத வழங்குநர்களின் பதிவு எவ்வித முன்னறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படலாம்.
    - பொருட்கள் வழங்கப்படும் நாள் முதல் ஆகக் குறைந்தது ஒரு மாத கடன் வசதி வழங்குநரால் வழங்கப்படுதல் வேண்டும்.

**விடய இலக்கம் 01**
**அலுவலக உபகரணங்கள் வழங்குதல்**

01. அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கல் (மரம், இரும்பு மற்றும் பிளாஸ்டிக்)
02. கணனி மற்றும் கணனி அச்சுப் பொறி, நிழற்படப் பிரதி இயந்திரம் தட்டச்சு ரோனியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம் ஸ்கேனர் இயந்திரம்
03. நேரப் பதிவு இயந்திரம் விரல் ரேகை அடையாள இயந்திரம் வழங்குதல்
04. கெமரா, புரொஜெக்டர் மற்றும் வீடியோ உபகரணங்கள் (தொலைக்காட்சி, சீ.டீ/டீ.வீ.டீ. பிளேயர் சீ.டீ/டீ.வீ.டீ ரெக்கோடர் போன்றன வழங்குதல்)

**விடய இலக்கம் 02**
**அலுவலக பாவனைப் பொருட்கள் வழங்குதல்**

05. காகிதாதிகள், கணனி அச்சிடல் பொருட்கள் மற்றும் கணனி பாவனைப் பொருட்கள் என்பன வழங்குதல்
06. அலுவலக அச்சு வேலைகள் படங்கள் சட்டமிடல் மற்றும் விளம்பரப்பலகை வரைதல்
07. இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள், பெயர் பலகை, பதக்கங்கள் மற்றும் விருதுகள், சின்னம், நினைவுப்படிகம் மற்றும் எழுத்தாக்கங்கள் வழங்குதல்
08. தைக்கப்பட்ட ஆடைகள் சீருடைக்கான சீருடைத்துணி, அலுவலக மேசைத்துணி மற்றும் திரைச்சீலைகள் வழங்குதல்
09. நூல் நிலையப் புத்தகங்கள் மற்றும் கிரந்தங்கள் வழங்கல்
10. தைக்கப்பட்ட விளையாட்டு உடைகள் வழங்குதல்
11. விளையாட்டுப் பொருட்கள் / மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்குதல்

**விடய இலக்கம் 03**
**அலுவலக பாவனைப் பொருள் சேவைகளை வழங்குதல்**

12. கணனி மற்றும் நிழற்படப்பிரதி இயந்திர திருத்தவேலைகள் மற்றும் சேவை செய்தல்
13. கணனி மென்பொருள் அபிவிருத்தி, நிறுவுதல் மற்றும் ஆலோசனை சேவைகள் வழங்குதல்
14. பாதுகாப்பு சேவை வழங்குதல்
15. வாடகை அடிப்படையில் போக்குவரத்து சேவை மற்றும் நிலப் பாவனை வாகனங்கள் (Land Vehicle) வழங்குதல்
16. அலுவலக உபகரண திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு சேவைகள்
17. சுத்திகரிப்புச் சேவை மற்றும் துப்புரவேற்பாட்டுச் சேவைகளை வழங்குதல்
18. உள்ளக தொலைபேசி சேவை திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள்/அழைப்பு சேவைகள்
19. பயிற்சி பெற்ற, பயிற்சி பெறாத மனிதவலு வழங்குதல் (மேசன், தச்சர், தொழிலாளர் போன்றன)
20. வீடியோ பதிவு செய்தல் மற்றும் புகைப்படம் அச்சிடல்
21. ஒலிபெருக்கி முறைமைகளை வாடகைக்கு வழங்குதல்
22. மின்சார உபகரணங்கள் மற்றும் மின் பிறப்பாக்கி இயந்திர திருத்தவேலைகள்
23. உருக்கியொட்டும் வேலைகள்
24. மின்சார தொழில்நுட்ப சேவை
25. வாகனங்களை வாடகைக்கு வழங்குதல் (டிராக்டர்/ பயணிகள் வாகனம்/ டிப்பர்/ கொம்பக்டர்/ மரம் வெட்டும் இயந்திரம் போன்றன)
26. இயந்திரம் மற்றும் உபகரணங்களை வாடகைக்கு வழங்குதல்

**விடய இலக்கம் - 04**
**வைபவங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் வழங்குதல்**

27. சமைத்த உணவுப் பொதிகள் சிற்றுண்டிகள், பான வகைகள் குடிநீர் மற்றும் உணவுப்பான சேவைகள் வழங்குதல்
28. கெனபி/மேடைகள்/மட்பாண்டங்கள் போன்றவை

**விடய இலக்கம் - 05**
**துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் மற்றும் மருந்து வகைகள் வழங்குதல்**

29. மேல்நாட்டு மருந்து வகைகள் வழங்குதல்
30. ஆயுர்வேத மருந்து வகை (உலர்ந்த மருந்து, உற்பத்தி செய்யப்பட்ட மருந்து, பச்சை மூலிகைகள், எண்ணெய் வகை வழங்குதல்)
31. மருத்துவ உபகரணங்கள் வழங்குதல்
32. துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் மற்றும் சலவை செய்பவை (சவர்க்கார வகை, துப்புரவேற்பாட்டுத் திரவ வகைகள், சுத்தம் செய்யும் திரவ வகைகள், சலவை தூள் வகைகள், நறுமண வகைகள், பீலீச்சின் தூள் (குளோரின்) மற்றும் சோடா வழங்குதல்

**விடய இலக்கம் - 06**
**விவசாயம் மற்றும் பூங்கா அலங்காரப் பொருட்கள் வழங்குதல்**

33. விவசாய நடுகைப் பொருட்கள் (கன்று வகை மற்றும் விதை வகை)
34. விவசாய இரசாயன பொருட்கள் வழங்குதல் (மருந்துகள், உரம், களைநாசினிகள் - கிருமி நாசினிகள் போன்றன)
35. செயற்கை இரசாயன பூக்களினால் செய்யப்பட்ட அலங்காரப் பொருட்கள்
36. புற்றரை மற்றும் தரை அலங்காரப் பொருட்கள்
37. கொம்போஸ்ட் உரம், சாணி உரம், இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினிப் பொருட்கள்

**விடய இலக்கம் - 07**
**கைத்தொழிலுக்கான உபகரணங்கள் வழங்குதல்**

38. நீர்க்குழாய் வேலைகளுக்கான உபகரணங்கள் (பி. வி.சி. துணையுறுப்புக்கள், HDPE நீர்க் குழாய் மற்றும் துணைப்பாகங்கள், ஜீ.ஐ, டீ.ஐ/ காஸ்ட் அயன் மற்றும் பித்தளை குழாய் துணைப்பாகங்கள்)
39. வீதி விளக்குகளுக்குத் தேவையான உபகரணங்கள் (டியுப் லயிட், சோக் (மின்சார வயர்கள் சகிதம்), மேர்க்கியூரி பல்ப், சோடியம் பல்ப், ஆர்ம் சகிதம் அடி 4 – 40W டியூப் லைட் சோக் சகிதம், அடி 2 – 20W டியூப் லைட் சோக் சகிதம், மின்சார சோக் 40W வயர் சகிதம் போன்ற துணையுறுப்புக்கள்)
40. இலகு பொறியியலாளர் இயந்திரம் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்
41. அரிந்த மரங்கள் வழங்கல் (மர வகைகளைக் குறிப்பிடுதல் வேண்டும்)
42. பாதுகாப்பு உடைகள், தலைக்கவசம் மற்றும் பாதணிகள்
43. பிணைச்சல் இரும்புத்தகடுகள் வழங்குதல்
44. அலுமினியம் இரும்பு சார்ந்த உற்பத்திகள் வழங்குதல்
45. ஹியூம் குழாய்கள்/ கொங்கிறீட் தூண்கள்/ எல்லைக் கற்கள்/ சீமெந்து/ புளொக் கல்/ கொங்கிறீட் சார்ந்த உற்பத்திகள் மற்றும் கொங்கிறீட் கலவைகள்

**விடய இலக்கம் - 08**
**கட்டிடப் பொருட்கள் வழங்குதல்**

46. கட்டிட உபகரணங்கள், நிர்மாணப் பொருட்கள் மற்றும் கட்டிடப் பொருத்தும் உபகரணங்கள் வழங்குதல்
47. நிறப் பூச்சு வகைகள் வார்னிசு மற்றும் பூசுவதற்குத் தேவையான உபகரணங்கள் வழங்குதல்
48. மின்சார இணைப்பு உபகரணங்கள் வழங்கல்
49. சீலர், வூட்பினிஷ், தினர், பூச்சு வகைகள் வழங்குதல்
50. நிர்மாணத்துக்காக தேவையான இரும்பு, உருக்கு மற்றும் அலுமினியம்
51. சீமெந்து
52. செங்கற்கள்

**விடய இலக்கம் 09**
**வீதி அபிவிருத்தி மற்றும் திருத்தவேலைகளுக்குத் தேவையான பொருட்கள் வழங்குதல்**

53. கருங்கல், ஏ.பீ.சி, மெடல் மற்றும் மணல் வழங்குதல்
54. தார் மற்றும் திரவத்தார் (சீ.ஆர்.எஸ். மற்றும் சீ.எஸ்.எஸ்.) வழங்குதல்
55. வீதிக் குறியீடு பூச்சு வழங்குதல்

**விடய இலக்கம் 10**
**கண்காட்சிகளை நடாத்துவதற்கான பொருட்களை வாடகைக்கு வழங்குதல்**

56. காட்சி கூடங்கள் மற்றும் மேடைகள்
57. மின்சார அலங்கார வேலைகள்
58. கதிரை மேசை மற்றும் உற்சவப் பொருட்கள்

**விடய இலக்கம் 11**
**குப்பை போக்குவரத்து உபகரணங்கள் வழங்குதல்**

59. குப்பை போக்குவரத்து டிராக்டர் மற்றும் டிரேலர் வழங்குதல்
60. குப்பை போக்குவரத்து கைவண்டிகள் வழங்குதல்
61. குப்பை சேகரிப்பதற்காக பிளாஸ்டிக் பொருட்கள் வழங்குதல்
62. குப்பைகளை சேகரித்தல் மற்றும் போக்குவரத்து சேவை அடங்கலான துப்புரவேற்பாட்டு சேவை மற்றும் திருத்தவேலைகள்

**விடய இலக்கம் 12**
**போக்குவரத்து பிரிவுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்குதல்**

63. டயர், டியூப் மற்றும் பட்டறிகள் வழங்குதல்
64. வாகன உதிரிப்பாகங்கள் (வான், மோட்டார் சைக்கிள்கள், டிராக்டர், கல் உருளைகள் உட்பட அனைத்து வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள்)
65. தீயணைப்பு உபகரணங்கள் வழங்குதல் (பொருத்துதல் உட்பட)
66. வாகனத் திருத்தவேலைகளைச் செய்தல்
67. வாகனங்களை சேர்விஸ் செய்தல்

**விடய இலக்கம் 13**
**நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் மற்றும் பயிற்சி பெற்ற / பயிற்சி பெறாத தொழிலாளர் சேவைகளை வழங்குதல்**

- (ஒப்பந்தக்காரர்கள், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவு அடிப்படையாகக் கொள்ளப்படும்)

மேலதிக விபரங்கள் மற்றும் விளக்கங்களை மாநகர கணக்காளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி இல. (052-2222183)

**எஸ்.பி.கே. போதிமான்ன,**
**பதில் மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**நுவரெலியா.**

### 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பதாரரின் நிறுவனத்தின் பெயர்:........................................
2. விண்ணப்பதாரரின்/நிறுவனத்தின் முகவரி:........................................
3. தொலைபேசி இலக்கம் நிலையானது: ........... கையடக்கம்...........
4. மின்னஞ்சல் முகவரி: ........................................................................
5. பதிவு செய்வதற்கு உத்தேசிக்கும் விடய இலக்கம்:........................

| விடய இலக்கம் | தொடர் இலக்கத்துடன் மற்றும் பொருள் / சேவை |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

6. வழங்க இயலுமான வேறு பொருட்கள் மற்றும் சேவைகள் உள்ளதாயின் அது தொடர்பான விபரங்கள்:..................................
   ..........................................................................................
7. வியாபாரப் பதிவு இலக்கம் மற்றும் திகதி:........................................
8. பெசேவ (VAT) வரி இலக்கம்:........................................................
   (சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்)
9. பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி: ..........................................................................
   (பற்றுச்சீட்டின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்)

வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான நிபந்தனைகள் மற்றும் விதிகளின் கீழ் குறித்த பொருள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு கட்டுப்படுகிறேன் என உறுதி கூறுகிறேன்.

**கையொப்பம்:.........................................................**
**பெயர்: .........................................................**
**இறப்பர் முத்திரை:..................................................**

---

**தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்**

**பாதுகாப்பு, சுத்திகரிப்புச் சேவை மற்றும் சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கான**

## விலைமனு கோரல்

01. 2023ஆம் வருடத்தில் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள நபர்கள் / நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | சேவை விபரங்கள் | சேவை வழங்கும் இடங்கள் |
|---|---|---|
| SEC - 01 | பாதுகாப்புச் சேவை | தலைமை அலுவலகம் மற்றும் அகலவத்தை பயிற்சி நிலையம் |
| CLEE - 02 | சுத்திகரிப்புச் சேவை | தலைமை அலுவலகம், அகலவத்தை பயிற்சி நிலையம் மற்றும் தம்புள்ள பிரதேச பயிற்சி நிலையம் |
| CAN - 03 | சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல் | அகலவத்தை பயிற்சி நிலையம் |

02. ஒவ்வொரு சேவை வகைக்குமான மீளளிக்கப்படாத 2000.00 ரூபா படிவக் கட்டணத்தைச் செலுத்தி 2022-10-25ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2022-11-08ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை தலைமை அலுவலகத்தின் கணக்கிடல் பிரிவில் விலைக்கோரல் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (03 சேவைக்கும் விண்ணப்பிப்பதானால் 6000.00 ரூபாவைச் செலுத்தி 03 படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்)
03. விலைக்கோரல் படிவங்கள் இரு பிரதிகளில் வழங்கப்படும் என்பதுடன், அறிவுறுத்தல் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் அவைகளை முறையாகப் பூர்த்தி செய்து வெவ்வேறான உறைகளில் இட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு மீண்டும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் கேள்வி இலக்கத்தைக் குறிப்பிட்டு தலைவர், பெறுகைக் குழு, தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இல. 321/1, மாகும்புர, பன்னிபிட்டிய எனும் முகவரிக்கு 2022-11-10ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விலைக்கோரல் 2022-11-11ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அன்றைய தினமே பி.ப. 2.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.
04. விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் எழுத்துமூல அனுமதி வழங்கப்பட்ட அலுவலர் ஒருவர் மட்டும் கலந்துகொள்ளலாம்.
05. நேரடியாகக் கொண்டு வந்து ஒப்படைக்கும் கேள்விகளை தலைமை அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் என்பதுடன் தபாலில் அனுப்பும் கேள்விப் படிவங்களை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வி இலக்கம் மற்றும் சேவையை தெளிவாகக் குறிப்பிட்டு 2022-11-10ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.
06. எந்தவொரு கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கேள்விக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
07. மேலதிக விபரங்களை 011-3092910 மற்றும் 011-2172800 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,**
**இல. 321/1, ஹைலெவல் வீதி, மாகும்புர,**
**பன்னிபிட்டிய**

---

**சுகாதார சேவைகள் திணைக்களம்**

**போதனா வைத்தியசாலை, மஹமோதர, காலி**

## 2023ஆம் வருடத்திற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள் பிரதிநிதிகள், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளிட்ட அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மற்றும் நபர்களிடமிருந்து இவ்வைத்தியசாலையில் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அனைத்து வழங்கல்களும் காலி நகருக்கு அண்மையில் இருத்தல் விசேடமானதாகும் என்பதுடன் கொழும்பு மற்றும் தூர இடங்களானால் வழங்கல்களை இந் நிறுவனத்திற்கு கொண்டுவந்து கொடுக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதற்காக போக்குவரத்துக் கட்டணம் வழங்கப்படமாட்டாது. பின்வரும் 4(ஆ)இல் குறிப்பிடப்பட்டுள்ள வழங்கலுக்காக காலிக்கு சமீபமாகவுள்ள வழங்குநர்கள் மாத்திரம் பதிவுக்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. இதற்காக இங்கு கீழ்க் காணப்படும் மாதிரிப்படிவத்திற்கமைவான விண்ணப்பமொன்றை சுயமாகத் தயாரித்து பூர்த்தி செய்து இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘2023ஆம் வருடத்தில் வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக பதிவு செய்து கொள்ளல்’ எனக் குறிப்பிட்டு 2022.11.30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, மஹமோதர, காலி என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
03. அனைத்து விண்ணப்பதாரர்களும் மீளளிக்கப்படாத கட்டணமாக 500.00 ரூபா தொகையை ஒவ்வொரு தொகுதி மற்றும் சேவைகளுக்காக வெவ்வேறாக செலுத்துதல் வேண்டும். அதற்கான குறித்த தொகையை மஹமோதர போதனா வைத்தியசாலையின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பொது 172 பற்றுச் சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் என்பதுடன் காசோலைகள், காசுக் கட்டளைகள் அல்லது வங்கிப் பற்றுச் சீட்டு என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
04.

**(அ) வழங்க வேண்டிய பொருட்கள்**

| | |
|---|---|
| 01 அனைத்து வகையான அலுவலக உபகரணங்கள் (டோனர் வகைகள் உட்பட) | 09. மெக்கின்டொஸ் மற்றும் ரெக்சின் வழங்குதல் |
| 02. அலுவலக காதிதாதிகள் | 10. அலுமினியப் பொருட்கள் உற்பட உலோகப் பொருட்கள் |
| 03. அலுவலக தளபாடங்கள் | 11. மின்னுபகரணங்கள் |
| 04. மெத்தைகள் | 12. வாகனங்களுக்கான பற்றரிகள் |
| 05. பாய், விளக்குமாறு மற்றும் தும்பு உற்பத்திகள் | 13. டயர் மற்றும் டியூப் |
| 06. துப்புரவேற்பாட்டு பாவனைப் பொருட்களை வழங்குதல் (சவர்க்காரம், சலவைத் தூள், சுத்திகரிப்புப் பொருட்கள் உள்ளிட்டவை) | 14. சத்திரசிகிச்சை உபகரணங்கள் |
| | 15. சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள் |
| | 16. ஆய்வுகூட பாவனைப் பொருட்கள் |
| 07. பொலித்தீன் சார்ந்த உற்பத்திகள் | 17. மருத்துவ உபரகணங்கள் |
| 08. அனைத்து வகையான துணி மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் | 18. மருந்து வகைகள் மற்றும் கருவிகள் |

**(ஆ) வழங்க வேண்டிய சேவைகள்**

| | |
|---|---|
| 1. மரத்தளபாடங்கள் பழுதுபார்த்தல் | 10. கணனி மற்றும் அச்சுப்பொறிகளை சேர்விஸ் செய்தல் மற்றும் திருத்தவேலைகள் செய்தல் |
| 2. கதிரை இழைத்தல் மற்றும் குஷன் பண்ணல் | |
| 3. வெல்டிங் வேலை மற்றும் இரும்பு வேலை | |
| 4. தட்டச்சு, கூட்டல் இயந்திரம் போன்ற அலுவலக உபகரணங்கள் பழுதுபார்த்தல் | 11. மின்சார உபகரணங்களின் திருத்தவேலை கள் |
| 5. றப்பர் முத்திரை தயாரித்தல் | 12. வாகன திருத்தவேலைகள் வாகனங்களை சேர்விஸ் செய்தல் |
| 6. பொலிஷ் செய்தல் மற்றும் குறித்த சேவைகள் | |
| 7. ஊழியர் அடையாள அட்டைகளை வழங்குதல் | 13. எரிவாயு அடுப்புகளின் திருத்தவேலைகள் |
| 8. குளிர்சாதனப் பெட்டிகளின் திருத்தவேலைகள் | 14. சத்திர சிகிச்சை உபகரணங்களின் திருத்தவேலைகள் (ட்ரொலி, சக்கர நாற்காலிகள் போன்றன) |
| 9. வளிச்சீராக்கி இயந்திரத்தை சேர்விஸ் செய்தல் பராமரித்தல் மற்றும் திருத்தவேலைகள் செய்தல் | |

05. பொதுவாக பதிவு செய்து கொண்ட வழங்குநர்களிடமிருந்தே விலைகள் கோரப்படுவதுடன் வைத்தியசாலை பணிப்பாளரின் அபிப்பிராயத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட/ ஏனைய வழங்குநர்களிடமிருந்தும் விலைகள் கோரப்படலாம். கட்டளை நிபந்தனைகளுக்கமைவாக வழங்கல்கள் மற்றும் சேவைகளை வழங்கத் தவறும் வழங்குநர்களின் பதிவு எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்துச் செய்யப்படும். மேலும் 02 மாத கடன் அடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்க வேண்டும். வாகன திருத்தவேலைகள் மற்றும் சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னரே பதிவுகள் மேற்கொள்ளப்படும்.
06. விண்ணப்பங்களில் பின்வரும் விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

    01. வழங்குநரின் பெயர்:..........................................................................
    02. முகவரி:
    03. தொலைபேசி இலக்கம்:......................................................................
    04. வியாபாரத்தின் பெயர்:......................................................................
    05. வியாபார பதிவிலக்கம் மற்றும் திகதி:...................................................
    06. விண்ணப்பிக்கும் வழங்கல் மற்றும் சேவை:.............................................
        (உங்கள் நிறுவனத்தால் வழங்கப்படும் பொருட்கள், பொருள் வகை மற்றும் சேவையைத் தெளிவாகக் குறிப்பிடுங்கள்)
    07. பொருட்களுக்கான கட்டளை கிடைக்கப் பெற்றதன் பின்னர் போக்குவரத்து வசதிகள் இலவசமாக பெற்றுத் தரப்படுமா இல்லையா என்பது பற்றிக் குறிப்பிடுங்கள் ................
        ..........................................................................................
    08. பணம் செலுத்திய பற்றுச் சீட்டின் இலக்கம் மற்றும் தொகை ...............................

**திகதி:** ............................................ ..................................................
முகாமையாளரின் கையொப்பம்

**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை,**
**மஹமோதர, காலி.**

## கல்வி அமைச்சு

# கேள்விக்கான அழைப்பு

### 'A' உணவகத்திற்காக புதிய சேவை வழங்குநர் ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளல் – 2022/2023

1. கல்வி அமைச்சு சார்பாக அமைச்சு பெறுகைக் குழுவின் தலைவரால் ஒரு வருட காலத்திற்கு அமைச்சு 'A' உணவகத்தை நடத்திச் செல்வதற்கு துறையில் குறைந்த பட்சம் 03 வருட அனுபவத்துடனான தகைமை கொண்ட மற்றும் தகுதியுடைய கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
2. இச் சேவையை வழங்கும் ஒப்பந்த உடன்படிக்கையில் கையொப்பம் இட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்கு செல்லுபடியாகும் (நிபந்தனைக்கு உட்பட்டது)
3. தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் மூலம் கேள்விகள் மேற்கொள்ளப்படும்.
4. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேலதிக தகவல்களை இசுருபாய கல்வியமைச்சின் 05ஆம் மாடியில் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ள முடிவதுடன் 2022.10.21 முதல் 2022.11.10 வரை அலுவலக நாட்களில் மு.ப. 8.30 - பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. எழுத்துமூல விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து இந்த ஒரு கேள்வி ஆவணத் தொகுதியொன்றுக்கு மீளளிக்கப்படடும் ரூ. 20,000.00 கட்டணமொன்றை கல்வி அமைச்சின் செலுத்துதல் பிரிவின் காசாளருக்கு காசாக செலுத்திய பின்பு 2022.11.10 வரை ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேள்வி ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
6. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2022.11.01 மு.ப. 10.00 இற்கு கல்வி அமைச்சின் பெறுகைப் பிரிவில் நடைபெறும்.
7. கேள்விகள் 2022.11.11ம் திகதி மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**பெறுகைப் பிரிவு,**
**5ஆம் மாடி, கல்வி அமைச்சு,**
**இசுருபாய பத்தரமுல்ல**
**தொலைபேசி இலக்கம் 011 2785573**

இறகு பதிவுத் தபாலில் அல்லது பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டுவந்து உள்ளிடல் வேணடும்.

8. தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலே நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதி நேரம் முடிவடைந்தவுடன் மேற்படி முகவரியில் அவ்வேளையில் வருகை தருவதற்கு ஆர்வம் காட்டுகின்ற பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
9. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பொறியிடப்பட்ட கேள்விகள் உறையொன்றில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் 'A' உணவகத்திற்கான புதிய வழங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் 2022/2023 என்ற குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

**செயலாளர்,**
**கல்வி அமைச்சு.**

# கேள்வி அறிவித்தல்

## கைத்தொழில் அமைச்சு

## இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட்

### கொக்கிலாய் அகழ்தல் வலயத்தின் அகழ்ந்த பிரதேசங்களை மீள்நிரப்புவதற்காக வெள்ளை மணலை போக்குவரத்து செய்தல்

LMSL/SUP/DPC/14/2022(III)

கைத்தொழில் அமைச்சின் கீழுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட் நிறுவனத்தின் புல்மோட்டை பொறித்தொகுதியில் முன்தயாரிப்பு நடவடிக்கைகளுக்காக கொக்கிலாய் அகழ்தல் வலயத்தின் அகழ்ந்த பிரதேசங்களை மீள்நிரப்புவதற்காக பொறித்தொகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்படும் வெள்ளை மணலை கொக்கிலாய் பிரதேசத்திற்கு போக்குவரத்துச் செய்து அகழப்பட்ட காணிகளை மீண்டும் நிரப்பி அமைத்துக் கொள்ளல் எனும் தேவைப்பாடுகளுக்காக தகுதி வாய்ந்த நபர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. இதில் ஆர்வம் கொள்ளும் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை ராஜகிரிய, சரண மாவத்தை, 341/21ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட் வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2022-10-21ஆம் திகதி முதல் 2022-11-03ஆம் திகதி வரையில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
2. மீளளிக்கப்படாத பத்தாயிரம் ரூபாவை (ரூபா 10,000.00) ரொக்கப் பணமாக செலுத்துவதன் பேரில் 2022-10-21ஆம் திகதி முதல் 2022-11-03ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தின் வழங்கல் பிரிவில் அல்லது புல்மோட்டை பொறித்தொகுதியில் கேள்வி ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம்.
3. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை 2022-10-04ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அல்லது அவ்விடத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும் என்பதுடன் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடனடுத்து அச்சந்தர்ப்பத்தில் சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
4. உரித்துடைய ஏனைய விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் கேள்வி ஆவணங்களில் தரப்பட்டுள்ளன.

தேவையான விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்

| | |
|---|---|
| **பிரதிப் பொது முகாமையாளர் (பொ/செ) – புல்மோட்டை** | **026-2256131, 026-2256132** |
| **வழங்கல் முகாமையாளர்** | **011-2883972 (நேரடி)<br>011-2883951/2 நீடிப்பு 205** |

**தலைவர்,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட்,**
**இல. 341/21, சரண மாவத்தை,**
**ராஜகிரிய.**

## கடுவெல மாநகர சபை

### 2023 ஆண்டின் நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய வரவு செலவுத்திட்ட ஆவணம்.

கடுவெல மாநகர சபையின் 2023ஆண்டுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய வரவு செலவுத்திட்ட ஆவணம் 2022 அக்டோபர் 21ஆம் திகதியில் இருந்து 2022 குறிச்சொற்கள் 01ஆம் திகதி வரை (அரசாங்க விடுமுறை தினங்கள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர்ந்த) அலுவலக நேரங்களில் கடுவெல மாநகர சபையின் பிரதான அலுவலகத்தில் பொது மக்களின் பரிசீலனைக்காக வைக்கப்பட்டுள்ளதென 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 212(ஆ)ஆவது பிரிவின் பிரகாரம் இத்தால் அறியத்தருகின்றேன்.

**ஜி. புத்திக துஷார ஜயவிலால்**
**மாநகர முதல்வர்**
**கடுவெல மாநகர சபை**

**14 அக்டோபர் 2022**
**கடுவெல மாநகர சபை அலுவலகம்,**
**கடுவெல.**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# 2023ஆம் ஆண்டிற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்துகொள்ளல்

## வாரியபொல பிரதேச சபை

வாரியபொல பிரதேச சபைக்கு அனைத்து வகையான வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக பெறுகை முறைமையின் பிரகாரம் 2023ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக 2022.12.31 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பதிவுக் கட்டணமாக ரூபா 1,000.00 அறிவிடப்படும். இத் தொகையை காசோலை/ காசுக் கட்டளை மூலம் மாத்திரம் வாரியபொல பிரதேச சபையின் செயலாளரின் பெயரில் அனுப்புதல் வேண்டும். அனைத்து விண்ணப்பங்களும் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன், தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 2023ஆம் ஆண்டிற்கான வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**தேவையான வழங்கல்கள் :-**

1. அலுவலக உபகரணங்கள்/ தளபாடங்கள் / உருக்குத் தளபாடங்கள்
2. எழுதுகருவிகள் மற்றும் காகிதாதிகள் A4, பேனாக்கள், ஹைலைட்டர்கள் பேப்பர் கட்டர் போன்றவை.
3. மின்சார உபகரணங்கள்/ வீதி விளக்கு உபகரணங்கள் மற்றும் வீதி விளக்குப் பராமரிப்பு உபகரணங்கள்
4. கொங்கிறீட் உற்பத்திகள்
5. டயர்/ டியுப்/ கொளர் மற்றும் பெற்றரிகள்
6. வாகனங்கள்/ இயந்திராதிகளின் உதிரிப்பாகங்கள் மற்றும் துணை உறுப்புக்கள்
7. கணனி மற்றும் கணனி துணை உறுப்புக்கள் (லெப்டொப்)
8. இலெக்ட்ரோனிக் தட்டச்சுக்கள்/ தட்டச்சுப் பொறிகள்/ நிழற்பிரதி இயந்திரங்கள்/ தொலைநகல் இயந்திரங்கள்/ ரோணியோ இயந்திரங்கள் டுப்ளோ மெசின்கள், மை வகைகள்.
9. விளையாட்டுப் பண்டங்கள்
10. சீருடைகள்/ பாதணிகள்/ திரைச் சேலைகள்
11. நூலகப் புத்தகங்கள்/ சஞ்சிகைகள்/ செய்தித்தாள்கள்
12. கல்/ மணல்/ சரளைக்கற்கள்/ ABC கலவை/ கல்தூள்/ நிலக்கல்/ தார் மற்றும் ஏனைய வீதி நிர்மாணிப்புப் பதார்த்தங்கள்.
13. சீமெந்து/ இரும்பு உட்பட கட்டிடப் பொருட்கள் மற்றும் சீமெந்து உற்பத்திகள்.
14. முன்பள்ளி/ விளையாட்டு உபகரணங்கள்/ சிறுவர் பாதுகாப்பு நிலையங்களிற்கான உபகரணங்கள்/ உணவு வகைகள்/ விளையாட்டுப் பொருட்கள்
15. அறிவித்தல் பலகைகள்/ கட்டவுட்/ பதாகைகள்/ ஸ்டிக்கர்கள்/ பெயர்ப்பலகைகள், உத்தியோக அடையாள அட்டைகள்
16. கூட்டுமாறுகள்/ தும்புத்தடிகள்/ தூரிகைகள்/ கூடைகள்/ காற்றுடைப்பான்கள்/ வைப்பர்கள்/ மொப்கள்/ லைசோல்/ கைகழுவும் திரவம்/ சவர்க்காரம் உட்பட சுகாதார உபகரணங்கள்.
17. செடி வகைகள்/ பசளை/ எண்ணெய் உட்பட பூங்கா அலங்கரிப்புக்குத் தேவையானவை.
18. பாடசாலைப் புத்தகங்கள்/ பாடசாலைப் பைகள்/ பிளாஸ்டிக் நீர்ப்போத்தல்கள்/ உணவுப் பெட்டிகள் பிளாஸ்டிக் கூடைகள் உட்பட பிளாஸ்டிக் உபகரணங்கள் மற்றும் மட்பாண்டங்கள்.
19. உள்ளகத் தொலைபேசி தொகுதி
20. சுத்திகள்/ மண்வெட்டிகள்/ வீச்சுக்கத்திகள்/ புல் வெட்டும் பொறிகள்/ வீதி அபிவிருத்தி மற்றும் நிர்மாணங்களிற்குத் தேவையான உபகரணங்கள்.
21. எல்பி கேஸ் (GAS)
22. வடிகட்டிய குடிநீர் (போத்தல்களில் அடைக்கப்பட்டவை மற்றும் அடைக்கப்படாதவை)

**23 சேவைகளை வழங்கல்**

23.1 அச்சு சேவைகளை வழங்கல்
23.2 மொழி பெயர்ப்பு சேவைகளை வழங்கல்
23.3 வாகனங்கள், இயந்திராதிகள் மற்றும் உபகரணங்களைப் புதுப்பித்தல்
23.4 கணனி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைப் புதுப்பித்தல்.
23.5 நிழற்பிரதியிடும் பொறிகள்/ தொலைநகல் இயந்திரங்கள்/ தட்டச்சு இயந்திரங்கள்/ ரோணியோ இயந்திரங்கள்/ டுப்ளோ இயந்திரங்களைப் புதுப்பித்தல்.
23.6 வாகனங்கள் இயந்திராதிகள்/ வீதி அபிவிருத்திப் பணிகளில் பயன்படுத்தப்படும் கனரக வாகனங்கள் மற்றும் உபகரணங்கள்/ நிர்மாணத்துறைகளில் பயன்படுத்தப்படும் இயந்திராதிகள் உபகரணங்கள்/ நீர்ப்பம்பிகளை வாடகைக்கு வழங்கல்.
23.7 பயிற்றப்பட்ட தொழிலாளர்களை வழங்கல் (தச்சு/ மேசன்/ தொழில்நுட்பம்/ வெல்டின்)

**24 புதுப்பித்தல்கள்**

24.1 டயர் மீள் நிரப்பல்
24.2 உள்ளகத் தொலைபேசித் தொகுதிகளைப் புதுப்பித்தல்
24.3 வளிச் சீராக்கி இயந்திரங்களைப் புதுப்பித்தல்
24.4 கட்டிடங்களைப் புதுப்பித்தல்
24.5 வீதிப்பராமரிப்பு உபகரணங்கள்/ கனரக மற்றும் இலகுரக வாகனங்கள்/ இயந்திராதிகளைப் புதுப்பித்தல்.
24.6 மின் தூக்கிகள்/ மின்சார உபகரணங்கள்/ அலுவலக உபகரணங்கள்/ தளபாடங்கள்/ நீர்க்குழாய்த் தொகுதிகள்/ கணனிகள்/ CCTV கெமராக்களைப் புதுப்பித்தல்.

25. பிரதேச சபையின் சிதைவுற்ற பதார்த்தங்கள் மற்றும் செய்தித்தாள்களைக் கொள்வனவு செய்தல்.

### 2023ஆம் ஆண்டிற்கான ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

வாரியபொல பிரதேச சபை அதிகாரப்பிரிவில் நடைமுறைப்படுத்தப்படும் நிர்மாணத்துறைப்பராமரிப்பு மற்றும் சேவைகளின் பெறுமானம் 10 மில் ரூபாவிற்கு மேற்படாத விடத்து, அவை வரையறுக்கப்பட்ட பெறுகை செயன்முறையை அனுசரித்து செயற்றிட்டத்தை மேற்கொள்வதற்காகப் பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2023ஆம் ஆண்டிற்காகப் பதிவு செய்து கொள்வதற்காக 2022.12.31 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். ரூபா 1,000.00 இற்கான தொகையைச் செலுத்தி பிரதேச சபையின் அலுவலகத்தில் இதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தேவையான தகைமைகள் :**

- ➢ CIDA நிறுவனத்தின் C9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுச் சான்றிதழ் அல்லது
- ➢ வயம்ப பொறியியல் திணைக்களத்தில் பதிவுச் சான்றிதழ்
- ➢ (வயம்ப) வட மேல் மாகாணத்தில் அல்லது ஒப்பந்தக்காரரொருவராக பதிவு செய்யப்பெற்றுள்ள நிறுவனமொன்று, அங்கீகாரம் பெற்றுள்ள சங்கமொன்று அல்லது நபரொருவராக இருத்தல்.

**டீ.எம். அநுர சுதர்சன,**
**பதில் தலைவர், பிரதேச சபை,**
**வாரியபொல.**

2022.10.18
**வாரியபொல பிரதேச சபை அலுவலகத்தில்**

The Housewives' companion
Classifieds on
Daily News

# பிஸ்கல் ஏலவிற்பனை

## பெறுமதி மிக்க காணி பகிரங்க ஏல விற்பனை செய்தல்

## மாத்தறை மாவட்ட நீதிமன்றம்

வழக்கிலக்கம் : 3068 /MB

மக்கள் வங்கி, இலக்கம் 75.
சிரிமத் சித்தம்பலம் ஏ கார்ட்னர் மாவத்தை,
கொழும்பு - 02.

வழக்காளர்கள்

எதிராளி மலவ் ஆரச்சிகே விஸேகர மற்றும்
வேறு சிலர்
வீரகிரி, ரத்மலே, மாத்தறை.

வருடம் 2018 நொவம்பர் மாதம் 01 ஆந் திகதி மேலே குறிப்பிட்ட இலக்கமுடைய வழக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கும் முழு தீர்ப்பின் பிரகாரம் ரூ.1,246,510,00 (ரூபா பன்னிரண்டு இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து ஐநூற்றி பத்து) பணம் 2018.12.25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு ரூ. 2.500,000.00 (ரூபா இருபத்தைந்து லட்சம்) பணமும் 2019 - 09 - 25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு முதலாம் எதிராளி ஒன்றிணைந்து/ அல்லது வெவ்வேறாக தீர்ப்பில் குறிடப்பட்டுள்ள கட்டளைப்படி வழக்காளிகளுக்கு கொடுப்பனவு செய்ய வேண்டுமென தீர்ப்பளித்திருப்பதால் அந்தத் தீர்ப்பின் படி குறிப்பிட்ட பணத்தொகை செலுத்துவதற்கு எதிராளிகளால் முடியாமல் போனாலோ, தவறினாலோ இப்பணத்தை அறவிடுவதற்காக தீர்பின் பிரகாரம் மாத்தறை மாவட்ட நீதிமன்றம் பிஸ்கல் அவர்களால் நீதிமன்றம் மூலம் கைப்பற்றிய கீழே குறிப்பிட்டுள்ள காணியானது.

**அளவு - றூட் 02 (ஏக்கர்: 00 றூட்: 02 பர்ச்சஸ் 00)**

அளவுடைய முழுக்காணியும் அதில் அமைந்துள்ள கட்டடங்கள், மரம் மட்டைகள், பழங்கள் உட்பட மற்றும் அனைத்தும் ஆகும்.

நீதிமன்றத்தால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரப் பத்திரத்தின் பிரகாரம்

................................ சொத்து அமைந்திருக்கும் இடத்திலேயே பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்

**கொடுப்பனவு செய்யும் முறை :**

விலை நிர்ணயம் செய்யப்பட்ட பின் உடனடியாக வெற்றிபெற்ற கொள்வனவாளரால் ஏல விற்பனை (முடிவில் கீழ் குறிப்பிடும் முழுப் பணமும் பணத்தினாலேயே செலுத்தப்பட வேண்டும்.

1. கொள்வனவு விலையில் 25% (நூற்றுக்கு இருபத்தைந்து)
2. ஏலவிற்பனைச் செலவுகளும் ஏனைய கொடுப்பனவுகள் செய்திருப்பின் அவையும்
3. மேலும் கொள்வனவாளரால் கொள்வனவு பணம் ரூ. 7500.00 க்கும் கூடும் போது ரூ.150.00 பணமும். ரூ.7500,00 கூடும் போது எல்லாமாக ரூபா.10000.00 க்கும் ரூபா 5.00 வீதமும் கொடுப்பணவு செய்ய வேண்டும்
4. மாகாண வரிகள் செலுத்த வேண்டுமாக இருந்தால் அவையும்

கொள்வனவு விலையில் 75% இறுதி ஏல விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் மாத்தறை மாவட்ட நீதிமன்றத்திற்கு வழக்கு இலக்கம் 3068 /MB வழக்கு இலக்கத்திற்கு மாத்தறை மாவட்ட நீதிமன்றத்துக்கு வைப்புச் செய்தல் வேண்டும்.

மேலே குறிப்பிட்டதன் படி 30 நாட்களுக்குள் மேலே குறிப்பிட்ட 75% பணம் கட்ட முடியவில்லையானால் ஏற்கனவே செலுத்தியிருக்கும் விற்பனை பணத்தில் இருந்து 25% பணம் மற்றும் அற்றைய பணங்களும் செலுத்தப்பட மாட்டாது. மேலும் சொத்தை மீண்டும் ஏல விற்பனை செய்யவும் ஏற்பாடு செய்வார்கள்.

**சொத்திற்கு பிரவேசித்தல் :-**

மாத்தறை தங்காலை வீதி கிலோமீட்டர் 15 க்குள் இருக்கும் ஹன்னதெனிய சந்தியில் இருந்து இடத்தில் இருக்கும் ரத்தமலே வீதி கிலோ மீட்டர் 01 வரை பயணம் செய்யும் போது சந்திக்கும் வலதிற்கு இருக்கும் தலஹிடியகொட வீதி மேலும் கிலோமீட்டர் 01 வரை செல்லும் போது மாத்தறை பெலிஅத்த ரயில் வீதிக்கு மிகக்கிட்டிய இடத்தில் இருக்கும் வீதி மீட்டர் 15 க்கு வரை தூ ரத்தில் (பபரந்த ரயில் நிலைய அருகில் இக்காணி அமைந்துள்ளது.

நீதிமன்ற உத்தரவின் படி முன்கூட்டிய அறிவித்தலின்றி ஏல விற்பனையை நிறுத்துவதற்கும், இரத்துச் செய்வதற்கும் மற்றும் காலம் தாழ்த்துவதற்கும் முடியும்.

**மேலே குறிப்பிட்ட அட்டவணை.**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெல்லபட பத்துவே, திக்வெல்லை பிரதேச செயலாளர் பிரிவு, திக்வெல்லை பிரதேச சபை எல்லைக்குள் இலக்கம் 450 C என்ற இரத்மலே கிராம சேவகர் பிரிவு, பபருந்தே தபயன்கொட பங்குவ கிராமத்தில் அமைந்துள்ள மெதகொடகே கெதரவத்தை அல்லது, தலஹிடியாகொட வத்தை மற்றும் வெலிபொத வத்தை என்ற ஒன்றிணைந்த காணிக்கு வேறாக்கப்பட்ட இலக்கம் : 02 என்ற காணித்துண்டிற்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் பீ. எம். பி. நிஹால் ஸில்வா என்பவரால் அளந்து தயாரித்த 2010 - 04 - 10 ஆந் திகதிய 011/10 என்ற வரைபடத்தின் பிரகாரம் அளந்து வேறாக்கிய இலக்கம் 02 ஏ என்ற காணித் துண்டிற்கு அதன் வரைபடத்தின் பிரகாரம் எல்லைகள்:

| | |
|---|---|
| வடக்கிற்கு : | பொல்கொரடுவை மற்றும் இக் காணியின் இலக்கம் 01 என்ற துண்டும் |
| கிழக்கிற்கு : | இக்காணியின் இலக்கம் 01 என்ற துண்டு மற்றும் 2 C என்ற வீதியும், |
| தெற்கிற்கு : | இக்காணியின் இலக்கம் 03, 02 C(வீதி) மற்றும் 2 B என்ற துண்டும் |
| மேற்கிற்கு : | தெல்கஹவத்தையும், இதன் எல்லைகளாகும். |

றூட் 02 பர்ச்சஸ் ஏழு தசம் மூன்று எட்டு (ஏக்.00 றூட்:02 பர்ச்சஸ்:7.38)

இந்த நான்கு எல்லைகளுக்குள்ளும் அமைந்துள்ள மரம் மட்டைகள் கட்டடங்கள் உட்பட மற்றும் அனைத்தும் ஆகும்.

இக் காணி இலக்கம் 2 C என்ற துண்டிற்கு செல்வதற்கு வீதி அதிகாரம் உண்டு.

இக்காணி மாத்தறை மாவட்ட காணிப்பதிவகத்தில் G22/109 கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெல்லபட பத்துவே, திக்வெல்லை பிரதேச செயலாளர் பிரிவின் திக்வெல்லை பிரதேச சபை எல்லைக்குள் இலக்கம் 450 C என்ற ரத்மலே கிராம சேவகர் பிரிவு, பபருந்தே தபயன்கொட பங்குவ கிராமத்தில் அமைந்துள்ள மெதகொடகே கெதரவத்தை அல்லது, தலஹிடியாகொட வத்தை மற்றும் வெலிபொத வத்தை என்ற ஒன்றிணைக்கப்பட்ட காணி வேறாக்கிய இலக்கம் : 02 என்ற காணித்துண்டிற்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் பி. எம். பி. நிஹால் ஸில்வா என்பவரால் அளந்து தயாரித்த 2010 - 04 - 10 ஆந் திகதிய 011/10 என்ற வரைபடத்தின் பிரகாரம் அளந்து வேறாக்கிய இலக்கம் 02 B என்ற காணித் துண்டிற்கான எல்லைகள்:

| | |
|---|---|
| வடக்கிற்கு : | இக் காணி 2 A மற்றும் 2 C (வீதி) என்ற துண்டும். |
| கிழக்கிற்கு : | இக்காணி 2 C என்ற காணி துண்டிற்கு (வீதி) மற்றும் பதீகமயில் நெலும் வெவயும் உள்ள வீதியும் |
| தெற்கிற்கு : | பதீகமயில் இருந்து நெலும் வெவக்கி வீதி மற்றும் தங்கஹவத்தையும், தங்கஹவத்தையும் மற்றும் ஓடேகெவத்தை யும் இதன் எல்லைகளாகும். |
| மேற்கிற்கு : | இந்த நான்கு எல்லைகளுக்குள்ளும் றூட் 02 (ஏக்கர் 00 றூட் 02 பர். 00) விசாலம் கொண்ட இக்காணியும் அதில் அமைந்துள்ள கட்டடங்கள் மரம் மட்டைகள் உட்பட மற்றும் அனைத்தும் ஆகும். |

இக் காணி மாத்தறை மாவட்ட காணிப்பதிவகத்தில் B642/265 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பிஸ்கல் பதிவாளர்.**
**நீதிமன்ற ஆணையின் படி**
**மாவட்ட நீதிமன்றம், மாத்தறை.**

# மாவத்தகம பிரதேச சபை

## 2023ஆம் ஆண்டிற்கான வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

01. மாவத்தகம பிரதேச சபைக்கு 2023ஆம் ஆண்டிற்கான கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் முகமாக பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட தொண்டர் நிறுவனங்கள் மற்றும் சங்கங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. வழங்கல், சேவைகள் மற்றும் ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்து கொள்வதற்கு விரும்புபவர்கள் குறித்த சகல விபரங்களும் அடங்கியதாக தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் மூலம் அந்தந்த விடயங்களுக்காக வேறு வேறாக விண்ணப்பித்தல் வேண்டும்.

03. ஒரு விடயத்திற்கான பதிவுக் கட்டணம் 1000.00 ரூபா செலுத்துதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல் 2022.12.15ஆம் திகதி பி. ப. 3.00 மணிக்கு முடிவுறும். சமர்ப்பிக்கும் சகல விண்ணப்பங்களுடனும் குறித்த கட்டணத்தை செலுத்துதல் வேண்டும். காசோலை/ காசுக்கட்டணை மூலமும் கட்டணங்களை செலுத்தலாம் என்பதுடன் அதை 'செயலாளர் மாவத்தகம பிரதேச சபை' எனும் பெயரில் எழுதி அனுப்புதல் வேண்டும்.

04. சகல விண்ணப்பங்களுடனும் வியாபாரப் பதிவு, வங்கிக் கணக்குகள் அனுபவம் போன்றவை உறுதி செய்தலுக்கு தேவையான ஆவணங்களின் புகைப்படப் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும். நிர்மாணத்திற்கான ஒப்பந்தக்காரர்கள் மேற்படி கடிதங்களுக்கு மேலதிகமாக தமது சொத்து சான்றிதழை பிரதேச செயலாளர் மூலம் உறுதி செய்து சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் வெற்றிகரமான ஒப்பந்தக்காரர் என்பதை உறுதி செய்வதற்காக எழுத்துமூல சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும். (ICTAD) பதிவு இருப்பின் சொத்துச் சான்றிதழ் அவசியமில்லை.

05. ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்யும் போது பின்வரும் சேவைக் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| **C9** | ரூபா | 2000.00 |
| **C8** | ரூபா | 2500.00 |
| **C7** | ரூபா | 3000.00 |
| **C6** | ரூபா | 3500.00 |
| **C5** | ரூபா | 5000.00 |

### பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல்

01. அலுவலக காகிதாதிகள் வழங்குதல்
02. அலுவலக அச்சக வேலைகள் (அச்சடித்த புத்தகங்கள்)
03. அலுவலக உபகரணங்கள் மற்றும் மரத்தளபாடங்கள் (மரம், உருக்கு/பிளாஸ்டிக்)
04. மின்சார பொருட்கள் மற்றும் உபகரணங்கள் (வீதி விளக்கு பராமரிப்பு மற்றும் அலுவலக கட்டிடங்கள்)
05. தட்டச்சு, ரோணியோ, புகைப்படப் பிரதி, கணனி இயந்திர திருத்தவேலைகள்
06. சுகாதார உபகரணங்கள்
07. டிராக்டர், மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்
08. கட்டிடப் பொருட்கள் வழங்குதல் (ஆற்று மணல், கருங்கல், செங்கல், சரளை கற்கள், சீமெந்து, இரும்பு, சீமெந்து சார்ந்த உற்பத்திகள்)
09. ஆதனங்களை மதிப்பீடு செய்தல்
10. இறப்பர் முத்திரைகள் வழங்குதல்
11. தகடு வகைகள் வழங்குதல்
12. நினைவுப்படிகம் வழங்குதல்
13. திரைச்சீலைகளைத் தைத்து பொருத்திக் கொடுத்தல்
14. வாகனங்களை வாடகை அடிப்படையில் வழங்கும் சேவைகள் (டிரக்டர், வேன், கார், பஸ், முச்சக்கரவண்டி)
15. உருக்கியொட்டும் மற்றும் வார்ப்பு வேலைகள் (இரும்பு சார்ந்த நிர்மாணம் உட்பட)
16. மனிதவலு (பயிற்சி/ பயிற்சிபெறாத) மேசன், தச்சு வேலை, நிறப்பூச்சு பூசுதல்)
17. பிரசார நடவடிக்கைகள் (பதாகைகள்/ பெயர்ப்பலகை)
18. கனரக வேலைகளுக்கான இயந்திரங்கள் வழங்குதல் (பெகோ/ டோசர்/ வீடு மட்டப்படுத்தும் உபகரணம், மோட்டர் கிரேடர், D4 D8 டோசர் போன்றன)
19. மரம் வெட்டுதல் மற்றும் அப்புறப்படுத்துதல்
20. மேடை உட்பட பரிசுப் பொருட்கள் வழங்குதல்
21. மின் பிறப்பாக்கி இயந்திரம் வாடகைக்கு வழங்குதல்
22. தகனச்சாலை பராமரிப்பு வேலைகள், சேவைகள் வழங்குதல்
23. சட்ட அறிவுரை சேவை வழங்குதல்
24. பட்டய கட்டிடக் கலை நிர்மாண வரைபடம் மற்றும் சேவைகள்
25. பட்டய பொறியியல் ஆலோசனை சேவை
26. பதிவு செய்த பட்டய/நில அளவையாளர் சேவை
27. மின் பொறியியல் சேவை
28. நீர் வழங்கல் வடிகாலமைப்பு பொறியியல் வரைபட சேவை
29. தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு சேவைகள்
30. வளிச்சீராக்கி முறைமை அமைப்பு சேவைகள்
31. பூந்தோட்ட அலங்கார சேவை
32. உள்ளக வீட்டு நிர்மாண அலங்கார சேவைகள்
33. கணனி மற்றும் வலையமைப்பு பொறியியல் சேவைகள்
34. ஒலி கட்டுப்பாட்டு தொழில்நுட்ப சேவை
35. ஆளுமை மேம்பாடு, கல்வி மற்றும் ஆன்மீக ஆலோசனை சேவை
36. புகைப்படம் எடுத்தல், வீடியோ எடுத்தல் மற்றும் உரையாடல் தொகுப்பு
37. பத்திரிகை விளம்பரங்களைப் பிரசுரிக்கும் முகவர்கள்
38. சீருடைக்கான துணிகள், பாதணி, பூட்ஸ், மழை அங்கி வழங்குதல்
39. வாகனம் சேர்விஸ் செய்தல் மற்றும் எலைன்மன்ட் செய்தல், தொழில்நுட்ப சேவை மற்றும் திருத்தவேலைகள், சேர்விஸ் செய்தல்
40. உற்சவங்களுக்கான மற்றும் சபைக்கு தேவையான வேளைகளில் உணவு வழங்குதல்
41. வாகனங்களின் மின் முறைமை திருத்தவேலைகள்
42. அபிவிருத்தி திட்ட அறிக்கை தயாரித்தல்
43. அலங்கார மலர் வகைகள் மற்றும் விவசாய கன்றுகள் வழங்குதல்
44. விளையாட்டுத்துறை பொருட்கள் வழங்குதல்
45. பிளாஸ்டிக் உற்பத்தி வழங்குதல் (கதிரை/ராக்கை/ கூடைகள்)
46. ஒப்பந்த சேவை வழங்குதல் (திட்டங்கள் தயாரித்தல்) (2000001 இலட்சம் ரூபா முதல் ICTAD 10 சான்றிதழ் இருத்தல் வேண்டும்)
47. சிகிச்சையகத்திற்கான மருந்து, மூக்குக் கண்ணாடி, தேவையான உபகரணங்களை வழங்குதல்
48. சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாட்டு பொருட்களை வழங்குதல்
49. சிறுவர் பூங்கா உபகரணங்கள் வழங்குதல்
50. பொது மலசலகூட பராமரிப்பு நடவடிக்கைகள்
51. கிணறு திருத்தவேலைகள்
52. சமையலறை உபகரணங்கள்
53. மொழிபெயர்ப்பு (ஆங்கிலம்/தமிழ்)

**அனுர கமல் பெரேரா,**
**தலைவர்,**
**மாவத்தகம பிரதேச சபை,**

NSB National Savings Bank

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**கேள்வி இல.: NSB/PT/ITE/2022/28**

### தேசிய சேமிப்பு வங்கியின் 24 அமைவிடங்களுக்கு CCTV முகாமைத்துவமிடப்பட்ட சேவையை வழங்கல்

CCTV முகாமைத்துவமிடப்பட்ட சேவையை வழங்குவதற்காக புகழ்வாய்ந்த முதன்மையான தயாரிப்பாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற இலங்கையிலுள்ள உள்ளூர் முகவர்கள் ஆகியோரிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| **பெறுகையின் விளக்கம்** | தேசிய சேமிப்பு வங்கியின் 24 அமைவிடங்களுக்கான **CCTV** சேவையை வழங்கல் |
| **பெறுகையின் முறைமை** | தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் |
| **ஏற்புடையதான மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்** | 8,000 ரூபா |
| **சமர்ப்பிக்க வேண்டிய விலைமனு உத்தரவாத பெறுமதி** | 216,000 ரூபா |
| **விலைமனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம்** | 2022.11.15 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |
| **கேள்வியை மூடும் திகதி மற்றும் நேரம்** | 2022.11.16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |

1. முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது எந்தவொரு கேள்விதாரருக்கு அல்லது பெயர்குறிப்பிட்டவருக்காக அல்லது அவரின் சார்பாக செயற்படுபவர் கேள்விக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னராகவும் கேள்வியை வழங்கிய பின்னரும் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்வது கட்டாயமானதொன்றாகும்.
2. கொழும்பு-03, காலி வீதி, 255 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். படிவங்கள் 2022.10.21 ஆம் திகதியிலிருந்து 2022.11.15 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றின் மூலமாக படிவங்கள் வழங்கப்படும்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் தேசிய சேமிப்பு வங்கியினால் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் மேலே சுட்டிக் காட்டியவாறு கேள்விக்கு உரித்தான பெறுமதிக்கான வங்கி உத்தரவாதம்/ விலைமனு பிணையத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமெனவும் இந்த உத்தரவாதமானது வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதாகவும் ஆகக் குறைந்த கால எல்லையாகிய 105 நாட்காட்டி நாட்களுக்கு கேள்வியை திறக்கும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் குறிப்பிட்டுள்ள திகதியன்று மு.ப. 10 மணிக்கு அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன் மு.ப. 10 மணிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
5. தேசிய சேமிப்பு வங்கியானது எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்குமான உரிமையையும் விலைமனுவொன்றின் பகுதியொன்றையும் எந்தவொரு காரணங்களையும் முன்வைக்காமல் ஏற்றுக் கொள்வதற்குமான உரிமையை கொண்டுள்ளது.

மேலதிக விபரங்களை வழங்கலுக்கான சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர் - கூட்டுரு பெறுகைக் குழு – உயர்மட்டம்,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல.: 255, காலி வீதி,**
**கொழும்பு-03.**

# களுத்துறை நகரசபை

